83

ஆனந்தஸாகர்

அல்லது

பந்தயத்தின் முடிவு

வை. மு. கோதைநாயகி அம்மாள்

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய நாவல்கள்

	ரூ.	அ.
1925		
1. வைதேகி	2	8
1926		
2. பத்மசுந்தரன்	2	8
1927		
3. சண்பகவிஜயம்	1	12
4. ராதாமணி	2	8
1928		
5. கௌரீமுகுந்தன்	1	12
6. நவநீதகிருஷ்ணன்	2	0
1929		
7. கோபாலரத்னம்	0	14
8. மாதவமணி	0	3
9. சாருலோசனா	2	8
1930		
10. சுகந்தபுஷ்பம்	1	0
11. வீரவஸந்தா	0	8
12. சாமளநாதன்	2	0
13. ருக்மிணீகாந்தன்	2	0
1931		
14. ஸாரமதி	1	12
15. நளினசேகரன்	0	8
1932		
16. பரிமளகேசவன்	1	4
17. மூன்று வைரங்கள்	0	8
18. உத்தமசீலன்	1	4
19. கதம்பமாலை	0	12
1933		
20. காதலின் கனி	2	8
21. சோதனையின் கொடுமை	1	8
22. படாடோபத்தின் பரிபவம்	0	8

	ரூ.	அ.
1934		
23. தியாகக் கொடி	2	0
24. ஜெயஸஞ்சீவி	0	4
25. பக்ஷமாலிகா	0	6
26. புத்தியே புதையல்	0	14
1935		
27. மங்களபாரதி	2	0
28. பட்டமோ பட்டம்	0	10
29. சுகுணபூஷணம்	0	4
30. பிச்சைக்காரக்குடும்பம்	0	8
31. ஆனந்தஸாகர்	0	8
32. அம்ருததாரா	0	4
1936		
33. இன்பஜோதி	1	4
34. ராஜமோஹன்	1	4
35. அனாதைப் பெண்	1	4
36. ப்ரேமப்ரபா	0	8
1937		
37. அன்பின் சிகரம்	0	4
38. சாந்தகுமாரி	1	0
39. மாயப்ரபஞ்சம்	1	0
40. சந்திரமண்டலம்	1	0
1938		
41. வாழ்க்கையின் நாதம்	1	4
42. உளுத்த இதயம்	0	4
43. மகிழ்ச்சி உதயம்	0	10
44. ஜீவியச் சுழல்	1	4
45. மாலதி	0	8
46. வத்ஸகுமார்	0	8
1939		
47. கஸ்தூரீதிலகம்	1	4
48. கானல் நீர்	1	4
49. படகோட்டி	0	8

“ ஜகன்மோகினி ” ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

2892

ஆனந்தஸாகர்

அல்லது

பந்தயத்தின் முடிவு

REGISTRAR OF BOOKS
2 - OCT 1940
MADRAS

இரண்டாம் பதிப்பு

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய

31-வது நாவல்

" ஜகன்மோகினி " ஆபீஸ்,

26, தேரடித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்.] [விலை அணா 8.

பொருளடக்கம்

—:o:—

அதிகாரம். பக்கம்.

1.	பகரோணு சீற்றம்—பழங்கதைத் தோற்றம் ...	1
2.	தியாகியின் விஜயம்—சாகரனின் குழப்பம் ...	12
3.	வாழாவெட்டி	17
4.	பத்திரிகை உரைகள்—தத்தளித்த நிலைமை ...	36
5.	வாத்ஸல்யம்—அதியாச்சரியம் ...	42
6.	முருகனிடம் பக்தி—சிறுகதைப் பித்து ...	53
7.	மகாத்மா தரிசனம்—மனம் மாறும் அதிசயம் ...	62
8.	தீரம் வீரம் மாறிய சாரம்	88
9.	இல்லற இன்பம்—நல்லற வாழ்க்கை ...	97

ஸ்ரீ

ஆனந்தஸாகர்

அல்லது

பந்தயத்தின் முடிவு

அதிகாரம் 1

பகரோனு சீற்றம்—பழங்கதைத் தோற்றம்

"உலகத்தில் ஒவ்வொருவரும் தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று ஸ்தாபித்துப் பேசுவது தான் மனித சுபாவத்திற்கு முக்கியமான பிடிவாதமாகும். அம்மாதிரி பிடிவாதம் செய்யும் ஒவ்வொருவரும் தாம் செய்வது சரியானதா, வேண்டுமென்று செய்வதா என்பதைத் தம் மனத்திற்குள் அறியாதிருக்க முடியாது. அறிந்துதான் வீண் ஜம்பத்திற்குப் போராடுவதும் உண்டு. சாகர்! நீயும் அம்மாதிரி கோஷ்டியில் சேர்ந்துதான் மூர்க்கமாகப்பேசுகிருய் என்று நினைக்கிறேன். இந்த வீண் உபயோகமற்ற பிடிவாதத்தை விட்டுவிடு" என்று ஓர் இளம் வாலிபன் தன் நண்பன் சாகரனை நோக்கி நகைத்துக் கொண்டே சொன்னுன்.

இதைக் கேட்ட சாகரன் முகத்தைச் சுளித்துக்கொண்டே "ஏதேது சிவானந்தம்! என்னேடு தினம் தர்க்கம் செய்வதுதான் உன் காரியமாக எண்ணியிருக்கிருயோ! நீ எத்தனைதான் சொன்ன போதிலும் என்னுடைய அபிப்பிராயத்தை மாற்றவே முடியாது. பெண்களாவது, மண்களாவது...சீச்சீ! பெண் என்கிற வார்த்தையையே விட்டுவிடு. பெண்கள் என்ற சப்தம் காதில் விழுந்தால்

நாராசம்போலிருக்கிறது. நண்பா! இந்த விஷயத்தில் நீ என்னோடு வீண் வாதம் செய்வதில் உபயோகமில்லை" என்று முடுக்காகக் கூறினன்.

சிவா:—சாகர்! நீ சொல்வது வெகு அழகாயிருக்கிறது. பெண்களென்றுலே நாராசம்போல விருக்கிறதா! அப்படியானல் பெண்களே இவ்வுலகத்திற்கு அவசியமற்ற கட்டைகள் என்பது உன்னுடைய அபிப்பிராயமா! ஏனப்பா! நீ உன் தாயாகிய முதல் தெய்வத்தின் மூலம் இம் மண்ணுலகத்திற்கு வந்தாயா அல்லது ஆகாயத்திலிருந்து இறங்கிவிட்டாயா?...போடா! இவ்விஷயத்தில் நீ சுத்த மூடம். முட்டாள் என்றுதான் நான் நிச்சயமாகக் கூறுவேன். உலகத்தில் பெண்கள் இல்லாவிட்டால் உலகமேது? பெண்களாலன்றோ உலகம் பிரகாசிக்கின்றது; மக்கள் விருத்தி ஏற்படுகின்றது. ரமணீயமான சிங்காரத் தோற்றம் உண்டாகின்றது. பெண்களில்லா வீடு பாழடைந்த காடல்லவா!

சாகர்:—ஓஹோ! அப்படியானல் என் வீடு காடுபோலவா இருக்கின்றது. வீடாகத் தோன்றவில்லையா?

சிவா:—சந்தேகமில்லாது உன் வீடு காடுதான். நீ எத்தனைதான் வீண் பறை சாற்றினலும் பார்ப்பவர்களுக்குக் கண் இல்லையா? ஹ்ருதயமில்லையா? மூளையில்லையா? நீ ஏதோ பயித்தியக்காரன்போல இவ் விஷயத்தில் தப்பபிப்ராயத்துடன் பிதற்றுகிருய்! சாக்ஷாத் எம்பெருமான்களெல்லாம் பெண்களுக்கு எத்தகைய ஸ்தானத்தைக் கொடுத்து நமக்குச் சிறப்பித்துக் காட்டியிருக்கிரூர்கள் பாரு.

ஸ்ரீமகாவிஷ்ணுவோ, தன்னருமைக் காதலி லக்ஷ்மியைத் தனது இருதய கமலமாகிய மார்பகத்திலேயே வைத்து மகிழ்கிருர். சிவபெருமானே சக்தி தேவியாகிய தன் மனைவிக்கு, தனது ஒரு பாகத்தையே இருப்பிடமாகக் கொடுத்து, அதில் வீற்றிருக்கச் செய்து பரமானந்தம் அடைகிருர். கல்வியின் வித்தாகிய சரஸ்வதியை, சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமன், தனது நாவிலேயே வைத்துக் களிக்கின்ருர். இம் மூவரின் ஆதாரம் ஒன்றே போதாதா!

இன்னும் வேண்டுமானல் பாரு. உயர்ந்த மகிமை பொருந்திய யாவும் பெண்கள்தாம் என்பதற்கு ஆதாரம் ஆகாயவாணி, பூமிதேவி, புண்ய நதிகள் என்று போற்றும் அனைத்தும் பெண் தெய்வங்களேயாகும். நாம் நிற்பதும் பெண்மீதுதான். நாம் கண்டு களித்து

அனுபவிக்கும் இயற்கை யழகும் இயற்கைதேவி என்னும் பெண் ணுடையதுதான். நாம் படிப்பதும், நடப்பதும், எடுப்பதும் யாவும் முத் தெய்வங்களாகிய செல்வத்திற் கதிபதியாகிய லக்ஷ்மீ கடாக்ஷ மும், சக்தியளிக்கும் சக்தி தேவியின் அனுக்ரகமும், கலைவாணியின் கருணையும் ஆகியவைகளால்தான் என்பதை இன்னும் நீ உணர வில்லையா?

உலகத்தையும் நம்மையும் படைத்த ஆதி தெய்வங்களே இத் தகைய ஆதாரத்துடன் விளங்குகையில் நீ எம்மட்டும்? உன் பிடி வாதத்திற்கு மதிப்பு ஏது? பெண்களை நீ அலக்ஷியம் செய்து வெறுப்பதானது உன் தாயாரையே, சகோதரிகளையே வெறுப்ப தாகவும் அவமதிப்பதாகவும்தான் ஆகும்.

சாகரா! ஒரே ஒரு உதாரணம் பாரு. நீறில்லா நெற்றி பாழ், நெய்யில்லா உண்டி பாழ். ஆறில்லா ஊர் பாழ்...........இவைகள் போன்று ஒரு பெண்மணி இல்லா வீடு பாழே பாழுதான். நீ ஆயி ரம் பணக் குவியலின் மத்தியில்தான் தாண்டவம் செய்; பணத்தின் மேலேயே புரளு. எது செய்தாலும் எது இருந்தாலும் உன் வீட் டில் அலங்காரமாக ஒரு ஸ்திரீ ரத்தினம் இல்லாதது மூளி மூளி தான். இதை மறுக்க ஒருவராலும் முடியாது.

வீணுக காலத்தைக் கடத்தாதே! கல்யாணத்தைச் செய்து கொண்டு சந்தோஷமாக வாழ்நாளைக் கடத்து. இந்த மொண்டி பிடிவாதம் வேண்டாம். ஒரு மனிதனுக்கு, பிறந்த நாள் முதல் இறக்கும் நாள் வரையில் பெண்கள்தான் ஜீவாதாரமாக விளங்கு கிருர்கள். முதலில் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி அறிவு புகட்டி அன்பு காட்டி வளர்ப்பவள் முதல் தெய்வமாகிய அன்னைதான். ஈ எறும்பு தீண்டாது பாதுகாத்து மார்மீதும் தோள்மீதும் சுமந்து திரிந்து வியாதி வக்கை வந்த காலத்தில் கண்மணியை இமை காப்பது போலக் காத்து ரக்ஷிப்பவள் அந்த அன்னைதான்.

பிறகு யுக்த வயதில் சரியான உத்தம மனைவி வந்து அந்த பாரங்களைத் தான் ஏற்றுக்கொண்டு புருஷனின் நிழல்போலவிருந்து சகலமான சுக துக்கத்திற்கும் ஈடு கொடுக்கும் இணையில்லா இல் லரசியாகிவிடுகிருள். சாகரா! பெண்களுக்குள்ள சிற்சில அம்சங்கள் முக்கியமாக பொறுமையும், பணிவும், குணமும், கனிவும் எத்தனை கரணம் போட்டாலும் ஆண்களிடம் வராது என்பது பெரியாரின் அபிப்பிராயமாகும். இவை என்னுடைய வார்த்தைகளல்ல. ஒரு

அருமை மனைவியைப் பற்றி ஒரு புலவர் கூறியிருப்பதைக் கவனி.

அன்னை தயையும் அடியார் பணியும் மலர்ப்
பொன்னினழகும் புவிப் பொறையும்—வன்னகலையும்
வேசி துயிலும், வீரன் மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்.

என்ற பாடலின் தத்துவத்தைப் பார்த்தாயா? மனைவியானவள் மந்திரியைப்போல புத்திமதிகளும் கூறுவாள் என்ற அத்தனை பெருமைகளை ஸ்திரீகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள் பாரு. அதனாலேயே தான் மேல் நாடுகளில் ஸ்திரீகளுக்கு முக்கியமான மரியாதை ஸ்தானங்கொடுப்பதோடு, ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளைக் கவனிக்கும் முக்கிய காரியத்திற்கும் நர்ஸாக நாரீமணிகளையே நியமித்திருக்கிறார்கள். நம் நாட்டிலும் அதைப் பின்பற்றி இப்போது ஆஸ்பத்திரிகளில் நர்ஸ்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

சாகர்:—(இடை மறுத்து) சிவானந்தா! வீண் ராமாயணம் எதற்கு அளக்கிறாய்! எனக்கு இவைகளில் நம்பிக்கை கிடையாது. எனது தனி வாழ்க்கைதான் எனக்கு ப்ரம்மானந்தமாக இருக்கிறது. இதுதான் உண்மை......பெண்கள் பெண்கள் என்று பேய்க் கூட்டத்துக்குப் பெருமையைத் தராதே! எனக்குக் கல்யாணமும் வேண்டாம். கர்மாதியும் வேண்டாம்......

சிவா:—அவசரப்படாதேயப்பா! நான் சொல்வது உனக்கு வீண் பேச்சாயும் நீ சொல்வது எனக்கு வீண் பேச்சாயுமிருக்கலாம். இருவர் பேச்சையும் அபிப்ராயத்தையும் பொதுவானவர்களல்லவா முடிவு கூறவேண்டும். பெண்கள்தான் வாழ்க்கைத் துணைக்கும் ஆனந்தத்திற்கும் ப்ரதானம் என்று நான் சொல்கிறேன். நீ அதை மறுக்கிறாய். ஜனங்கள் எதை ஒப்புக்கொள்வார்கள் என்பது ஒன்று இல்லையா?

சாகர்:—அட என்னடா தலை வேதனை! பெண், பெண் என்று உனக்குப் பெண் பயித்தியம் தான் பிடித்துவிட்டது. எழவெடுத்த பெண்கள். நீயே காலையும் மாலையும் பெண்களுக்குக் கும்பிடு போடு. எனக்கு உன் உபதேசம் வேண்டாம். நான் போகிறேன்...... என்று கிளம்பினான்.

சிவா:—(தடுத்து) நில்லப்பா! இதென்ன இத்தனை கோபம் வருகிறதே; 'உன்னோடு பேச எனக்குப் பிடிக்கவில்லை' என்று நீ கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும் நான் என்னவோ போகமாட்டேன்.

உன்னுடைய க்ஷேமமும் சுகமுந்தான் என்னுடைய இன்பமாகும். ஆதலால் நீ வீண் பேச்சுக்கள் பேசாதே! என்றைக்கும் ஒண்டிக் கட்டை வாழ்க்கை நம்போல்பவர்க்குச் சிறிதும் தகாது. முற்றுந் துறந்த முனிவர்களில்கூட சிலருக்கு, அவ்வாழ்க்கை அசாத்ய மென்ருல் நீ எம்மாத்திரம்? எதனுல் உன் மனத்தில் இத்தகைய எண்ணம் தாண்டவமாடுகின்றது?

சாகர்:—அதற்குக் காரண்மெல்லாம் கேட்காதே! என் மனத்தில் தோன்றியபடித்தான் நான் நடப்பேன். என் சினேகிதனின் இளைய தாயாரால் அவன் படும் துன்பம், அவன் பிதா தவிக்கும் தவிப்பும் கூறவேண்டுமா? சீச்சீ! அந்தப் பெண் பேய் என் உலகத்தில் ஜனித்தது என்று தோன்றுகின்றது. இன்னொரு சினேகிதனின் சகோதரியின் பரிபவம் கூறத் திறமே இல்லை. இந்த மாதிரி கோராமைகளுக்கு நான் இலக்காகமாட்டேன். பெண்ணரக்கிகளை நான் வெறுத்துவிட்டேன். ஆகையால் இனி நீ தொந்தரவு செய்யாதே. இந்திரன் கெட்டதும் பெண்ணுலே என்ற பாடலை மறந்துவிட்டாயா!

சிவா:—ஓஹோ! இந்த அல்ப உதாரணங்களைக் கொண்டா நீ இந்தப் பிடிவாதம் செய்கிருய்? சேச்சே! எனக்கு மிகவும் வெட்கமாக இருக்கிறது. உலகத்தில் எங்கேயோ ஒரு தூமகேது இவ்விதம் இருந்தால் எத்தனையோ நல்ல உத்தமிகள் இருக்கிருர்களே அவர்களைப் பார்த்து ஏன் நீ நல்ல எண்ணம் கொள்ளக்கூடாது... அதோ! பாலுசாமி வருகிருன். அவனைக் கேட்கலாம். பாலு! வா. நமது சாகரனுடைய செய்திதான் நீ அறிந்ததாயிற்று. அவன் கொண்டிருக்கும் அபிப்பிராயம் சரியானதா, தப்பானதா என்பதைப் பொதுவாயுள்ள நீ சொல்லு பார்க்கலாம்.

சாகர்:—இதென்னடா பரீக்ஷையா? அவரவர்களின் மனப்படி அவரவர்கள் நடக்கக் கடமைப்பட்டிருக்கிருர்கள். எனது அபிப்ராயத்தை மாற்ற உங்களால் ஆகுமா? ஸ்திரீகள்தான் சனியன். ஸ்திரீகள் தொந்தரவான பீடைகள். ஸ்திரீகள்தான் மனிதனுக்கு மறலி. எனக்குப் பிடிக்காத வார்த்தையும் வேதாந்தமும் வேண்டாம்; நிறுத்துங்கள்.

பாலு:—சாகர்! இதென்ன அத்தனை மூர்க்கமாகப் பேசுகிருயே! இது உலகத்திலேயே ஒப்புக் கொள்ளக்கூடாத விபரீத விஷயமாக வன்ருே விருக்கிறது. அப்பேர்ப்பட்ட விச்வாமித்திர முனிவரும் தவம் கலைந்து பெண் மோகத்தில் மதி மயங்கினுர்

என்றால் நீ எம்மட்டும்?

சாகர் :—ஆம்! ஆம்! பாழும் பெண்களின் துன்பம் இப்போ தாவது தெரிகிறதா! மகா தபஸியின் தபஸைக் கெடுக்கும் சண் டாளியாக வன்றோ ஆகிவிட்டாள்....சீச்சீ...வேண்டாம் பேசாதே!

பாலு :—சாகர்! இரு! இரு!! ஆத்திரப்படாதே! நான் சொல் லுகிறபடி செய்யுங்கள். அதிலிருந்து உங்கள் சண்டை சமாதான மாகிவிடும். அதாவது நீ உன் கருத்தை ஒழுங்குபடுத்தி, கற்பனை உருவமாகச் சித்தரித்து ஓர் சிறு கதை எழுது. சிவானந்தமும் ஓர் கதை எழுதட்டும். அவ்விரண்டையும் பல காப்பிகள் எடுத்து, பல பிரபல பத்திரிகைகளுக்கு அனுப்புங்கள். பகு ஜன வாக்கே வேத வாக்காக வந்து எதற்கு மதிப்பும் ருசியும் இருக்கிறதோ அதைக் கூறுவார்கள். பிறகு உன் அபிப்ராயத்தினின்று என்ன முடிவு செய்கிறாயோ செய்துகொள்ளு. இந்த யோசனையை நான் வெகு நாட்களாக உன்னிடம் சொல்ல நினைத்தேன். இன்றுதான் சமயம் வந்தது—என்றான்.

இதைக்கேட்ட சிவானந்தம் அக் கருத்தை ஆமோதித்து, "ஆம்; ஆம். இதுதான் சரி: இப்படித்தான் செய்யவேண்டும். சாகரா! என்ன யோசனை செய்கிறாய்? இன்னும் உனக்கு மூன்று நாட்கள் வேண்டுமாயின் நேரம் எடுத்துக்கொள்ளு. நன்றாக யோசனை செய்து சொல்லு" என்று நயமாகவும் அன்பாகவும் கூறினான்.

இதைக்கேட்ட சாகரன் ஏதுமே பதில் சொல்லாமல் சமிக்ஞை யினால் தலையை யசைத்து அவர்களை யனுப்பிவிட்டான். அவனுக்கு மனது என்னமோ நிம்மதியின்றி ஏதோ ஒரு விதமான குழப்பத் தையே அடைந்திருந்தது. இந்த விஷயத்தில் எத்தகைய தீர்மா னத்திற்கு வருவதென்ற முடிவே அவன் மனத்தில் தோன்றவில்லை. ஆனால், பெண்கள் விஷயத்தில் அவன் கொண்டுள்ள வெறுப்பும் வித்யாசமும் ஒரு சிறிதும் மாறவோ பேதிக்கவோ இல்லை.

சாகரனின் வயது கொஞ்சமே எனினும் அவன் மன உறுதி யும், தீரமான வைராக்ய எண்ணமும், அபாரமான ஞாபக சக்தியும் உடையவன். சாகரனின் பிதா மிலிடரியில் வேலையாக இருந்தார். ஒரு சமயத்தில் நெருக்கடியான சம்பவம் நேரிட்டு மிலிடரிக் கூட் டத்துடன் யுத்த சம்பந்தமாக அயல் நாட்டிற்குச் செல்ல நேர்ந்தது.

அம்மாதிரி சம்பவம் நேர்ந்த காலையில் சாகரன் 5 வயது குழந்தை. அவனிடத்தில் அவன் பிதாவுக்குள்ள அளப்பரிய ப்ரேமை

யும், அவனே தன் ஜீவாதாரம் என்ற ஓர் தடுக்க வியலாத நம்பிக்கை யுடன் கூடிய வாஞ்சையும் சேர்ந்து அவரைத் துணிந்து யுத்தத்திற் குப் போகவிடாது தடுத்துப் போராடியது.

'என்னருமைக் குழந்தையையும், மனைவி தாயார் இருவரையும் விட்டு விட்டு எவ்வாறு அன்னியநாட்டிற்கு, அதிலும் யுத்தத்திற்குச் செல்வது? சென்றால் திரும்பி வருவேனே மாட்டேனே? என் கதி எப்படி எப்படி முடியுமோ! என்ன செய்வேன்?' என்று தனக்குள் ளேயே போராடித் தவித்தார். தன்னைத் தான் எத்தனை சமாளித் துக்கொண்டும் அவரது மனம் நிம்மதி யடையாமல் குழம்பிவிட்ட தால், தான் போகாமல் நின்றுவிடுவதென்றே தீர்மானித்துவிட்டார்.

ஆனால் அவருடைய தாயாரும் மனைவியும் அவருடைய மன வருத்தத்தையும், பரிசுத்தமான ஆழ்ந்த அன்பையும், புத்திர வாஞ் சையின் அருமையையும் சற்றும் அறியாத அறிவிலிகள், மூடங்கள்; ஆகையினால் "யுத்தத்திற்குச் சென்றால் சம்பளம் அதிகமாக வரும். அதிகப்படி வரும்படியும் கிடைக்கும். யுத்தத்தில் ஜெயம் பெற்று வந்தால் சன்மானங்கள் கிடைக்கும். ஒருகால் அப்படி தவறிவிட் டாலும் தலைமுறைக்கும் பணம் கொடுப்பார்கள். இத்தகைய நல்ல சந்தர்ப்பத்தை விட்டுவிட்டால் மீண்டும் கிடைக்குமா? பிள்ளை குட்டிகளைக் கட்டியழுதால் பணம் வந்துவிடுமா? வறுமை நீங்கி விடுமா? என்றும் இப்படியே இருந்தால் நாம் நாலு பேருக்குச் சம மாக இருந்து சந்தோஷமடைவது எப்போது? பணம் சம்பாதிக்க வகையில்லாது தைரியமில்லாது இப்படி கோழையாக இருப் பார்களா?" என்று தொந்தரவு செய்துவிட்டார்கள்.

பாசத்தினால் ஊசலாடுபவன் என்ன பதில் கூறுவான். தன் னைப்பெற்ற தாயே தான் பணம் சம்பாதிக்கும் கருத்திலேயே இருக்கிறாள்......கட்டிய மனைவியும் அதே எண்ணத்துடன் இருக் கிறாள்!......இருவரும் என் நிலைமையைக் கவனித்தார்களா? யுத்தத் திற்குச் சென்றால் உயிருக்கே ஆபத்து வந்தாலும் வருமே! பணத் திற்காக ஆசைப்பட்டு அடியோடு ஆளே மோசமாகிவிட்டால் என்ன செய்வது என்ற யோசனை ஒரு சிறிதாவது செய்தார்களா?

ஹா! உலகமே! பணந்தானு உயிரை விடப் பெரிது. பணத் தின் மூலம் பின்னால் என்ன நேருமோ? ஆபத்து என்கிற யோசனை யும் போய்விட்டதே! எல்லாம் வெறும் மயக்குத்தான். பணந்தான் பிரதானம்" என்று தனக்குள் இரவு பகல் எண்ணி வருந்தினார்.

கடைசியில், எக்கதியானாலும் ஆகட்டும். கடவுள் கிருபையினால் திரும்பினால் திரும்புகிறேன். இல்லையேல் என் விதியைப்போல ஆகட்டும். போகாதிருந்தால் ஆபீஸுக்கும் பொல்லாப்பு. மற்றவருக்கும் எச்சு. வீட்டிலும் சதா ஏளனமும், குத்தலும் கலந்த பாணப்பிரயோகம் போன்ற சொற்கள். இத்தனை ஆபத்து எதற்கு? விதியே! உன் ஆட்சியை நீ செலுத்து" என்று மனத்தை யொருவாறு தேற்றிக்கொண்டு துணிந்துவிட்டார்.

சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் அளவு என்பது போல அவருடைய ஆசாபாச மெல்லாம் பறந்து போய் வெறுப்பாக மாறிவிட்டன. உடனே மிலிடரியுடன் போகப் புறப்பட்டு விட்டார். சாகரனைப் பலதரம் கொஞ்சி முத்தமிட்டுப் பிரிய மனமில்லாது பிரிந்து சென்றார்.

அன்னிய நாட்டிற்குச் சென்றார். மனமோ நிம்மதி கொள்ளாது தத்தளிக்கின்றார். எத்தனை மன உறுதி கொண்டபோதிலும் பாசம் விடாமல் சகாரனின் முகம் கண்ணெதிரிலேயே தோன்றி அவரைப் பித்தனாக்கிவிட்டது. சதா தன் மகனையும் மற்றோரையும் எண்ணி ஏங்கி கண்ணீர் பெருக்கிக் கதறுவார். அன்னிய நாட்டின் புதிய வாழ்க்கையைச் சற்றும் அவர் விரும்பவில்லை. எல்லாம் புதிதாகவே, நூதனமாகவே மன வெறுப்பினால் விளங்கின.

புதிய தேசமும் தேகத்திற்கு ஒத்துக் கொள்ளாது வருத்தியது. தலை விதியே என்று தன் தொழிலைச் செய்து வந்தான். சம்பளத்தை வாங்குவதும், அதை உடனே தன் தாயாருக்கும் மனைவிக்கும் அனுப்பி விடுவதுமாகத் தான் ஓர் யந்திரம் போல வேலை செய்யப் புகுந்தான்.

நாளடைவில் அவன் தேகாரோக்கியம் கெட்டுப் போய்விட்டது. சண்டையின் மும்முரத்தையும் ஆயிரக் கணக்கில் மக்கள் மடிவதையும் அங்கஹீனமாவதையும் கண்டு மனந்தாளாது ஏதோ ஒருவிதமாக ப்ரமைகொண்டவன்போல மாறி, வெகு விரைவிலேயே ஹிருதயக் கோளாறினால் உயிரும் துறந்துவிட்டான்.

பணம்! பணம்! என்று ஆசையுற்று ஓர் மனிதனின் ப்ரீதியையும் மன நிலைமையையும் அறியாது அயல்நாட்டுக்கு அனுப்பி, பணம் பெற்றுக்கொண்டு விசாரமற்றிருந்த இரு ஸ்திரீகளும் அம் மனிதனின் மரணச் செய்தி தெரிந்தபின் தத்தளித்துத் துடித்தார்கள். கண்கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்வதைப் போல இவர்களின்

கதியாகிவிட்டது. பின்னர் முட்டிக்கொண்டு மோதிக்கொண்டு புலம்புவதில் பலன் யாது? சுவர் இருந்தாலல்லவோ சித்திரம் எழுதுவதற்கு? சுவரே இடிந்துவிட்டது. இனிமேல், ஜீவனத்திற்கும் அதோகதி யாகிவிட்டது.

மகனின் அன்பை விடப் பணமே பிரதானமாக எண்ணி அனுப்பிய கிழவி இந்தச் செய்தியைக் கேட்டதும் இடி விழுந்து போய்விட்டாள். மருமகளுடனும் பேரப் பிள்ளையுடனும் தன் சம்மந்தி வீட்டிற்கே போகும்படியான கதி ஏற்பட்டுவிட்டது. மகனை இழந்த பின்னர் மகனின் வேட்டகத்தில் இக் கிழவியை மதிப்பார் உண்டா? அவ்வீட்டில் இவளுடைய வாழ்க்கையின் வைபவத்தைப் பற்றிக் கூறவேண்டுமா?

தங்கள் மகளே கதி கெட்டு ஒரு மகனுடன் வீட்டிற்கு வந்தால் முதலில் துக்க வைராக்யத்தில் சில தினங்கள் ஆதரிப்பு. பிறகு சிறு சிறு வார்த்தைகள் பிறக்கும். இன்னும் சில தினங்கள் சென்றால் மெல்ல வீட்டு வேலை செய்யும் நிலைமை ஏற்படும். இப்படியே படிப்படியாக ஏறிக் கடைசியில் அவள் ஓர் கேவலமான வேலைக்காரி போலாகி சிறுமைபட்டு, சீரழிந்து, கண்ணீர் பெருகியவாறு ஆகி விடுவதை உலகத்தில் எத்தனையோ இடங்களில் காணலாம்.

அங்ஙனமிருக்க, புருஷனை இழந்த பெண்ணும், அவள் குழந்தையும், அவள் மாமியும் தாயார் வீட்டில் எத்தனை சிறப்பாக சுகப்பட முடியும்? சாகரனின் தாயாருக்குத் தாயில்லை. தந்தை மிகவும் வயதானவர். அவரது மனக்கஷ்டத்தினால் பெண்ணையும் சம்மந்தியையும் வீட்டிலேயே வைத்துக்கொண்டார். கிழவரின் மருமகள் வீட்டில் ராஜ்யபாரம் செய்யும் அரசியா யிருந்தபோதிலும் கிழவர் இருக்கும்போது அதிகம் கொடுமை செய்ய முடியாதிருந்தாள்.

ஒரு வருடம் முடிவதற்குள்ளேயே கிழவரும் உலகத்தைவிட்டு நீங்கிவிட மருமகளின் ஆட்சி மும்முரமாகிவிட்டது. சாகரனுக்கு 7 வயது ஆவதற்குள்ளேயே அவனது பாட்டியாரும் தாயாரும் மாமி மாமனால் பலவித கஷ்டங்களை அனுபவித்துவிட்டுக் காலகதியடைந்துவிட்டார்கள்.

கேவலம் பாலகனாகிய சாகரனின் கதி பரதேசியினும் பரதேசியாகிவிட்டது. அவன் வயதில் மிகச் சிறியவனெனினும் அவனுடைய பிதாவிடம் கொண்டிருந்த பிரீதியை அவன் ஒருபோதும் மறக்கவே இல்லை. அக்கம் பக்கம் உள்ள பெரியவர்களும் அவனு

டைய மாமன் மாமியும் அவன் தாயாரையும் பாட்டியையும் கண்ட படி திட்டி, பணப்பேயின் அடிமையில் மனிதனை இழந்துவிட்ட பாவிகள் என்று சொல்லித் தூற்றும் வார்த்தைகள் அவன் மனத்தில் தினே தினே பதிந்துவிட்டதால், தன் தாயின் மீது வெறுப்பும் ஆத்திரமுங் கொண்டு, "எம்மா! அப்பாவைத் தூத்திக் கொண்ணுப் புட்டேன்னு எல்லோரும் சொல்லுகிறுர்களே!" என்று கேட்டுவிடுவான்.

தாயாரும் பாட்டியும் இறந்தபிறகு மாமியிடம் சித்திரவதை அனுபவித்து, கேவலம் மாட்டுக்காரப் பையனைப் போல மதிக்கப்பட்டு வீடு கட்டுவது முதல் சமையல் வேலை வரையில் சிறு பையனுகிய இவனையே செய்யும்படியாக விதித்துவிட்டாள்.

சிறு பையன் சுமார் பதினேரு வயது வரையில் இக் கொடுமைகளைச் சகித்து வந்தான். அதற்குமேல் இப் பெண்ணரக்கியிடம் இருந்து அவதிப்படுவதை விட எங்கேனும் குளத்தில் கிணற்றில் விழுந்து மடியலாம் என்ற உறுதியும் வெறுப்பும் உண்டாகிவிட்டன. அதே நோக்கத்துடன் வீட்டைவிட்டுச் சொல்லாமல் ஓடிப்போய் விட்டான்.

அதுமுதல் பெண்கள் என்றுலே ஒரு விஷம் போல மதித்து, தீர வைராக்யமும் மாருத ஆத்திரமும் கொண்டு, 'பெண்களையே மனத்திலும் நினைக்கக்கூடாது. கண்ணுலும் பார்க்கக்கூடாது. பெண்களெல்லாம் ராக்ஷஸிகள். பெண்களே மிகக் கொடிய பிறவி. பெண்களென்றுல் எமன்தான்'...என்றெல்லாம் அவன் தனக்குத் தானே நினைத்துக்கொண்டு, தன்னையே மாற்றிக்கொண்டு விட்டான்.

11 வயதுக்கு மேல் அவன் வீட்டை விட்டு ஓடி வந்ததும் வெகு நாட்கள் ஒரு வேளைக்குச் சோறும் கிடைக்காமல் திரிந்தான். பல நாள் பட்டினி கிடந்து தவித்தான். பிறகு ஒரு ஓட்டலில் சென்று அங்கு பாத்திரம் தேய்க்கும் வேலையில் அமர்ந்தான். அவன் மகா புத்திசாலியானதால் அவன் ஓட்டல்காரனைச் சினேகஞ் செய்துகொண்டு அவன் மூலமாகவே ஓர் இராப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தான்.

நல்ல புத்திசாலியாகையினுல் சிறிய படிப்பே பெரிய படிப்பாகி மிகவும் உத்தமனுயும் இன்னும் படிக்கவேண்டு மென்கிற அபார ஆவலுடையவனுகவும் ஆனுன். பல பெரிய மனிதர்களின்

சிபார்சு கொண்டு கலாசாலையில் B. A. வரையில் படித்துவிட்டு, ஒரு பெரிய பேரி செட்டியாரின் ஷாப்பில் வேலை பார்த்தான்.

செட்டியாரின் சினேகிதத்திற்கு மிகுந்த பாத்திரமாகி விட்ட படியினுல் இவனே சில காலத்திற்குள் ஷாப்பின் மானேஜராகவுமாகி, மாதம் 250 ரூபாய் சம்பளத்தில் உயர்த்தப்பட்டான். வயது சற்றேறக்குறைய 30க்கு ஆகிவிட்டது. அவனுக்கு மனமார்ந்த நண்பன் சிவானந்தம் ஒருவன்தான். அவனிடத்தில்தான் உண்மையான சினேகம் செய்து வந்தான்.

இவ்விருவருக்கும் ஸ்திரீகள் விஷயத்தில் மாத்திரம் எப்போதும் அபிப்பிராய பேதம் உண்டு. இது விஷயமாகச் சச்சரவுகள் சதா நடந்துகொண்டே இருக்கும். சாகரன் ஒரு சமயத்திலாவது சற்றும் சளைத்தவனில்லை. எப்போதும் தனது தீர்மானத்தின் மீதே உறுதியாக விருப்பான்.

இத்தனை உயர்ந்த நிலைமையில் ஒண்டி வாழ்க்கை நடத்துவது சரியில்லை. எவ்விதமாவது இவனுடைய மனத்தைத் திருப்பி இந்த மூட எண்ணத்தை ஒழிக்கவேண்டும் என்பதே சிவானந்தத்தின் கருத்து. எத்தனையோ விதங்களில் அவன் மனத்தை மாற்றப் பார்த்தான். ஒன்றிலும் பலிக்கவில்லை யாதலால், இம்மாதிரி சூழ்ச்சி செய்யவேண்டுமென்று சிவானந்தமும் பாலுசாமியும் முன்னேற்பாடாகவே இவ்விதம் ஜோடித்திருந்தார்கள். இதைச் சாகரன் அறிய மாட்டான்.

சாகரன் நாம் முன்பு கூறியபடியே ஒன்றும் தோன்றாதவனுய் உட்கார்ந்து யோசித்துக்கொண்டே பழங் கதைகளை யெல்லாம் எண்ணி எண்ணி மனத்தில் கட்டுக்கடங்காத விசனமும், மனக் கொதிப்பும், ஆத்திரமும் அடைந்து ஓர் பித்தன் போல உட்கார்ந்து விட்டான்.

ஸரஸராஜன்

சில்வானம் விற்றுப் புருஷருக்குத் தெரியாமல் பணம் சேர்த்து, நகைப்பித்துப் பிடித்துத் தறிதலைகளாய்த் திரியும் பெண்களின் கதி என்னவாகும் என்பதை நன்கு விளக்கிக் காட்டும் சிறிய நாவல்.

3-வது பதிப்பு — விலை அணு 4 தான்

அதிகாரம் 2

தியாகியின் விஜயம்—ஸாகரனின் குழப்பம்

"இந் நகரின் சரித்திரத்திலேயே ஓர் சுதினம்" என்று மக்கள் கொண்டாடவும், சரித்திரக்காரர்கள் வரையவும், வன்மை பொருந்தியவர்கள் கவி சித்திரிக்கவும், பொது மக்கள் ஆனந்த சாகரத்தில் மூழ்கி மெய் மறக்கவும், சிறிய குழந்தைகள் முதல் பெரியவர் வரையில் தம்மை யறியாமல், தம்மை மறந்து 'மகாத்மா காந்திக்கு ஜே! மகாத்மா காந்திக்கு ஜே!' என்று ஜே கோஷம் செய்யவுமாக எங்கும் உத்ஸாக மயமான தோற்றமும் சந்தோஷமும் குடிகொண்டிருந்தன.

அத்தகைய அருமையான சுதினமாகிய நன்னுள் எது? மகாத்மா காந்தியடிகள்—த்யாகமூர்த்தியாகிய சத்யசீலன்—சென்னைக்கு விஜயம் செய்த நன்னுளே யாகும். அன்று சென்னையில் குடிகொண்டிருந்த தேசீய உணர்ச்சியைக் கண்ட மக்களில் வியக்காதோர் கிடையாது. கூட்டங் கூட்டமாயும் திரள் திரளாயும் ஜனங்கள் ஆரவாரம் செய்துகொண்டே ஸென்ட்ரல் ஸ்டேஷனை நோக்கிச் செல்லுங் காக்ஷி கூறத் திறமன்று. காலை 5 மணி முதலே கூட்டம் குழுமிவிட்டது.

இத்தகைய உணர்ச்சி மயமான தினத்தில் நம்முடைய சாகரன் மட்டும் தன்னுடைய வீட்டிலேயே தனி யறையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். நாம் முன்பு கூறிய பந்தயம் செய்து 25 தினங்கள் மத்தியில் கழிந்துவிட்டன. ஏதோ ஒருவிதமாக யோசித்து மண்டையை உடைத்துக்கொண்டு தன் மனப்போக்கின் படிக்கும் தன்னுடைய பிடிவாதமான தீர்மானத்தின்படிக்கும் மிக்க நம்பிக்கையுடன் ஒரு சிறு கதை எழுதி அதைப் பல காப்பிகள் எடுத்து அவன் பல பத்திரிகைகளுக்கு அனுப்பிவிட்டான். ஆனல், இன்னும் ஒரு இடத்திலிருந்தாவது பதிலோ அல்லது தான் அனுப்பியது திரும்பியோ வரவில்லை. அதையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

நாம் மேலே குறிப்பிட்ட புனித தினத்தன்று விடியற்காலம் பானுசாமி, சிவானந்தம் இருவரும் சாகரன் வீட்டிற்கு வந்து

"சாகரா! தயார்தானு! மணியாகிவிட்டதே! எங்கே புறப்படு. ஸ்டேஷனுக்குப் போவோம்" என்று கூப்பிட்டார்கள்.

சாகர்:—அடேய்! என்னை நீங்கள் கட்டாயம் செய்யவேண்டாம். நான் ஸ்டேஷனுக்கு வரவில்லை. பெண்கள் கூட்டம் ஏராளமாக மிஞ்சியடிக்கும். அந்தச் சனியன் எனக்கு வேண்டாம். நான் மகாத்மா காந்தி தங்கும் தனி இடத்திற்குச் சென்று தரிசனம் செய்துவிட்டு வருகிறேன். அதற்கான ஏற்பாடும் நான் எனது முதலாளி செட்டியாரிடத்தில் செய்துவிட்டேன். ஆகையினுல் நீங்கள் சென்று வாருங்கள். இதற்குமேல் என்னைத் தொந்தரவு செய்யாதே!—என்று கண்டிப்பாயும் திட்டமாயும் கூறிவிட்டான்.

அதற்குமேல் அவ்விருவரும் தொந்தரவு செய்யாமல் போய் விட்டார்கள். சாகரனின் வீட்டில் வீடு கூட்டும் வேலையிலிருந்து சமையல் வேலை வரையில் எல்லாம் வேலைக்காரர்கள்தான். வீடு கூட்டுவதற்குக்கூட ஒரு பெண்பிள்ளை கிடையாது. அந்த வேலைக் காரர்கள் எல்லாம் ஸ்டேஷனுக்குச் செல்லவேண்டுமென்று லீவு பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள்.

"ஜன நாயகம்" என்ற தினசரிப் பத்திரிகை ஆபீஸிலுள்ள கதைப் பகுதி மானேஜர் சாகரனுடைய கதையைப் படிக்க வாரம்பித்தார். கதைப்பகுதியின் கமிட்டியினர் அக்கதையைக் கேட்க வாரம்பித்தார்கள்.

சத் சங்கம்

ஓர் சிறு கதை

"மாணுக்கர்களே! நீங்கள் இன்று படித்த பாடங்களை நன்ருக மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் படித்த படிப்பின் உண்மையான அழகும் ஆனந்தமுமாகும். இன்று தருமத்தைப் பற்றி உங்களுக்குச் சொன்னேன். நீங்கள் தருமம் செய்வதையே ஓர் கருமமாகக் கொள்ளவேண்டும். நாம் இம்மையில் செய்யும் தருமம் மறுமையில் நமக்கு வழி காட்டும்.

மாணவர்களே! நீங்கள் கனவிலும் கர்மியாக இருக்கக்கூடாது. ஒவ்வொரு விநாடியும் தருமத்திலேயே, கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்." என்று உபாத்தியாயர் உபதேசம் செய்தார். இந்த உபதேசத்தைப் பெற்றுக்கொண்டு மாணுக்கர்கள் வீடு திரும்பினர்கள்.

அந்த உபாத்தியாயருக்கு நான்கு பிள்ளைகளும் ஒரு வயது முதிர்ந்த தகப்பனும் இருக்கிறார்கள். மனைவி இறந்துவிட்ட கொடுமையினால் இரண்டாந் தரம் விவாகம் செய்து கொள்ளவில்லை. ஏனெனில், நான்கு பிள்ளைகள் இருக்கையில்—சொத்து ஒன்று மில்லாமையினால்—ஓர் பள்ளிக்கூட உபாத்தியாயர்: வருமானமும் அதிக மில்லாதவர்: ஆகையினால் பெண் கொடுக்கவில்லை. உபாத்தியாயரும் இல்லற வாழ்க்கை வேண்டாம் என்று வெறுத்துவிட்டதால், அவர் தனது வாழ்க்கையைத் தனி வாழ்க்கையாக அமர்த்திக்கொண்டார்.

அவர் தினம் காலையில் 5 மணிக்கெல்லாம் எழுந்து சமையல் வேலையைச் செய்துவிட்டு, 7 மணி முதல் 9 மணி வரையில் சில பையன்களுக்கு ப்ரைவேட்டு சொல்லிக்கொடுத்துவிட்டு, 9லிருந்து 10க்குள் தன் நான்கு பையன்களுக்கும் சாப்பாடு போட்டுவிட்டு, பள்ளிக்கூடத்திற்குத் தயாராக்கிக்கொண்டு தானும் சாப்பிட்டுவிட்டு, கிழவரையும் உபசரித்துவிட்டு, பாடசாலைக்குச் செல்வார்.

இவ்விதமாக அவருடைய வாழ்க்கை நடந்து வருகிறது. சில தினங்கள் பாடசாலை மாணுக்கர்களை இயற்கை யழகைப் பார்க்கும் பொருட்டு பெரிய மலைகள், ஏரிகள், தோப்புக்கள், கோயில்கள், உள்ள இடங்களுக்கு அழைத்துக்கொண்டு செல்வது வழக்கம்.

அம்மாதிரியே ஒரு தினம் இவர் மாணுக்கர்களை அழைத்துக்கொண்டு ஒரு ஊருக்குச் சென்றார். அங்குள்ள மலையையும் சுனையையும் இயற்கை யழகையும் கண்டு மாணவர்களெல்லாம் களித்து மகிழ்ந்து பெருமிதமான சந்தோஷமடைந்து தாண்டவம் செய்தார்கள். சிலர் அழகாகப் பாட வாரம்பித்தார்கள். சிலர் ஓட்டப் பந்தயம் வைத்து விளையாட வர்ரம்பித்தார்கள்.

பின்னர், தாம் தயாரித்துக்கொண்டு வந்திருந்த சாப்பாடுகள் பலகாரங்கள் முதலியவைகளைத் தண்ணீர்க் கரையிலமர்ந்து ஆனந்தமாகவும் சுவையுடனும் உண்டு களித்தார்கள். அதன் பிறகு அந்த ஊரில் ஓர் சாமியார் இருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டு, இவர் மாணுக்கர்களை அவரிடம் அழைத்துக்கொண்டு போனார்.

ஸ்வாமியாரது மடத்தின் வாசலில் தடபுடலான கூட்டங்களும் பாராக்களும் தர்பார் போல விருந்தன. இந்த உபாத்தியாயர் தமது மாணுக்கர்களை நோக்கி, "பிள்ளைகளே! இந்த ஸ்வாமி சாமானியரல்ல. பெரிய மகானுபாவர். நிபுணர். சிறந்த த்யாகி. இவ்வுலகத்தையே வெறுத்த பரம யோகி. இவர், மழை பெய்யென்றால்

பெய்யும். வெய்யில் காய் என்றால் காயும். கடவுளை நேரில் அறிந்தவர். ஆகையினால் இத்தகைய சிரேஷ்டமான முனிவரைத் தரிசித்து அவருடைய ஆசியைப் பெறுவது முக்யமாகும்" என்று உபதேசம் செய்தவாறு உள்ளே அழைத்துச் சென்றார்.

உள்ளுக்குள்ளேயே சாமியாரைக் காண்பதற்காக அளவற்ற ஜனங்கள் குழுமியிருந்தார்கள். ஸ்வாமியார், திண்டு திபாசு முதலியனவற்றுடன் அட்டகாஸமாக உட்கார்ந்துகொண்டு கையில் பஞ்சாங்கத்தோடு யார், யார் என்னென்ன கேட்கிறார்களோ அவற்றிற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டும் காணிக்கைகள் வாங்கி பையை நிரப்பிக்கொண்டும் இருந்தார்.

உபாத்தியாயர் அத்தகைய சாமியாரிடம் வந்து தரிசனம் செய்துவிட்டு, மரியாதையாக மாணக்கர்களையும் தரிசிக்கச் செய்துவிட்டு நின்றார். சாமியாரின் அனுக்கிரகத்திற்குப் பாத்திரமாகும் பொருட்டுத் தன் விஷயமாகவும் சில விஷயங்களைக் கேட்டார்.

சாமியார் சாவதானமாக "ஓய்! உபாத்தியாயரே! உம்முடைய பிறவி என் கண் முன்பு தாண்டவமாடுகிறது. போன ஜென்மத்தில் நீர் பெரிய தனவந்தராகப் பிறந்திருந்தீர். ஆனால், பைசா கூட தானமோ தருமமோ செய்யாத மகா கருமியாக இருந்தீர். உம்முடைய சொத்துக்கள் பூராவும் அனியாயமான விஷயத்தில் சம்பாதித்த தாகையினால் உமது பொருளைக் கொள்ளைக்காரன் கொண்டு போய்விட்டான். அதன்பிறகுதான் உமக்குச் சற்றுப் புத்திவந்தது. பிறகுதான் கல்வி யறிவும் சிறிது அறிய வாரம்பித்தீர்.

அந்த வாசனையினால்தான் இந்த ஜென்மத்தில் இம்மாதிரி கல்வியைப் போதிக்கும் உபாத்தியாயராகப் பிறந்திருக்கிறீர். இன்னும் கூடிய சீக்கிரத்தில் உம்முடைய ஜாதகத்திற்குப் பெரிய யோகம் உண்டாகப் போகிறது. அப்போது எல்லாக் குறைகளும் தீர்ந்துவிடும்" என்று ஜோஸிய பலனைக் கூறிவிட்டுக் கையை நீட்டினார்.

உபாத்தியாயரின் கையிலோ பணமில்லை. அவர் மகா ஏழை; பெரிய குடும்பி யாதலால், எங்கிருந்து காணிக்கைகள் கொடுக்கமுடியும். 'என்னிடம் ஒன்றுமில்லையே!' என்று கையை விரித்துப் பரிதாபமாக விழித்தார். இதைக்கண்ட சாமியார் நகைத்துக்கொண்டே "எனக்காகவா நான் காணிக்கைகள் கேட்கிறேன். அம்பாளுக்கு! ஜகதீச்வரிக்கு! சாக்ஷாத் லோக மாதாவுக்கு" என்று அழுத்தமாயும் ஓர் மாதிரியான பார்வையுடனும் கூறினார்.

உபாத்தியாயரின் கையிலோ ஒன்றுமே இல்லை. என்ன செய்வார்! திருகத் திருக விழித்தார். அச்சமயம் சாமியாரின் பக்கலில் இருந்த ஒருவர் "அதோ உமது கைக் கடியாரத்தின் மீது அம்பாளின் பார்வை விழுகிறது. உமது ஜேபியிலுள்ள..." என்று முடிப்பதற்குள் உபாத்தியாயருக்குப் பயம் உண்டாகிவிட்டது. உடனே ஜேபியில் உள்ள ஊராரது பணத்தையும் கேட்டுவிடப் போகிறாரே என்கிற பயத்தினால் 'நமது போதாக் காலத்திற்குத்தான் நாம் இங்கு வந்தோம்' என்று மனத்தை நொந்துகொண்டு கைக் கடியாரத்தைக் கழற்றி வைத்துவிட்டுத் திரும்பிப் பாராமல் போய்விட்டார்.

பின்னும் சில தினங்கள் சென்றன. தமது பாடசாலை மாணவரில் ஒருவருடைய பிதா ஒரு தினம் உபாத்தியாயரிடம் தன் மகனின் படிப்பு சம்பந்தமாகப் பேச வந்திருந்தபோது அவர் கையில் உபாத்தியாயர் முன்பு சாமியாருக்குக் கொடுத்த கடியாரம் கட்டியிருந்ததைப் பார்த்து உபாத்தியாயர் பிரமித்துத் திடுக்கிட்டார். அது தன்னுடையதுதானாவென்று நன்றாகக் கவனித்து, சில அடையாளங்களினால் அது தன்னுடையதுதான் என்பது தெரிந்ததும் வியப்போடு "ஐயா! இந்தக் கடியாரம் வெகு நன்றாக இருக்கிறதே! இதை எங்கே வாங்கினீர்கள்?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட அம் மனிதர் இதை நான் சமீபத்தில்தான் சாமி & கோ., என்கிற கம்பெனியில் வாங்கினேன். அந்தக் கம்பெனியில் அடிக்கடி பழய சாமான்கள் வந்து விற்கும். அதில், இந்தக் கடிகாரமும் இருந்தது. 10 ரூபாய்க்கு நான் இதை வாங்கினேன். வெகு பேர்கள் இது மிகவும் நன்றாக இருக்கிறதென்று சொன்னார்கள்" என்று பெருமையாகப் பேசினார்.

இதைக் கேட்ட வாத்தியாருக்கு உண்மை விளங்கிவிட்டது. "இந்தச் சாமியார் உண்மைச் சாமியாரல்ல. ஊரை ஏமாற்றி மோசம் செய்யும் சாமியார்தான். இம்மாதிரி பலரிடம் பல சாமான்களை வாங்கி சாமி & கோ என்கிற பெயரால் வியாபாரம் செய்யும் ஊர்ப் பெருச்சாளி போல விருக்கிறது. அடாடா! இப்படியும் ஏமாறுவேனா?" என்று தனக்குள் விஷயத்தைத் தெரிந்துகொண்டு, "உலகம் இப்படித்தானா? இந்த மோச மயக்கிற்கா உலகம் அடிமையாகிவிட்டது!"...என்று எண்ணி, நடந்த விஷயத்தை வந்தவரிடமும் கூறினார். அவரும் வியப்புற்றார்.

அதிகாரம் 3

வாழாவெட்டி

மேற்படி கதையைப் படித்து முடித்த மானேஜர் கடகட வென்று பெரிதாக நகைத்தார். அதைப்பற்றித் தமது சகாக்களுடன் பலத்த விவாதங்கள் நடத்திப் பின்னர் அதற்கு ஓர் பெரிய மதிப்புரையும் கடிதமும் அப்போதே எழுதிச் சாகரனுக்கு அனுப்பிவிட்டு, மற்ற கதைகளைப் புரட்டிக்கொண்டே செல்கையில், நமது சிவானந்தத்தின் சிறு கதை கிடைத்தது. 'வாழாவெட்டி' என்ற கதையின் பெயரைப் பார்க்கும் போதே இவர்களுடைய கவனத்தை அக்கதை இழுத்தது. உடனே அதை ஊக்கத்துடன் படிக்கத் தொடங்கினர். முன்போலவே கமிட்டியார் கேட்கலானார்கள்.

வாழாவெட்டி

ஓர் சிறு கதை

"மீனாக்ஷி! சதாகாலமும் இப்படியே கண்ணும் கண்ணீருமாக விருந்தால் என்ன செய்வது? உன் தலைவிதி அது. எழுந்திரு. சாப்பிட வாம்மா!" என்று ஒரு கிழவி ஓர் இளம்பிராயத்துப் பெண்ணை நோக்கிக் கூறினாள். மின்னல் கொடி போன்றும் மேகத்தினிடையே மறைந்தொளிரும் சந்திரபிம்பத்தைப் போன்றும் பிரகாசிக்கும் மீனாக்ஷி கண்ணீர் பெருகியவாறு, "பாட்டீ! எனக்கு என்ன கேடு? சாப்பிடாமலும் பட்டினி கிடந்தும் நான் சாகப் போகிறேனா என்ன? அப்படிப்பட்ட நல்ல பிராணனாயின் என்னுயிர் என்றோ நீங்கி இருக்காதா ?

பாட்டீ! என்னை என் மாமி என் புருஷன் கண்ணிலேயே படக் கூடாதென்று பழி கூறித் தள்ளிவைத்து மகனுக்கு இரண்டாம் விவாகம் நடத்திவிட்டாளே! இந்தக் கொடுமை எந்தச் சமூகத்திலாவது நடக்குமா! எந்தத் தேசத்திலாவது நடக்குமா? நான் ஒரு பரதேசி. தூர தேசத்து வாசி. எனது 6வது வயதில் விவாகமாகி விட்ட பொம்மைக்கலியாணத்திற்குப் பிறகு நான் என் புருஷனைக் கண்ணாலும் பார்க்கவில்லை. கல்யாண காலத்திலேயே சண்டையும் தகராறும் உண்டாகிவிட்டதாம். என் மாமனாரும் என் தகப்பனாரும்

அடிதடி சண்டையும் செய்தார்களாம்.

மத்தியிலுள்ள கலகக் கொள்ளிகளின் செய்கையினால் வாய் வார்த்தை விபரீத சண்டையாக மாறி, 5 நாள் கல்யாணமும் ஒழுங்காக முடியாமல், பாதியிலேயே அபசகுனம்போல கல்யாணத்தை நிறுத்திவிட்டு, மூட்டை கட்டிக்கொண்டு போய்விட்டார்களாம். நான் ஆறு வயது சிறுமியென்றால் எனக்கு என்னதான் தெரியும்? சொப்பனம் கண்டதுபோன்று ஏதோ கொஞ்சம் நினைவிருக்கிறது.

பலத்த சண்டையும் பூசலும் நடத்திவிட்டுச் சண்டையுடன் சென்றவர்கள் பிறகு திரும்பியே பார்க்கவில்லையாம். என் கணவருக்கும் வயது அப்போது 12தான். அவரும் சிறு வயதுள்ளவர்; ஆகையினால், விவகாரம் அறிய எப்படி சக்தி பெற்றிருக்கக்கூடும்? எனக்கோ ஒன்றுமே தெரியாது. நான் எனது யுக்த வயதை அடைந்தபிறகே என் சரித்திரத்தின் அவகேட்டை யறிந்து அலறினேன். "என் வாழ்நாளேயே பாழாக்கிவிட்டீர்களே! என் பிறவியே வியர்த்தமும் பூபாரமுமாக ஆகிவிட்டதே! பாழும் சண்டையிட்ட போதே என்னையும் கொலை செய்திருக்கலாகாதா! என்னை ஏன் வளரச் செய்தீர்கள்? 6 வயது பொம்மைக் கல்யாணத்தைமட்டும் ஏன் செய்தீர்கள்? என் மனமும் வயிறும் பற்றி எரிகிறதே!" என்று முட்டிக்கொண்டேன். பிறகு என்ன செய்துதான் என்ன பலன்? எல்லாம் சமுத்திரத்தில் சர்க்கரை கரைத்ததுபோலாகிவிட்டது.

என் பிறவியை நான் நினைக்கும்போது என் கண்முன்பு வெகு பயங்கரமான உருவமே தோன்றி, என்னை முற்றிலும் கொன்று வதைத்தது. கால தேவதையின் சக்கரம் பயங்கரமாக என்னை நோக்கிச் சுழன்றது. நான் என்ன செய்வதென்றே எனக்குப் புலப்படவில்லை. பலவாறு குழம்பிப்போய் மிகவும் தவித்துவிட்டேன். என் தாயாரிடத்தில் முறையிட்டேன். "என்னை எப்படியாவது என் கணவரிடம் சேர்த்துவிடுங்கள்" என்று கதறினேன்.

என் தாயாரும் "தந்தையினுடைய சண்டையின் மும்முர கோபத்தினால் சிதறிவிட்ட சம்பந்தம் இனி ஒட்டாது. அப்போதே அவர்கள் உன் புருஷனுக்கு இரண்டாந் தரம் விவாகம் செய்துவிட்டார்கள்" என்று கூறிவிட்டாள். அந்தோ! இதைக் கேட்ட பிறகு நான் என்ன நிலைமையைத்தான் அடைந்திருப்பேன்? இனி, உயிருடன் இருப்பது கூடாதென்று தற்கொலை புரிந்துகொள்ள நினைத்தேன். கிணற்றில் விழுந்தேன்; நஞ்சும் உண்டேன்.

நான் மகா பாவி என்பது இம் மூன்றிலும் சாகாமல் பிழைத்துக் கொண்டதிலிருந்தே தெரியவில்லையா? "இது என் தலைவிதி! இதற்கு யார்மீது நோவதிலும் பயனில்லை. என் விதிதான் எல்லோரையும் பிடித்து ஆட்டுகிறது" என்று உணர்ந்தேன். "வாழாவெட்டி என்கிற பெயருடன் சாகவேண்டுமென்று சாகசம் செய்தாளே! இறந்தாளா! இறப்பது இவள் கையிலா இருக்கிறது? இன்னும் எத்தனை லோல் படவேண்டுமோ பாவம்!"...என்று ஊரார் பரிகஸிக்கவும் தொடங்கினர்கள்.

என் விஷயத்தில் எமனும் விரோதியே ஆகிவிட்டான். நான் என்ன செய்வேன்? மனமோ அளிந்த புண்ணுகிவிட்டது. வீட்டிலுள்ளோருக்கு அடிமையாகி ஓர் ஊழியக்காரி போலானேன். பெற்றோரின் சண்டையினுலேயே என்கதி இவ்விதமாகியும் அவர்களாலும், அண்ணன், தம்பிகள், அண்ணன் மனைவிமார்கள் முதலியோராலும் நான் புழுவிற்குச் சமானமாக மதிக்கப் பெற்றேன். அதன் மூலம் எத்தனை விதமான கஷ்டங்கள் உண்டோ அத்தனையும் அனுபவித்தேன்.

கடைசியில் பலன் என்ன! ஒன்றுமே இல்லை. இங்கும் ஒதுக்கப்பட்டவள். அங்கும் நீக்கப்பட்டவள். மத்தியில் எனது வாழ்க்கையின் நிலைமை எங்ஙனம் இருக்குமென்று கூறவேண்டுமா? என் புருஷன் என்ற மகானுபாவனை அந்த அலங்கோல கல்யாண காலத்தில் பார்த்தது சற்றும் எனக்கு ஞாபகமே இல்லை. அவருடைய முகத்தையாவது கண்டு களிப்பதற்கு, எனக்கு பாக்யமே கிடைக்காது போய்விட்டது.

பெற்றோரிடமும் பிறந்தோரிடமுமே அடிமை வாழ்க்கை வாழ்வதை விடப் பிறரிடம் அடிமையாக இருந்து காலத்தைக் கடத்தலாமே என்றும் தைரியம் உண்டாகியது. என்ன செய்வதென்று வகையறியாது தவித்தேன். இதன் மத்தியில் தாயும் தந்தையும் பரலோகம் போய்விட்டார்கள். பெற்றோர்கள் இருக்கும்போதே பட்ட சிறுமைகள் போதும். இனிமேல் கேட்கவேண்டுமா?

பாட்டீ! என்னுடைய பிறவியே பாழாகிவிட்டது. இனி, இக்கட்டை எக்கதியானுல் என்ன என்ற வெறுப்பும் மனக் கசப்பும் ஏற்பட்டுவிட்டதால், வீட்டில் அண்ணனிடம் சொல்லிவிட்டு, விடைபெற்றுக்கொண்டேன். வீட்டில் குடியிருந்த பாட்டி யாத்திரை கிளம்பினுள்; அவளோடு நானும் சென்றேன்.

முல்லையூர் என்ற க்ஷேத்திரத்தில் முருகக் கடவுளைத் தரிசிக்கச் சென்றோம். அந்த ஊரில் ஓர் புண்ணியத் தாயார் தம்முடைய பெருந்திரளான செல்வத்தைக் கல்விக்குப் பயன்படுத்த எண்ணி, ஓர் தர்ம வித்யாலயம் ஸ்தாபனம் செய்திருந்தார்கள். அந்த மகிமையைக் கேள்வியுற்று அங்கு சென்று அந்த அதிகாரியம்மாளின் சிபார்சைப் பெற்று அந்த ஆசிரமத்தில் நானும் படிக்கச் சேர்ந்தேன்.

ஏற்கெனவே எனக்குத் தெரிந்த படிப்புடன் சுமார் 7 வருட காலம் அங்கு வெகு அக்கரையுடன் படித்து, சில பரீக்ஷைகளில் தேறினேன். அதன் பிறகு அங்கிருந்து என்னை அவர்களே ஓர் ஜெமீந்தார் வீட்டுப் பெண்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் உத்யோகத்திற்குச் சிபார்சு செய்து அனுப்பினர்கள்.

நானும் மிக்க சந்தோஷத்துடன் அன்று முதல் இன்றுவரையில் அந்த ஜெமீந்தார் வீட்டிலேயே பெண்களுக்கு படிப்பு, தையல் வேலைகள் முதலியன சொல்லிக்கொடுத்து, மாதம் 40 ரூபாய் சம்பளம் பெற்று வருகிறேன். என் ஒரு சாண் வயிற்றிற்கு ஒருவேளை புசிப்பதும், ஒருவேளை வெறுமனே கிடப்பதுமாக விருக்கிறேன்.

எனக்குச் சம்பாத்தியமும் கௌரவமும் ஏற்பட்டதை யறிந்த அண்ணன், அண்ணி முதலியோர் இப்பொழுது விழுந்து விழுந்து என்னை யழைக்கின்றார்கள். முன்பு லக்ஷ்யமற்ற கட்டையா யிருந்த நானே கையில் காசு நடமாடும் வேலை கிடைத்து விட்டதென்றால் மதிப்புடன் பிரகாசித்துவிட்டேனு?.... போதும் போதும். இனிமேல் அம்மாதிரி வாழ்க்கையே வேண்டாம். என் காலத்தை இப்படியே கடத்திவிட எண்ணி மறுத்துவிட்டேன். இதுதான் பாட்டி எனது பிறவிச் சரிதை... இன்னும் என்புருஷன் யாரென்று எனக்குத் தெரியாது"...என்று கூறி விசனித்தாள்.

இதைக் கேட்ட கிழவி, "என்ன விசித்திரமான சம்பவம்!... நான் உன் வருத்தத்திற்குக் காரணம் யாதோவென்று நினைத்தேன். இத்தனை துக்ககரமானதா உன் சரிதம்...சீச்சீ! கல்யாணத்தில் சண்டைகள் வந்தாலும் பெரியாரின் பொல்லாப்பில் சிறு பெண்ணாகிய உன்னை உன் கணவன் சந்தியில் விட்டது தருமமா! சீச்சீ! இது மிக்க அக்ரமம்! அநியாயம்!...உம்...விதி விதி என்று சொல்லிக் கொண்டே மனிதர்கள் செய்யும் சதி பெரும் பாதகமாக விருக்கிறது. உம். நீ எழுந்திரும்மா! நான் கிழக்கட்டை என்ன செய்யப் போகிறேன். என்ன சொல்லப் போகிறேன்!" என்று பலபல

வென்று கண்ணீர் உதிர்த்தாள். சில நாட்கள் சென்றன.

*　*　*　*　*

ஒரு உத்தியோகஸ்தர் தமது உத்யோகத்தின் நிமித்தம் பத்மபுரிக்கு வந்தார். அவர், இந்த ஜெமீந்தாரின் பங்களாவில் விருந்தாளியாக அழைக்கப்பட்டு இவ்விடம் தங்கினர். ஜெமீந்தாரின் மகனும் வந்த விருந்தாளியும் சாப்பிட்டுவிட்டுத் தாம்பூலம் தரித்துக் கொண்டே சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

அதற்கடுத்த அறையில் ஜெமீந்தார் வீட்டின் உடைகளைத் தையல் மிஷினில் நமது மீனுக்ஷி தைத்துக்கொண்டும், கத்தரித்துக் கொண்டு மிருந்தாள். அப்போது அகஸ்மாத்தாக விருந்தாளியின் குரலில்...."ஆமாம் சார்! அது 6 வயது பொம்மைக் கல்யாண விஷயம். யாருக்கு நினைவிருக்கிறது?" என்ற வார்த்தைகள் அவள் காதில் பட்டதும் திடுக்கிட்டுத் துணிகளைப் போட்டுவிட்டு எழுந்து வந்து கதவருகில் நின்று இடுக்கின் வழியே உற்றுப்பார்த்தாள்.

மன்மத ஸ்வரூபம் போன்றும் கம்பீரமான தோற்றத்துடனும் விருந்தாளியாகிய துரைராஜா என்பவர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

ஜெமீந்தார் :—உலகம் பலவிதம்! உண்மை எதுவும் தெரிவதில்லை. கல்யாணத்திற்கு வேண்டிய சகல காரியங்களும் முடிந்து கல்யாணமும் நடந்து தாலி கட்டிய பிறகு இப்படியொரு சண்டை வருமோ! உங்கள் பிதாவின் அழைப்பிற்காக நானும் வந்திருந்தேன். நீர் சிறு பிள்ளை...ஆமாம். அந்தப்பெண் இறந்துவிட்டாள் என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் அந்தப் பெண் ஓடிப்போய் விட்டாள் என்றும், கெட்டுவிட்டாள் என்றும், ஏதோ நாடகத்தில் நடிப்பதாயும் எத்தனையோ சொல்லுகிறார்கள். யாருக்கு உண்மை தெரியும். உமக்கு ஒன்றுமே தெரியாதா!

துரைராஜா :—சார்! அவ் விஷயங்கள் இப்போது வேண்டாம். பூர்வ ஜன்மாந்திரத்துக் கருமங்களை அவரவர் அநுபவித்துத் தானே தீர வேண்டும். உண்மை எதுவோ, பொய் எதுவோ! என் தாய் தந்தையரின் கொடுமையினாலும், அந்தப் பெண்ணினுடைய பெற்றோரின்கொடுமையினாலும் ஒரு பெண்ணின் பிறவி பாழாகி விட்டது. இதை யார்தான் ஒப்பமுடியும்? எல்லாம் காலவிதி— என்று கூறும்போது அவனை யாரோ அழைப்பதாக ஆள் வந்தான். உடனே எழுந்து போய்விட்டான்.

கதவின் இடுக்கிலிருந்து பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டு மிருந்த நம் வனிதாமணியின் நிலைமையைக் கூறவேண்டுமா ? ஹா ! இவரா நமது பிராணகாந்தர் ! இவருக்கா நான் மாலை சூட்டி வாழ்க்கைப்பட்டேன். என்ன இது ! நான் கண்டதும் கேட்டதும் உண்மையான காக்ஷியா ? என்னுடைய பிராணநாதரா இவ் விருந்தாளி... என்ன ஆச்சரியம் ! என்னே மன மகிழ்ச்சி !" என்று தனக்குள் நவித்தாள். நிலை கலங்கித் தத்தளித்தாள். நான்தான் உமது மனைவி என்று சொல்லிவிடலாமா வென்றும் நினைத்தாள்.

"ஹா !...அம்மாதிரி சொல்வதால் என்ன பயன் !...என்பேரில் அடாத பழியும், தகாத உரையும், நான் கெட்டுவிட்டவள் என்று உலகம் கூறுவதாக ஓர் காற்று உலாவுவதாகத் தெரிகின்றதே ! இதென்ன அக்ரமம் ! இந்த ஜெமீந்தாரே அந்த அநியாயத்தையுங் கூறி இருக்கிறாரே ! இது போன்று அவர் மனத்தில் இன்னும் எத்தனை விஷயங்களைக் கட்டுக்கதையாக்கிச் சொல்லி இருக்கிறார்களோ தெரியவில்லையே !...ஆம்...ஆம்...இப்படித்தான் செய்ய வேண்டும். திடீரென்று சொல்வதில் உபயோகமில்லை"...என்று தனக்குள் ஓர் முடிவுக்கு வந்தாள்.

* * * * *

துரைராஜாவுக்குச் சற்றும் எதிர்பாராவிதமாக ஜுரம் வந்துவிட்டது. அசாத்தியமாக அடிக்கிறது. அவர் ஜெமீந்தார் வீட்டிலேயே ஒரு அறையில் படுத்துவிட்டார். ஜெமீந்தாரின் டாக்டர் வந்து பார்த்துவிட்டு, "ஜுரம் கடுமையாக விருக்கிறது. ஓயாமல் ஐஸ் வைக்கவேண்டும். ஒரு நல்ல நர்ஸை ஏற்பாடு செய்யுங்கள்" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

இதைத் தூரத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த மீனாக்ஷியின் தலையில் இடி இடித்ததுபோலாகிவிட்டது. "ஐயோ ! மகா பாவி நான் வந்து பார்த்ததனாலேதான் இத்தகைய உடம்புக்கு நோய் வந்துவிட்டதோ !" வென்று கலங்கினாள். தன்னுடைய ரகஸியத்தை இச் சமயம் சொல்லவும் தயங்கி யோசித்தாள்...உடனே அவள் ஜெமீந்தாரின் எதிரில் தைரியமாகச் சென்று, "ஐயா ! தாங்கள் வீணாகச் செலவு செய்து நர்ஸ் வைக்கவேண்டாம். அக் காரியத்தை நானே செய்கிறேன். எனக்கு நர்ஸ் வேலையும் ஆசிரமத்தில் செய்து பழக்கமிருப்பதால், தாங்கள் அவ் வேலையை அடியாளிடமே கொடுக்கவேண்டும்" என்று கேட்டாள்.

பணத்தின் மீதே புரளுகின்றவர்களாயினும் பணச்செலவு செய்ய மனம் வராது. அதோடு சிக்கனமாக பணத்தை மிச்சம் செய்ய வழி சொல்கையில், அதை ஏன் வேண்டாமென்று சொல்லப்போகிறுர். உடனே ஜமீந்தார் அதற்குச் சம்மதித்துவிட்டார். மீனுக்ஷி அசல் நர்ஸைப் போலவே உடை அணிந்துகொண்டு, தன் ஆருயிர்க் கணவனின் பக்கலில் சென்று, ஐஸை வைக்கத் தொடங்கினுள்.

மனமோ சொல்ல வறியாத பலவித எண்ணங்களாலும், வேதனையினுலும் தத்தளிக்கின்றது. ஐஸை வைத்துக்கொண்டு ஓயாமல் கடவுளை வேண்டிக்கொண்டே இருக்கிறுள். உடம்பு வலி என்று 'ஹா, ஊ' வெனக் கத்தும் தன் கணவனின் தேகத்தை மெதுவாகப் பிடித்துவிட்டும், ஒத்தடங்கள் கொடுத்தும் வேளாவேளைக்கு ஆகாரமும் மருந்துகளும் கணக்குத் தவருதபடிக் கொடுத்து அவர் வாந்திசெய்யும்போதெல்லாம் தூக்கித் தன்மீது ஒரு கையினுல் தாங்கிக்கொண்டு, மற்ருெரு கையினுல் தடவிக்கொடுப்பதும், அவ்வப்போது படுக்கைகளை மாற்றிச் சுத்தமாகப் போடுவதும் அவ்வறையைப் பெருக்கி வெகு பரிசுத்தமாக வைத்திருப்பதும் அவ்வறையின் சமீபத்திலேயே ஆகாரம் தானே தயார் செய்து கொடுப்பதும் இரவு பகல் கண் விழித்து, பெற்ற அன்னையை விடப் பதின்மடங்கு அதிகரித்த அன்பும் கரைகாணு பிரேமையும் கருத்துங்கொண்டு மீனுக்ஷி செய்யும் பணிவிடைகளைக் கண்டு ஜெமீந்தார் வீட்டினரே பிரமித்தார்கள். துரைராஜா இவளை ஓர் நர்ஸாகவே எண்ணி அவனும் அளப்பரிய ஆச்சரியத்தை யடைந்து சந்தோஷித்தான்.

சுமார் ஒருவார காலம், தான் கனவிலும் நினையாதபடிக்குத் தன் கணவனுக்குச் சேவைசெய்யும் பாக்கியம் தனக்குக் கிடைத்ததைப்பற்றிக் கட்டுமீறிய களிப்புடன் தன் பிறவியிலேயே ஓர் உன்னத யோகம் கிடைத்துவிட்டது போல அவள் மகிழ்ந்தாள். இப்படி ஓர் ஊழியக்காரிபோன்று சேவை செய்யும் பாக்கியமாவது தனக்குக் கிடைத்தால் போதும் என்று மனமாரக் கடவுளைப் பிரார்த்தித்தாள்.

துரைராஜனுக்கு உடம்பு சிறிது குணமாகிவிட்டதால், அவன் தன் அலுவல்களைக் கவனிக்க ஊருக்குக் கிளம்பினுன். தன்னுடைய விஷயத்தில் இரவு பகலாக அரும் பாடு பட்டு கண்விழித்துக் கருத்துடன் அன்னையைப்போல் கவனித்துவந்த மீனுக்ஷியின் செய்கையை

என்றும் அவன் மறக்கவே முடியாதவனுனன். தனக்கு உழைத்த அந்த உத்தமிக்குத்தான் நிறைய சன்மானங் கொடுக்க எண்ணினுன்.

மீனுக்ஷியை அழைத்து, "அம்மணீ! நான் உங்களுடைய உபகார உழைப்பை என்றும் மறக்கமாட்டேன். நான் ஊருக்குப் போய்வருகிறேன். இதோ இந்தக் கவரை வாங்கிக்கொள்ளுங்கள்" என்று ஒரு கவரைக் கொடுத்துவிட்டுப் பதிலுக்கு நிற்காமல் போய் விட்டான்.

மீனுக்ஷிக்கு இந்தச் செய்கை மிக்க வியப்பையும் அடக்க முடியாத ஆச்சரியத்தையுங் கொடுத்தது. உடனே அவள் அக் கவரை உடைத்துப் பார்த்தாள். அதில் ஒரு கடிதமும், 100 ரூபாய்க்கு ஒரு செக்கும் இருக்கக் கண்டு மெய் மறந்தாள். உடனே கடிதத்தைப் படிக்கத் தொடங்கினுள்.

" அன்பு மிக்க அம்மணீ!

நான் தாங்கள் செய்த பேருதவிக்காக என்ன கைம் மாறு செய்வதென்றே தெரியாமல் விழிக்கிறேன். நான் பலதரம் நோய்வாய்ப்பட்டுப் படுத்ததுண்டு. என்னைப் பெற்ற அன்னையும் இரவு கண் விழிக்கும் விஷயத்திலும் அடிக்கடி ஒத்தடம் முதலியன கொடுக்கும் விஷயத் திலும் சில வேளை சலித்துக்கொண்டு பேசியது என் இத யத்தில் இப்போதும் இருக்கிறது.

பிறகு மனைவி ஏற்பட்டுச் செய்யுங்காலத்தில் மருந் தையும் ஆகாரத்தையும் நானே அருகில் வைத்துக் கொண்டு சாப்பிடுகிற நாட்களும் பல உண்டு. அதிக மாகிவிட்ட காலத்தில் தாதியும் வைத்ததுண்டு; ஆஸ்பத் திரியிலும் கிடந்ததுண்டு. ஆஸ்பத்திரியில் தாதியைத் தேடியழைக்கச் சில சமயங்களில் மற்ருேர் ஆள் தேவை யாக இருந்ததையும் நான் மறக்கவில்லை. வீட்டிலிருந்த தாதிக்கு வேளை தவருது ஆகாரம் செய்து அவளைத் திருப்தி செய்வதற்குள் என் வீட்டார் திணறிப்போய் விட்டதோடு, இராக்காலத்தில் அந்தத் தாதியை எழுப்பு வதற்கு, மற்ருெருவர் கண் விழித்திருப்பது அத்யா வச்யமாக இருந்தது.

அம்மணீ! இந்த மாதிரி உங்களைப் போன்று உப காரம் செய்தவர்களை நான் இதுவரை என் வாழ்நாளில்

கண்டதே இல்லை. என்னுடைய உள்ளம் எப்படி பூரிக்கின்றதோ அதை எடுத்துக்கூறச் சக்தியற்றவனாக விருக்கிறேன் ; மன்னிக்கவும். தங்கள் வரலாறுகள் தெரியாதென்றாலும் தங்களைப் பாரியையாக அடையப்பெற்றவர் பரம புண்ணியசாலி என்றும், தங்களைப் பெற்றோர் மகா பாக்கியசாலிகள் என்றும் நம்புகிறேன்.

தாயே ! இதோடு உள்ள வெகு சொல்பமான 100 ரூபாயை அங்கீகரிக்கவேண்டும் ; அதே என்னுடைய கோரிக்கை. நான் தங்களுக்குக் கொடுத்துவிட்ட சிரமத்திற்கு இதோர் வெகுமதியே யல்ல வென்பதையும் நான் அறிவேன். மன்னிக்கவும். மீண்டும் சந்திக்க நேர்ந்தால், கட்டாயம் மறக்கமாட்டேன்.

இங்ஙனம்
நன்றியுள்ள,
துரைராஜா."

இதைப் படித்ததும் தன் வாழ்நாளில் தான் என்றும் கண்டறியாத அபரிமிதமான ஆனந்தத்தை யடைந்தாள். தன் கணவனின் கைப்பட கிடைத்த கடிதமானது ஓர் பெரும் இன்பப் புதையல் கிடைத்ததுபோன்று அவளுக்குத் தோன்றியது. ஆனந்தக் கூத்தாடினாள் : அகமகிழ்ந்தாள். தான் பகிரங்கமாக என்று தன் கணவனிடம் போய்ச் சேரும் பாக்கியம் கிடைக்கு மென்று தவஞ் செய்யத் தொடங்கினாள்.

துரைராஜா சென்ற சில தினத்திற்குள்ளாகவே ஜமீந்தார் வீட்டினர் மீனாக்ஷியின்மீது சந்தேகங்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். துரைராஜா விஷயத்தில் இவள் நடந்துகொண்டது பரிசுத்தவதிகளுக்கு அழகல்ல. இவள் கெட்டுப்போனவள் என்ற எண்ணத்தை மனத்தில் வைத்துக்கொண்டு, வெளிக்குச் சொல்லாமல் ஏதோ சாக்குக் கூறி, இவளை வேலைக்கு வேண்டாம் என்று தள்ளி விட்டார்கள்.

தன்மீது பழி சுமத்தித் தள்ளியதை யறியாத மீனாக்ஷி அந்த வீட்டை விட்டுச் சென்று விட்டாள். தான் எப்படித் தன் புருஷனிடம் போய்ச் சேருவது என்ற பெரிய யோசனையே அவள் மனத்தில் போராடிக்கொண்டிருந்தது. தன் புருஷன் இருக்கும் ஊருக்கே வந்து, அவன் இருக்கும் வீதியிலேயே உள்ள பள்ளிக்கூடத்தில் தன்

னுடன் ஆசிரமத்தில் படித்த ஓர் சினேகிதையான கமலா வேலை யாக இருப்பது ஞாபகம் வந்தது.

தன் காரியத்தின் நிமித்தம் பழய சினேகிதையின் உறவைத் தேடிக்கொண்டு அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வந்து தன் சினேகிதை யைச் சந்தித்துப் பழய கால வர்த்தமானங்களைப் பேசி அவளுடைய விருந்தாளியாக அமர்ந்தாள். கமலா, ஓர் கைம்பெண்ணுகையி னுல், அவள் தன்னுடைய வயதான தாயாருடன் தனி வாழ்க்கையே நடத்துகிருள். அவளுடன் நமது மீனுக்ஷியும் இருப்பது வெகு பொருத்தமாயும் சந்தோஷமாயும் இருந்தது.

கமலத்துடன் பள்ளிக்கூடத்திற்குச் சில வேளைகளில் மீனுக்ஷி யும் வருவாள். துரைராஜாவின் 7 வயது பையனும் 9 வயது பெண் ணும் இந்தப் பள்ளிக்கூடத்தில் படிப்பதைக் கமலத்தின் மூலமாகத் தெரிந்துகொண்டு அபாரமான சந்தோஷத்தை யடைந்தாள். அந்தக் குழந்தைகளைக் கண்டதும் தன்னை யறியாத ஓர் குதூகலமடைந் தாள். அக் குழந்தைகளைப் பார்ப்பதால் தன் புருஷனைப் பார்ப்பது போன்று அவளுக்குப் பெரிய ஆனந்தம் உண்டாகியது.

துரைராஜனுடைய பெண்ணோ மகா புத்திசாலி; வெகு கெட் டிக்காரி. ஒரு தினம் அந்தப் பெண் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை; மறுநாள் வந்தாள். 'நேற்று ஏன் வரவில்லை?' என்று மீனுக்ஷி கேட் டாள். அதற்கு அந்தப் பெண் வெகு தெளிவுடனும் சாமர்த்திய மாயும் 'எங்கள் வீட்டில் நேற்று ஓர் அமர்க்களமாகிவிட்டது. எங்க அப்பாவுடைய ஆபீஸ் பேப்பர் முக்கியமானதில் எங்கம்மா தெரி யாத்தனமாக ஏதோ சாமான் பொட்டணங் கட்டி அழுக்காக்கி யும், கிழித்தும் விட்டாளாம்.

மாமீ! எங்கம்மா சற்று அசடு; ஒன்றுமே தெரியாது. இதனல் எங்கப்பாவுக்கு மிக மிகக் கோபம் வந்துவிட்டது. அந்தப் பேபர் அத்தனை முக்கியமானதாம்; அதனல் என் தந்தையின் வேலைக்கே ஆபத்து வந்துவிடுமாம். அதற்காக அவர் ஓயாது விசனித்துக் கொண்டு தத்தளிக்கிருர்" என்று சொல்லும்போதே மீனுக்ஷிக்கு மிக்க கவலையும் பரிதாபமும் உண்டாகிவிட்டன. சற்று யோசித்தாள்.

உடனே ஒரு யோசனை தோன்றியது. அதாவது மொட்டைக் கடிதம் ஒன்று எழுதி அன்று மாலையே அவனுக்கு நேரில் சேரும் படி அதைத்தபாலில் போட்டுவிட்டாள். அது அன்று மாலையிலேயே துரைராஜாவுக்குக் கிடைத்தது. அதை அவன் படித்தான்.

"ஐயா! இது ஓர் மொட்டைக் கடிதமென்று அலக்ஷியம் செய்யவேண்டாம். உம்முடைய மிக்க தத்தளிப்பான சமயத்தை நான் அறிந்து விசனிக்கின்றேன். சிறு துரும்பாயினும் பல் குத்த உதவும் என்பதை மறக்காதீர்கள். தாங்கள் பைஸிகிள் வண்டியில் செல்லும் பழக்கமுடையவராகையினுல் நான் சொல்லும் யோசனை மிகவும் பொருத்தமானதாக விருக்கும்.

அதாவது:—ஈசனருளால் மழை பெய்து கொண்டிருக்கிறது. நாளைக் காலையில் மழை நின்றுவிட்டாலும் தெருவில் உள்ள சேறும் தண்ணீரும் காய்ந்துவிட முடியாது. ஆகையினுல், நாளைக் காலையில் உங்கள் பேபர் கட்டுகளை எல்லாம் சற்று தளர்த்தியாகக் கட்டி ஸைகிளில் வைத்து மேலே ஜாக்ரதையாக மெழுகு சீலை போட்டு மூடிக்கொண்டு ஸைகிளில் ஆபீசுக்குப் புறப்படும்.

வழியில் எந்த இடத்தில் சற்றுப் பள்ளமாக சேறு தங்கியிருக்கிறதோ அந்தப் பக்கம் செல்கையில் எதிரிலே சைகிளோ, மோட்டாரோ வேறு வண்டியோ வருவதைச் சமயம் பார்த்திருந்து மோதிய பாவமாக வண்டியுடன் கீழே விழுந்துவிடும். இது ஆபத்துமில்லை. அவமானமும் இல்லை. எதிர்பாராது நேர்ந்த விபத்து என்று முடிவாகிவிடும். பேபர்களில் சில சேற்றில் நனைந்து விடும். அப்போது முன்பு அழுக்காகிக் கிழிந்துவிட்டதும் அடிபட்டுவிடும். அதிகாரிகள் விபத்தைக் கண்டு இரங்குவார்களேயன்றிக் குற்றம் சுமத்தமாட்டார்கள். நீரும் அடிபட்டதாக நடிக்கவேண்டும். வண்டிகள் சாக்கு ஒன்றும் கிடைக்கவில்லையென்றுல், தலை சுற்றி மயக்கம் வந்ததாக நடித்துச் செய்துவிடுங்கள். இது சரியான பலனைக் கொடுக்கும் என்பது எனது நம்பிக்கை.

ஐயா! இந்த அதிகப் பிரஸங்கி யார் என்று எண்ண வேண்டாம். உலகத்தில் ஈசனுல் படைக்கப்பட்ட ஜீவ கோடிகளில் இப் பாவியும் ஒன்றுகும்.

இங்ஙனம்,

உங்கள் நன்மையைக் கோரும்

.........,

இதைப் படித்ததும் துரைராஜனை ஒரு கலக்குக் கலக்கியது. "ஐயையோ! இந்த வெகு ரகஸியமான விஷயம் எப்படி வெளியில் பரவி இருக்கும்? இதை யார் அறிந்து இம் மொட்டைக் கடிதம் வரைந்திருக்கிறார்கள்?"......என்றதுபோன்று பல குழப்பங்களும் யோசனைகளும் உண்டாகிவிட்டன. கடிதத்தில் கண்டுள்ள யோசனையோ மிகவும் பொருத்தமானதும் பலனைக் கொடுக்கக் கூடியதுமாக விருப்பதால், இதை யார் தெரிந்து எழுதியிருப்பார்கள் என்று தெரியாது திகைத்தான்....

"உம்....ஈச்வரோ ரக்ஷது" என்கிறபடி விட்டுவிடவேண்டியதுதான். இனி என்ன எண்ணி என்ன பலன். இக் கையெழுத்தைப் பார்த்தால் ஓர் பெண்மணியினதுபோன்று மிருக்கிறது" என்று ஒன்றும் புரியாது சிறிது நேரம் குழம்பிக் கிடந்தான்.

"வேண்டுமென்று யாராவது விரோதிகள் விஷயத்தை யறிந்து கொண்டு நம்மை வீதியில் பத்து பெயருக்கு மத்தியில் விழ வைத்து வேடிக்கை பார்க்க இம்மாதிரி குறும்புத்தனமாக எழுதி விட்டார்களா! அவ்வாறு நமக்கு விரோதிகள் நாம் அறிந்த வரையில் யாருமே இல்லையே!....அப்படிக்கொன்று மிராது. இது ஏதோ அதிசயக் கடிதமாக விருப்பதேயன்றி விஷயம் மிகவும் முக்கியமானதாக விருப்பதால் கடவுள்மீது பாரத்தைப் போட்டுவிட்டு இம் மாதிரியே செய்து எனது முதல் ஆபத்தைத் தீர்த்துக் கொள்கிறேன்" என்று தனக்குள் ஓர் முடிவுக்கு வந்துவிட்டான்.

மறுதினம் காலையை எதிர்பார்த்தவாறே அக் கடிதத்தைப் பல முறைகள் படித்தான். 'இதில் விரோத பாவமிருப்பதாகத் தெரியவில்லை. எல்லாம் நன்மைக்கே என்கிற உதாரணத்தையே கைக்கொள்வோம்' என்று துணிந்துவிட்டான்.

தன் கட்டுகளை, சைகிளில் வைத்து மேலுடன் ஒருவாறு கட்டி விட்டுக் கடவுளைப் பிரார்த்தித்தபடியே சைகிளில் ஏறி ஆபீசை நோக்கிச் சென்றான். வழி எல்லாம் சேறும் தண்ணீரும் சதசத வென்று இருந்தன. வெகு கவனமாயும் சமயத்தை எதிர்பார்த்தபடியும் சென்றான்.

அச்சமயம் எதிரில் ஒரு மோட்டார் கார் வேகமாக வந்தது. அதையே சந்தர்ப்பமாகக் கொண்டு சைகிளை சமயம் பார்த்து அந்தக்காரின் மட்கார்டில் இடித்துத் தான் விழுந்துவிட்டதுபோல சைகிளுடன் சேற்றில் விழுந்துவிட்டான். சைகிளில் கட்டியிருந்த

கட்டும் சேற்றில் நனைந்துவிட்டது.

வீதியில் இம்மாதிரி ஓர் சம்பவம் நடப்பதென்றால், கும்பு கூடுவதற்குக் கேட்கவேண்டுமா! அந்த க்ஷணமே ஏராளமாகக் கூட்டங் கூடிவிட்டது.

உடனே காரை ப்ரேக்கு போட்டு நிற்க வைத்தார்கள். காருக்குள்ளிருந்த இரண்டு ஸ்திரீகள் வெகு பதைபதைப்புடன் இறங்கி, வண்டியோட்டியைக் கண்டவாறு திட்டியபடியே கீழே விழுந்து கிடக்கும் சைகிளையும், சேற்றில் விழுந்து உடம்பெல்லாம் சேறும் தண்ணீருமாக நிற்கும் துரைராஜாவையும் கண்டதும் திடுக்கிட்டு நடுங்கிப்போய் விட்டார்கள்.

வண்டியைவிட்டுக் கீழே இறங்கிய பெரியம்மாள்...“தாங்களா விழுந்துவிட்டீர்கள்?...ஐயோ! நான் என்ன செய்வேன்? இக்கட்டுகளென்ன ஆபீஸ் கட்டுகளா! ஐயையோ! எனக்கு மிக்க விசனமும் பயமுமாக இருக்கிறதே!”...என்று தவித்தாள்.

அவ் வண்டியில் அவர்களுடன் வந்த மீனாக்ஷி திடீரென்று இறங்கி அந்தக் கட்டுகளைப் பொறுக்கி வரிசையாகத் தட்டி வைத்து “ஐயா! உங்களுக்கு அடி பட்டுவிட்டதா!”....என்று குயில்போலக் கேட்டாள். துரைராஜனுக்கோ ஒருபுறம் அவமானம்; ஒருபுறம் நடிப்பு. இதோடு அந்த வண்டியைப் பார்த்த உடனேயே இது தனது ஆபீஸ் எஜமானரின் மோட்டார் என்று தெரிந்துகொண்டதோடு, அந்த அம்மாள் அவருடைய மனைவி என்பதையும் அறிந்து கொண்டு, அளப்பரிய ஆச்சரியமும், கடவுள் செய்துள்ள லீலைக்கு அபார சந்தோஷமும் அடைந்தான்.

உடன் வந்திருப்பவர்கள் தன் எஜமானரின் பெண்களாகத்தான் இருக்கவேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துவிட்டதால் அவர்களைத் தலை நிமிர்ந்தே பார்க்கவில்லை. மீனாக்ஷியின் குரல் கேட்டதும் இது எங்கோ கேட்ட குரல்போன்று இருக்கின்றதே என்று நிமிர்ந்து பார்த்தான்.

முன்னிலும் மெலிந்த தேகத்துடனும் மிக்க வணக்கத்துடனும் நிற்கும் மீனாக்ஷியைக் கண்டதும்...‘ஹா...தாங்களா! சௌக்யமா! இங்கு எப்போது வந்தீர்கள்?...என் வீட்டிற்கு வரலாகாதா?... எனக்கு அடி அதிகமாகப் படவில்லை. ஏதோ கொஞ்சந்தான் பட்டிருக்கிறது’...என்று இவன் கூறி முடிப்பதற்குள், அந்த எஜமானியம்மாள் தன் மகளையும் மீனாக்ஷியையும் நோக்கி, “அம்மா!

இன்று புறப்பட்ட வேளை சரி இல்லை. நீங்களிருவரும் ஓர் டாக்ஸி கார் வைத்துக்கொண்டு நேரே வீட்டிற்குப் போய்விடுங்கள். நான் இவரை ஆபீஸில் கொண்டுவிட்டு அப்பாவிடம் நடந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு வருகிறேன். இவைகள் முக்கியமான ஆபீஸ் கட்டு களாகையினுல் எனக்கு மிக்க பயமாக விருக்கிறது" என்று கூறி, உடனே ஒரு வாடகைக் காரையும் அமர்த்தி, அவர்களை ஏற்றி அனுப்பிவிட்டாள்.

மீனுக்ஷி காரில் ஏறினபடியே, "நான் வந்து பத்து தினங்களா கின்றன. பிறகு சந்திக்கின்றேன்" என்று கூறிச் சென்றுவிட் டாள். எஜமானியம்மாள் வண்டியில் துரைராஜாவையும், சைகிள், கட்டுகள் முதலியவைகளையும் ஏற்றிக்கொண்டு, மிக்க பயத்துடன் நடுநடுங்கியவாறு ஆபீசை நோக்கிச் சென்ருள்.

இவர்கள் தற்கால நாகரிகத்தில் முதிர்ச்சி பெற்றவர்களாகை யினுல் இந்தம்மாள் தினந்தோறும் மாலையில் தான் காரோடு வந்து தன் புருஷனை அழைத்துச் செல்வது வழக்கம்; ஆகையினுல், நேரே ஆபீஸுக்குச் சென்ருள். உள்ளே பயம் உதறுகின்றது. தன் னுடைய எஜமானரின் தனி அறைக்குச் சென்று விடவிடத்தவாறு, "நாதா! மன்னிக்கவேண்டும்; இன்று நமக்கோர் கண்டம் தவறிய தாக நினைக்கவேண்டும். நமது ட்ரைவரின் அஜாக்ரதையினுல் இதோ நம் ஆபீசைச் சேர்ந்த துரைராஜா ஏறிவந்த சைகிளில் நமது வண்டி மோதி இவர் அப்படியே சைகிளோடு சேற்றில் விழுந்து சிறிது காயமும் ஏற்பட்டுவிட்டது. இவர் கொண்டுவந்த கட்டுகளெல்லாம் சிதறிவிட்டன. எல்லாம் சேருகிவிட்டது. இவரென்னவோ மெழுகு சீலைகூடப் போட்டுக் கட்டியிருந்தார். கார் மோதிய வேகத்தில் சைகிளும் உடைந்துவிட்டதாக நினைக்கிறேன். நமது நற்காலந்தான் இவர் பிழைத்தார். நாமும் தப்பினேம். நீங்கள் தயவு செய்து என்னை மன்னிக்கவேண்டும்......என்று பயந்தவாறு கூறினுள்.

இம்மாதிரி எதிர்பாராத விஷயத்தைக் கேட்டதும் எஜமானர் திடுக்கிட்டார். எதிரில் நிற்கும் துரைராஜனின் வேஷத்தைப் பார்த்து திடுக்கிட்டு பரிதாபப்பட்டுத் தன் ட்ரைவர்மீது சீறி விழுந் தார். வேருெரு கிளார்க்கை அழைத்து, "இந்தக் கட்டுக்களை உடனே துடைத்துச் சரியாக்கிவிடு. கிழிந்திருந்தால் வேருெரு நகல் எடுத்து இதோடு கூட வை" என்று உத்தரவிட்டுப் பின்பு ராஜனை நோக்கி, "சார்! என் மோட்டாரினுலேயே உமக்கு விபத்து

நேர விருந்ததற்கு மிகவும் வருந்துகிறேன். ஏதோ கடவுளுடைய கிருபையினுல் இதுமட்டோடு தப்பியதற்காக சந்தோஷப்படுகிறேன். நீர் இந்த எதிர்பாராத விபத்து நேர்ந்ததற்காக என் மனைவியையும் என் ட்ரைவரையும் மன்னிக்கவேண்டும். உமது சைகிளை மாற்றி விட்டு, புதிய சைகிளொன்று இன்றே வாங்கிக்கொள்ளும். இதோ செக்கு...சரி....நீர் வீட்டிற்குச் சென்று ஸ்நானம் செய்துவிட்டு முடியுமானுல் வாரும். இல்லையேல் இன்று முற்றும் ஓய்வு எடுத்துக் கொண்டு நாளைக்கு வாரும்." என்று கூறினுன்.

இந்த அதியாச்சரியத்தைக் கண்ட துரைராஜாவின் சந்தோஷத் திற்கோ எல்லையே இல்லை. இந்த மொட்டைக் கடிதம் சாமானிய மானதல்ல. இது ஏதோ ஒரு தெய்வந்தான் அப்படி எழுதி அனுப்பி இருக்கிறது என்று கூறத் திறமற்ற வியப்பும் சந்தோஷமும் அடைந் தான். தானே வேண்டுமென்று செய்த காரியத்திற்கு இவரிடம் பணம் வாங்குவது சரியல்லவென்றெண்ணி, அதற்கு மறுத்துவிட்டு வந்தனம் செய்து விடை பெற்றுக்கொண்டு, நாளை வருவதாகவே சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான்.

அவனுடைய முதல் நாள் வாழ்க்கையில் இருந்த வேதனையும் பயமும் எதிர் காலத்தைப்பற்றிய பயங்கரமும் இன்று சூரியனைக் கண்ட பனிபோல மறைந்து சந்தோஷச் சூரியனுய் உதயமாகி விட்டதானது அவனுல் தாங்க முடியாத சந்தோஷத்தை யுண்டாக் கியது. இந்த மொட்டைக் கடிதத்தைப் பலதரம் படித்தான். அவனுடைய மனம் முற்றும் அதே மொட்டைக் கடிதத்தில் சென்று லயித்து இதை யார் எழுதி இருக்கக்கூடும் என்ற பெரிய ஆவலும் அடக்கவியலாத எதிர்பார்ப்பும் உண்டாகிவிட்டன. எத்தனை யோசித்தும் இன்னதெனப் புலப்பட வழி காணவில்லை.

* * * *

மேலே நடந்த சம்பவங்கள் நிகழ்ந்து ஒரு மாத காலமாயிற்று. துரைராஜன் ஒரு தினம் ஆபீஸுக்குப் புறப்படும்போது ஒரு கடிதம் வந்தது. அதைப் பிரித்துப் பார்த்தான்.

"அன்பார்ந்த ஐயா!

நான் திடீரென்று நோய் வாய்ப்பட்டுக் கிடப்பதால் கடைசிதரமாகத் தங்களைப் பார்க்க வேண்டுமென்று என்னுல் தடுக்கவியலாத ஆவல் தூண்டுகிறது. தயவு செய்து கீழே காணும் விலாசத்திற்கு வர வேண்டுமென

மிகவும் தாழ்மையுடன் மன்றாடிப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

மீனாக்ஷி (நர்ஸ்)''

அதைப் படித்த உடனே அவனுக்கு மனம் மிகவும் இளகி விட்டது. தன்னுடைய உயிர் போகும் ஆபத்தான சமயத்தில் தன்னருகிலேயே இருந்து இராப்பகலாக அரும்பாடு பட்ட வனிதை யல்லவா! கட்டாயம் சென்று பார்த்து வரவேண்டும்—என்று தீர்மானித்துக் கடிதத்தை ஜோபியில் போட்டுக்கொண்டான்.

அன்று தன் ஆபீஸிலிருந்து நேரே அந்தக் கடிதத்தில் கண்ட விலாசத்திற்குச் சென்றான். அங்கு ஓர் கயிற்றுக் கட்டிலில் உலர்ந்துபோய் அடையாளமே கண்டுகொள்ள முடியாத விதம் மீனாக்ஷி படுத்திருந்தாள். அவள் பக்கத்தில் ஒரு வேலைக்காரக் கிழவி உட்கார்ந்திருந்தாள்.

சில பழ வகைகளை துரைராஜன் வாங்கிக்கொண்டு போயிருந் தான். அவற்றை அங்குள்ள மேஜையின் மீது வைத்துவிட்டு, "அம்மணீ! உடம்பு எப்படி இருக்கிறது? என்ன உடம்பு?" என்று கேட்டவாறு அங்குள்ள ஆசனத்தில் அமர்ந்தான்.

அவனைக் கண்டதுமே மீனாக்ஷியின் உள்ளம் பூரித்தது. அவளு டைய இருதயத்தில் அவளால் தாங்கக் கூடாத ஓர்விதமான சந்தோஷமும் உணர்ச்சியும் எழுந்தன. மலர்ந்த முகத்துடன் "வாருங்கள்! வாருங்கள்! இந்த ஏழையின் மீது கருணை கூர்ந்து வருவீர்களோ, மாட்டீர்களோ என்று நினைத்திருந்தேன். சுமார் ஒரு மாத காலமாக உடம்பு சரியாக இல்லை. எனக்கே என் நிலைமை தெரியாதா? மிகவும் கேவலமாகிக்கொண்டு வருவதால்........... மேலே கூற மாட்டாது தவிக்கிறாள். கண்ணீர் பெருகுகின்றது. அப் படியே முகத்தை மூடிக்கொண்டாள். தேம்பித் தேம்பி அழுதாள்; அடக்க முடியாதபடி துக்கம் வந்துவிட்டது.

துரைராஜன்:—(இதைக் கண்டு கலங்கிப் போய் விவரமறியாத வனாகையினால்) அம்மணீ! ஏன் புலம்புகின்றீர்கள்? உடம்பு குண மாகாது என்று அதைரியப்படுகிறீர்களா! அவ்வாறு ஒன்றும் இருக்காது. உங்களைப் பார்த்தால் மிகவும் தெளிவாக விருக்கிறீர்கள். பயப்படவேண்டாம்; அழாதீர்கள்......உங்களுக்கு இங்கு சகாயத் திற்கு யார் இருக்கிறார்கள்?

மீனாக்ஷி:—ஐயோ! எனக்குப் பயமா! நான் சாவுக்குப் பயப்

படுவதாகவா நினைக்கிறீர்கள்? பல வருடங்களுக்கு முன்பே நான் சாகத் துணிந்து குளத்தில், கிணற்றில் விழுந்தும், விஷம் உண்டும் சாவை எதிர் நோக்கினேன்......நான் மகாபாவி......கொடும்பாவி ......ஆகையினால் இத்தனைக்கும் குண்டுபோலப் பிழைத்துக் கொண் டேன். நிமிடத்திற்கு நிமிடம் சாவை நான் எதிர்பார்ப்பது அந்தப் பகவானுக்குத்தான் தெரியும்......இப்போதாவது ஒருகால் இப் பாவியின் மீது மனமிரங்கி, காலனும் என்னைச் சேர்த்துக் கொள் வானோ என்று சந்தேகமே அடைகிறேன்.

ஐயனே! நான் எனது கடமைகளைக் கூடச் செய்யும் பாக்யம் அற்ற கட்டையானேன். எனது பிறவியில் நான் இன்ப மடைந் திருப்பேன் என்று இருக்குமாயின் அது இரண்டே முறைகளில் தான். இனி, மூன்றும் முறையை எதிர் நோக்குகிறேன். ஒன்று ஜமீந் தாரின் வீட்டில் தங்களுக்கு—என் ப்ராணநாதருக்கு, 6 வயதில் மணந்திருப்பினும் நான் உரிமையுடைவளே யாவேன்—தாதியாக விருந்து சொல்ப தினங்கள் பணிவிடை செய்து மகிழ்ந்தேன்.

இரண்டாந்தரமாக என்னுருயிர்க் கணவரின் விபத்தை நீக்க மொட்டைக் கடிதமெழுதி விபத்தைப்பக்குவமாக நீக்கும்பொருட்டு முதலாளியின் மனைவியையே நான் ஓர் காரியமாகச் சினேகஞ் செய்து கொண்டு அந்தச் சமயத்திற்கு அவ்வழியே வரச்செய்து அதே காரினால் விபத்து உண்டாகியதாகக் காரணங் காட்டினேன். இவ்விரண்டே என் வாழ்வுநாளில் செய்யக் கிடைத்த பலன்க ளாகும்.

இப்பாவியின் கடைசி காலத்திலாவது இக்கட்டையை அதற்கு உரியவரிடம் சேர்ப்பித்து விடவேண்டும் என்ற ஓர் தீவிரமான வேட்கை தோன்றியதால், இக்கடிதம் எழுதினேன். நாதா! நான் விதிவசத்தினால் அனாதையாகி விட்டேன். நான் ஓர் தாதியல்ல. பேதையல்ல......தங்களை எனது 6-வது வயதில் மணமாலை சூட்டிய மஹா அபாக்யசாலியானேன்...நாதா!......என்னை ஏற்றுக்கொள் வீர்களா!...நான் குற்றமற்ற நிரபராதி...சந்தோஷ மென்பதை அவ்விரண்டு காலங்களைத் தவிர கனவிலும் கண்டறியாத அபாக் கியவதி....என்னைக் கைவிடமாட்டீர்களே!..........நாதா! ப்ராண நாதா!.........இதோ! அந்த அருமையான கரத்தை இப்படிக் கொடுங்கள்.......கடைசி காலத்திற்காவது எனக்குக் கடவுளால் உரியதாகக் கொடுத்த கரத்தை மகிழ்வுடன் பற்றிக்கொள்கிறேன்...

நாதா !.... தயங்கவேண்டாம்... இதோ என் வாழ்நாளே இது பரியந் தம் எங்ஙனம் கடத்தினேன் என்பதற்கு இந்த டைரியே சாக்ஷி... இதைப் பெற்றுக்கொள்ளுங்கள். நாதா! கடைசி நிமிடத்திலாவது வாழாவெட்டி என்ற இழிச் சொல்லைக் களைந்து என்னைக் காப்பாற் றுங்கள்" என்று ஆவேசங்கொண்டவள்போலக் கூறி, தன் கணவனை தன் ஆவல் தீர ஏற இறங்கப் பார்த்தாள். இரு கண் களும் சிறு அருவிபோலப் பெருகுகின்றன.

இந்த அத்யாச்சரியமான விஷயங்களைக் கேட்டும் சம்பவங் களைப் பார்த்தும் துரை ஒன்றுமே தோன்றாதவனாய்த் தம்பித்துக் கதிகலங்கி நின்றான். "ஹா! என் மூத்த மனைவியா நீ!....நீ என் உத்தமபத்தினியா... மீனாக்ஷி! மீனாக்ஷி! உன்னுடைய ரகஸியத்தை நீ ஏன் ஒளித்தாய்!... அன்றே சொல்லி இருக்கலாகாதா!... இப்படியா மூடிவைக்கவேண்டும்!... மீனாக்ஷி! மீனாக்ஷி!... நீயா மொட்டைக் கடிதம் எழுதினாய்... என்ன ஆச்சரியம்... என்று நிலை கலங்கி பித்து பிடித்தவன்போலக் கூறிப் புலம்பினான்.

அடுத்த வினாடியே கட்டிலின்மீது தாவி மீனாக்ஷியைத் தூக்கித் தன் மடியில் கிடத்திக்கொண்டு அவள் முகத்தைத் தடவிக்கொடுக் கிறான். துரைராஜனின் கண்ணீர் மீனாக்ஷியின் மீது பனித்துளி போல விழுகின்றது. மீனாக்ஷி என்ற பெயருக்கேற்ற விசாலமான கண்கள் கட்டு மீறிய அபாரமான சந்தோஷத்துடன் மலர்ந்து நீரைப் பெருக்குகின்றன. சூரியனைக் கண்டு தாமரை மலருவதே போல துரைராஜனாகிய சந்தோஷச் சூரியனைக் கண்டு தாமரைக் கொப்பான மீனாக்ஷியின் முகம் விகசிதமுற்று சோபிதமாக விளங் கியது. துரைராஜாவின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு அவனது அன்பிற்குள் ஐக்கியமாகிவிட்டாள். துரைராஜனின் உள்ளம் எப்படித்தான் இருக்கும்? கண்ணீர் வழிய மீனாக்ஷியை நோக்கிய வண்ணம் கல்லாய்ச் சமைந்துவிட்டான்......

முற்றிற்று.

இந்தக் கதையைப் படிக்கும்போதே கமிட்டியினர் மிகவும் திருப்தியும் உணர்ச்சியுங் கொண்டு ஸ்வாரஸ்யமாகக் கேட்டார்கள். படித்தவர் மனதும் பரம சந்தோஷத்தை யடைந்து, "சார்! கதை எப்படி?" என்று கேட்டார்.

கமிட்டியாரில் சிலர் "மிக்க ஸ்வாரஸ்யமாயும் உணர்ச்சியை

அளிக்கக்கூடியதாயும் இருக்கிலது. சிறு கதை என்ற பெயர் மட்டும் பொருந்தாது. சற்று பெருங்கதைதான். ஆனாலும் ருசியாயிருப்பதால் நேரம் போவது தெரியவில்லை. இக் கதையைக் கேட்கும்போது "அன்னை தயையும்" என்கிற பாடல் ஞாபகத்திற்கு வருகிறது. அப் பாடலை நன்கு விளக்கும் அருமை இதில் பொதிந்து கிடக்கின்றது" என்றார்கள்.

இன்னும் சிலர் "ஆமாம்! நாங்களும் அப்படியே நினைக்கிறோம் ...ஆனால் ஒன்று. இந்தப் பெண் முதலிலேயே தான் இன்னாரென்று ஏன் தெரிவித்திருக்கலாகாது? இது ஏன் தாமதமாகவேண்டும்...

மானேஜர் :—இது ஒரு கேள்வியா! அப்படி தெரிவித்திருந்தால், தாங்கள் பாடலுக்கு இசைப்பது எப்படி முடியும். "மந்திரி மதியும்" என்றபடி எவ்வாறு யுக்தி செய்து மொட்டைக் கடிதம் எழுத முடியும்? இம்மாதிரி வரும் என்று ஜோஸியம் தெரியுமாவென்று கேட்காதீர்கள். கதையில் வருபவர்களுக்கு ஜோஸியம் தெரியாதெனினும் கதையின் ஆசிரியருக்குப் புதிதல்லவே! மேலும் அம்மாதிரி கதை முடிவதில் ஸ்வாரஸ்யமே இருக்க முடியாது. திடீரென்று கணவனைப் பார்த்ததே பெரும் பாக்கியம். தான் தான் மனைவி என்று கூறினால் அவன் எப்படி நம்பிவிட முடியும்?

அதோடு கடுமையான நோயினால் படுத்திருக்கிறான். தன்னைப் பற்றி அவன் என்ன நினைத்திருக்கிறானோ அது தெரியாது. ஜெமீந்தார் சொல்லியதிலிருந்து தன் மீது பழியும் உலாவுவதாகத் தெரிந்துகொண்டாள். அங்ஙனமிருக்க, தான் திடீரென்று மனைவி என்று தெரிவித்ததும் கோபங்கொண்டு உதறிவிட்டால் என்ன செய்வது? இம் மாதிரி யோசிப்பதும் கதா நாயகியின் முறையல்லவா!...திடீரென்று சொல்வது அசம்பாவிதமாகும். மேலே வளர்ந்து முடிந்தது தான் அழகாகவிருக்கிறது. மனைவியின் கடமையை மறைவிலிருந்தும் செய்து காட்டிய பெருமையை அடைய முடிகிறது.

இன்னொருவர் :—ஆம்! நீர் விளக்குவது வாஸ்தவந்தான். முடிவில் ஏன் அப்படி மொட்டையாக நிறுத்தவேண்டும். அதை விஸ்தரித்து இருவரும் கூடி வாழ்வதுபோல முடித்திருந்தால்... இப்போது முடிவு உயிர் இருக்கிறதா, இறந்துவிட்டாளா! ஒன்றும் தெரிய வில்லையே!

மற்றொருவர் :—இதுதான் சார்! முக்கியமான ஸ்வாரஸ்யம். படிப்பவர்களின் உணர்ச்சியை — கவர்ச்சியை— அதிகப்படுத்தும்

விதம் இதுதான். யார் யார் மனப்படி எப்படி வேண்டுமாயினும் நினைத்துக் கொள்ளட்டும். சந்தோஷம், துக்கம் (காமிடி—டிராஜிடி) இரண்டும் கலந்த முடிவு மிகவும் எனக்குப் பிடிக்கிறது. அவளால் இருமுறை நன்மை யடைந்த பிறகு மனைவி என்பதை யறிந்தது மிகவும் சிலாகிக்கத் தக்கது. பிறகு பழய விவரம் அறிவதற்கும், அவளுடைய பரிசுத்தத்தை யறியவும் டைரியே போதுமானது. இன்னும் என்ன இருக்கிறது. மனத்தோடு மனங் கலந்துவிட்டார்கள். இவ்வளவுதானே முக்கியமானது.

இந்த சிறு கதைப் போட்டிக்காக வந்துள்ள கதைகளைப் படித்து தலைநோய் உண்டாகிவிட்டது. இங்கு குதித்தான். அங்கு ஓடினான். துப்பாக்கியால் சுட்டான். ஆகாசத்தில் ஜம்ப் செய்தான். பெண்ணைத் தூக்கிக்கொண்டு போனான். கொலை செய்தான். முகமூடிக் கள்ளன் வந்தான்...அப்பப்ப...இதுபோன்று இல்லாமல் சாதாரணமாக வாழ்க்கையில் நடக்கக்கூடிய விஷயங்களுக்கு கற்பனையும் மெருகும் கொடுத்திருக்கிறதே, அதுவே அழகாக விருக்கிறது...என்றார். பிறகு இதை எல்லோரும் ஆமோதித்து அதற்கு வேண்டிய கடிதங்களை எழுதிவிட்டு, மேலேயுள்ள கதைகளைப் படிக்கத் தொடங்கினார்கள்.

அதிகாரம் 4.

பத்திரிகை உரைகள்—தத்தளித்த நிலைமை

நமது சாகரன் முன்பு கூறியது போல வெகு ஆழ்ந்த யோசனையில் உட்கார்ந்திருந்த சமயம் அவனுக்குத் தபால்கள் கிடைத்தன. அதோடு சில ரிஜிஸ்டர் பாக்கெட்டுகளும் வந்தன. இவைகளைப் பார்த்த உடனேயே தான் அனுப்பிய கதைகள் திரும்பி வந்துவிட்டன என்பது விளங்கிவிட்டது. உடனே கடிதங்களைப் படிக்கத் தொடங்கினான்.

போது ஊழியன் பத்திரிகாலயம் ....19...
பூபால நகர்.

“ அன்பார்ந்த ஐயா !

வந்தனம். தாங்களனுப்பிய சிறு கதையும் கடிதமும் வந்து சேர்ந்தன. எங்கள் காரியாலத்து வழக்கப்படி கதைப் பகுதி கமிட்டியாரின் முன்பு வைத்துப் பரிசீலனை செய்தோம். கமிட்டியாரின் அபிப்பிராயம் கீழ்வருமாறு :—

இச் சிறு கதையைப் படித்தோம். இக் கதையில் கடைசீ பாகத்தைத் தவிர ஒரு நீதியா, ருசியா, அழகா, ஒன்றுமே எங்களுக்கு ஏற்படவில்லை. போலி சன்யாசிகள் ஏமாற்றும் விஷயத்தை எத்தனையோ பேர்கள் எவ்வளவோ அழகாக எழுதி இருப்பதால் இதுவும் புதிய அதிசயமான சம்பவமல்ல, இக்கதையை மட்டும் யாராவது படித்தால் இது விவகாரமறியாத சிறு பையன் எழுதியதாகவே தோன்றுகிறது. உங்கள் பெயரும் விலாசமும் உள்ள கடிதத்தைப் பார்த்த பிறகுதான் பெரியவர்கள் எழுதியதாக நினைக்க வேண்டியிருக்கிறது. பெண் பிள்ளைகளின் பெயர்கூட வராத கதையாக இது இருக்கிறது. அம் மாதிரி சிலர் சிறு கதை எழுதுவதுண்டு; ஆனால் அந்த வகையில் இது அமையவே இல்லை. உப்பில்லாத சமையல்போல இது வேண்டுமென்று எழுதியதாகத் தோன்றுகிறது. இதையே மாற்றியோ புதுப்பித்தோ எழுதினால் பிறகு பார்க்கலாம். வந்தனம்.

இங்ஙனம்
கமிட்டியார்.”

“இந்தியச் சோதரன்” பத்திரிகாலயம். ....19...

“ஐயா ! வந்தனம்.

தங்கள் கடிதமும் கதையும் வந்தன. போட்டிக்குத் தகுந்த கதை இதுவல்ல என்று எங்கள் கதைப் பகுதி கமிட்டியார் தீர்மானித்துவிட்டார்கள். இதில் ஒருவிதமான உணர்ச்சியோ, ஸ்வாரஸ்யமோ, ருசியோ, திடுக்கிடும் சம்பவமோ!....... கதைக்கு வேண்டிய ஒன்றுமே இல்லாது அமங்கலியின் கழுத்து போல விருப்பதால் இதைத் திருப்புகிறோம்.

பத்திரிகாசிரியர்.”

"உண்மை மித்திரன்" காரியாலயம். ....19...

"ஐயா! வந்தனம்.

தங்கள் கடிதமும் சிறு கதையும் வரப்பெற்ரும். இக்கதையைப் பரிசீலனை செய்ததில் கதை என்ற பெயருக்கே இது லாயக்காக இல்லை என்பது எங்கள் கமிட்டியின் தீர்மானம். வீட்டிற்கு அலங்காரம் குழந்தைகள். அக் குழந்தைக்கு மூலகர்த்தர்கள் பெண் மணிகள். அத்தகைய பெண்மணிகள் மருந்துக்கும் இல்லாது இக் கதை எழுதியிருப்பதானது சிறிதும் பொருத்தமில்லை. பள்ளிக்கூட மாணவர்களுக்குத் தாயார்கள் புத்திமதிகள் போதிப்பதுபோல சந்தர்ப்பங் காட்டி பல அரிய நீதிகளைக் கதையில் புகுத்தி இருக்கலாம். நீதி என்பது இதில் ஒரு இடத்திலும் இல்லை. மாணவர் படிப்பதும் உபாத்தியாயர் சொல்வதும் ருசியற்ற விஷயமாக விருக்கிறது.

இயற்கை யழகைப் பார்ப்பதாக இருக்குமிடத்திலாவது சற்று பொருள்பட பல வர்ணனைகளைக் காட்டி இருக்கலாம். சில பெண்கள் ஆற்றில் ஸ்நானம் செய்து செல்வதாயும், மாமிகள் தங்கள் கொடுமைகளைக் காட்டி வம்பு பேசி உத்தமியான மருமகளையும் மகனையும் திட்டுவதாயும், உபாத்தியாயர் மாணவர்களுக்கு இம் மாதிரி செய்வது அநீதி இப்படி நீங்கள் நடக்காது புத்திசாலிகளாக இருக்கவேண்டும் என்று ஒரு உபாத்தியாயினி இதன் மூலம் பல நீதிகளைப் போதிப்பதாகக்காட்டி இருந்தாலும் நன்ருக இருக்கும்......இதுவே முதல் கதை என்று நினைக்கிரும். வேறு நன்ருக எழுதி யனுப்பினுல் பார்க்கிரும்.

பத்திராதிபர்."

"ஜனநாயகம் "பத்திரிகாலயம் ....19...

"ஐயா! வந்தனம்.

உங்கள் கடிதமும் கதையும் கிடைத்தன. எங்கள் கமிட்டியினுல் பரிசீலனை செய்யப்பட்டது. இதில் எந்த அம்சத்திற்காக கதை என்ற பெயர் கொடுக்கப்பட்டதென்றே எங்களுக்கு விளங்கவில்லை. சன்யாசியின் சமாசாரத்தை அர்த்தமில்லாமலும் அனுவசியமாயும் கொண்டு புகுத்தி இருப்பதாகவே நாங்கள் கருதுகிரும்.

உபாத்தியாயருக்குப் பெண் கொடுக்க சம்மதப்படவில்லை,

நான்கு பிள்ளைகள் இருப்பதே காரணம் என்று கூறுவது முற்றிலும் பொருத்தமற்றதாகும். எங்காவது ஒரு கிழவனோ, வியாதியஸ்தனோ, தரித்திரனோ நான்காம் கல்யாணக்காரனோ எவனோ ஒருவன் கிடைத்தால் போதும் என்று காத்திருக்கும் பெற்றோர்களின் எண்ணிக்கை இத்தனை நாகரீகமும் பெண் கல்வியும் முதிர்ந்திருக்கையிலும் குறையவில்லை. இது உண்மையா வென்பதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு.

அங்ஙனமிருக்கையில் இவருக்கு போதிய சம்பாத்திய மிருக்கிறது. சிறிய வயது மிருக்கிறது. பெண் கொடுக்க மறுப்பது ஒவ்வாத கற்பனையாகும். இத்தனை கஷ்டப் பட்டுக்கொண்டு காலத்தைக் கடத்த உபாத்தியாயரும் சம்மதிக்க மாட்டார். இது வேண்டுமென்றே ஆசிரியர் திட்டம் செய்து எழுதிய கூற்றுகும்.

விவாகம் செய்துகொள்ள பிரயத்தனம் செய்து விவாகத்தைச் செய்துகொண்டு குடும்பம் நடத்தி இருப்பதாக இருந்தால் சற்று நன்றாக இருக்கும். ஆரம்பமும் முடிவும் மாணுக்கரும் உபாத்தியாயரும் மத்தியில் ஓர் சன்யாசியும் ஒன்றுக்கொன்று புணை இன்றி முடித்திருக்கிறது.

இயற்கை யழகைக் காண்பதாக ஆரம்பித்திருக்கிறீர். அதிலும் ஒரு அதிசயத்தையும் காணவில்லை. இயற்கையைக் கண்டு வர்ணிப்பதும், சித்திரம் எழுதுவதும், போட்டோ பிடிப்பதும் ஏதாவது ஓர் பிரயோஜனமாகிய காரியத்தை மாணுக்கர்கள் செய்து அதைக்கொண்டு ஒருவன் பரிசு பெற்றதாயும் அந்தப்பரிசின் மூலம் அந்த ஏழை மாணுக்கனின் குடும்பத்திற்குச் சந்தோஷம் உண்டாகி அவன் பெற்றோர்கள் உபாத்தியாயருக்குத் தமது சந்தோஷத்தையும் நன்றியையும் செலுத்துவதும் அதேமாதிரி மற்ற பிள்ளைகள் தாமும் பரிசு வாங்கும் ஆசையுடன் நன்றாகப் படிக்க ஆரம்பித்தார்கள் என்றும் எழுதி இருந்தாலும் ஏதோ ஒருவாறு சிறிது ருசிக்கும்.

இதில் ருசி ஒன்றுமே இல்லை. உப்பில்லை. புளிப்பு இல்லை. இனிப்பு என்பது முதலே இல்லை. இதைப் போட்டியில் வைப்பதற்கு ஒரு அம்சமுமே இல்லை. பெண்பிள்ளை வேலைக்காரிகூட இக்கதையில் காட்டாது வேண்டுமென்றே விலக்கி இருப்பதாகத் தெரிகிறது. பெண்களே இல்லாத கதைகள்கூட ருசிக்காது என்பது பகுஜன வாக்கு. அப்படி சிலர் சில கதை எழுதினுலும் அமைப்பையே வேறு மாதிரி மாற்றி ஆரம்பமுதல் அமைத்து ஓர் தினுசாக

உணர்ச்சி கொடுக்கக் கூடியதான முறையில் எழுதுவார்கள்.

அதாவது இரு நண்பர்கள் ஒருவருக்கொருவர் சந்திப்பதும், படிப்பதும் சமயா சமயங்களில் ஒருவரையொருவர் காத்து உதவுவதும், ஆபத்துக் காலங்களில் ஆதரிப்பதும், தீர சூர காரியங்களைச் செய்வதும், பெரிய திருட்டு முதலியன கண்டு பிடிப்பது...போன்ற சில அம்சங்கள் வெகு ருசியாகக் காணும். அதிலும் ஓர் வேலைக்காரியாவது....கிழத் தாய்மார்களாவது காண்பார்களே யன்றி பூஜ்யம் செய்யமாட்டார்கள்.

உங்கள் கதையில் சந்தர்ப்பம் நிறைய இருப்பதையே நீங்கள் கைவிட்டு விலக்கி எழுதியிருப்பது மிகவும் வெறுக்கத்தக்கதாக இருக்கிறது. சன்யாசியின் மோதிரத்தை ஓர் பெண் பிள்ளையின் கையில் கண்டதாக எழுதியிருந்தால் அச் சன்யாசியின் ஊழலை, ஆபாச மோசத்தை இன்னும் தெளிவாக விளக்கி இருக்கும். ஷாப்பு வைத்து விற்பது பெரிய குற்றமல்ல. அவருக்கு வரும் காணிக்கைகளை எப்படியாவது விற்றுத்தானே பணமாக மாற்றவேண்டும். இதற்கு தனி ஷாப்பிருப்பது வியப்பே இல்லை. விலைமாது என்றால் நீர் கொண்ட கருத்திற்கு முற்றிலும் பொருத்தமாக விருக்கும்.

நீர் இதையே மாற்றியமைத்தோ, வேறு கதையோ எழுதி இன்னும் ஒரு மாதத்திற்குள் அனுப்பினால் நாங்கள் பரிசுப் போட்டியில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்து அவைகளுக்குள் எது சிறந்ததோ அதற்குப் பரிசு வழங்குவோம். உம்முடையதே சிறப்பாக விருக்கும்படிக்கு எழுத முயற்சிப்பீர் என்று நம்புகிறோம். நாங்கள் எவ் விஷயத்தையும் ஒளிப்பவர்களல்ல வாகையினால் விவரமாக விளக்கி விட்டோம். வெளிப்படையாகச் சொல்வதுதான் விருத்தி செய்யும் வகையில் நன்மையாகும் என்பது எங்களுடைய அனுபவமாகும்....

இங்ஙனம்,

பத்திரிகாசிரியர்."

இக் கடிதங்கள் ஒவ்வொன்றையும் படித்துக்கொண்டே வருகையில் நமது சாகரனின் முகம் சுருங்குகிறது. கோபமும் அவமானமும் கூடி வதைக்கின்றன. 'உலகம் இப்படியா இருக்கின்றது?' என்று தனக்குள் வியப்புற்று பெருமூச்சு விட்டான். வந்த பத்திரிகைகளை எல்லாம் புரட்டினான். ஒன்றில் கொட்டை எழுத்தில்,

500 ரூபாய் பரிசு பெற்ற சிறுகதை

வாழா வெட்டி

ஸ்ரீ. சிவானந்தம் எழுதிய உணர்ச்சி ததும்பும் அழகிய சிறுகதை.

என்ற தலையங்கத்தைப் பார்த்ததும் பிரமிப்படைந்துபோய் உடனே அதைப் படிக்கத் தொடங்கினான். கதையின் பெயரே, "வாழா வெட்டி" என்று ஒரு பெண்ணைப்பற்றிக் குறிப்பதாக இருப்பதை நோக்கினான். அவனுக்கு இயற்கையாக உள்ள வெறுப்பும் ஆத்திரமும்கொண்டு அதை வாசிக்கவிடாது தடுத்துவிட்டன. பத்திரிகையை வீசி எறிந்தான்.

"சிவானந்தம் 500 ரூபாய் பரிசு வாங்கிவிட்டானா?......வாழா வெட்டியா!...வாழும் வெட்டி இல்லையா!"...என்று ஒரு விதமாக நினைத்தான். தானும் சிவானந்தமும் ஒரே நாளில் கதைகளை அனுப்பியதும், அவன் கதை பரிசுடன் பிரசுரமானதையும், தன் கதை குற்றச் சாட்டுகளுடன் திரும்பி வந்ததையும் எண்ணி, பெருமூச்சு விட்டான்.

அதே சமயம் செட்டியாரின் மோட்டார் வீதியில் வந்து நின்றது. அதைக் கண்டு இவனும் தயாராகப் புறப்பட்டு, செட்டியாருடன் மகாத்மா காந்தியைப் பார்க்கச் சென்றான். மகாத்மா தங்கியிருந்த பிரும்மாண்டமான மாளிகையின் முதல் கேட்டிலேயே சில தொண்டர்களும், தேச சேவிகைகளும் காவலாக நின்றிருந்ததைக் கண்ட செட்டியார் ஆனந்தப் பரவசமானார். நமது சாகரனோ "அட சனியன்களே! இங்குமா பெண் தொண்டர்கள் நிற்கிறார்கள்!" என்று வெறுத்தான்.

தலை குனிந்துகொண்டு உள்ளே சென்றான். ஏராளமான ஜனங்கள் அந்தப் புண்ணிய சீலரின்....தியாகமூர்த்தியின்—சாந்தியின் காந்தியை—தரிசிக்கக் காத்துக்கொண்டு வெயிலையும் பாராது நின்றுகொண்டிருந்தார்கள். இவர்களையும் தொண்டர்கள் குறிப்பிட்ட இடத்தில் உட்காரவைத்தார்கள். செட்டியாருக்குத் தெரிந்த பல பெரிய மனிதர்கள் அங்கு வந்திருந்தார்கள். செட்டியார் அவர்களுடன் பேசிக்கொண்டே அந்த பந்திக்குச் சென்றார்.

தனக்குத் துணையும் அகப்படாமல் தனிமையில் உட்கார்ந்திருக்கிற சாகரனுக்கு மனது சரிப்படவே இல்லை. அவன் ஏதோ பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தான். அச்சமயம் நாலைந்து தேச

சேவிகைகள் அங்கு வந்து, "ஐயா ! இது இன்று காலைப் பத்திரிகை தானே ! தயவுசெய்து இப்படி ஒரு நிமிடம் கொடுங்கள். ஒரு முக்யமான விஷயத்தைப் பார்த்து விட்டுக் கொடுத்து விடுகிறோம்" என்று மரியாதையாகக் கேட்டார்கள்.

இந்த எதிர்பாராத நிகழ்ச்சியைக் கண்டதும் ஏற்கெனவே மனம் சரியில்லாத சாகரனுக்கு இன்னும் அதிகரித்த வெறுப்பும் வியப்பும் ஒருவிதமான கூச்சமும் உண்டாகிவிட்டன. உண்மையில் நாலைந்து பெண்கள் தன்னெதிரில் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு முகத்தைச் சுளித்துக் கொண்டான். இதற்கு, தான் என்ன பதில் சொல்வதென்பதையும் மறந்தான். பேசாது எழுந்து போய் விடலாமா !...பெண் பேய்கள் நான் கனவிலும் கருதாதபடி என்முன் வந்து விட்டனவே !....என்று பரம சங்கடத்துடன் குனிந்த தலை நிமிராது குழம்பிப் போய் யோசனையில் ஆழ்ந்துவிட்டான்.

அதிகாரம் 5

வாத்ஸல்யம்—அதியாச்சரியம்

தனக்கு ஒரு சந்தோஷச் செய்தி கிடைத்திருக்கிற தென்றால், யார்தான் பூரித்து மகிழாது இருப்பார்கள் ! சிவானந்தத்தின் மகிழ்ச்சிக்கும் அடக்க முடியாத சந்தோஷத்திற்கும் எல்லையே இல்லை. கரை கடந்துபோய்விட்டது. அவனுடைய வீட்டில் ஒவ்வொருவரும் பரிசு வந்ததைப்பற்றி அவனை வெகுவாய்ப் புகழ்ந்து பேச வாரம்பித்துவிட்டார்கள்.

கதை எழுதுவதைப்பற்றி வம்பாயும், ஏளனமாயும் எண்ணிக் கூறி வந்தவர்கள்கூட இதைப்பற்றித் தடபுடலாக சிலாகித்துப் பேசி சிவானந்தத்தைக் கொண்டாடினார்கள். சிவானந்தன் மிக்க சந்தோஷத்துடன், " இன்று இங்கோர் உத்தம த்யாகி வரவில்லையா ! நல்லார் வந்ததன் பலன் நலமே கிடைத்தது " என்றான். சாகரனிடம் இதைத் தெரிவிப்பதற்குப் பானுசாமியும் சிவானந்தமும் சாகரன்

வீட்டிற்கு வந்தார்கள். அவன் அங்கு இல்லாமையினுல் அவன் காலையில் தெரிவித்ததுபோல செட்டியாருடன் மாத்மாவைப் பார்க்கச் சென்றிருப்பான்" என்று எண்ணிப் போய்விட்டார்கள்.

சாகரனே நாம் முன்பு கூறியபடியே தத்தளித்த மனமும், கூச்சமடைந்த தேகமும், முற்றும் வெறுப்புற்ற கண்களுமாக என்ன செய்வதென்று தெரியாது குழம்பிப்போய்விட்டான். தான் பேசாமல் இருப்பதைக் கண்டு அவர்கள், 'இவன் பத்திரிகை கொடுப்பதற்குக்கூட கருமி' என்று நினைத்துவிடப்போகிறார்களே என்றும் தோன்றுகிறது. தான் பெண்களைக் கண்டாலே வெறுப்பவன் என்று தெரிந்தவர்கள் இந்த நிலைமையில் தன்னைக் கண்டால் என்ன நினைப்பார்களோ என்றும் இருக்கிறது. என்ன செய்வான் பாவம்!

இதற்குள் அப் பெண்கள் மீண்டும், "ஐயா! சற்றுக் கொடுங்கள். ஒரு முக்கியமான விஷயம் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டோம்...அதைப் பார்த்துவிட்டுத் தருகிறோம்" என்றார்கள். இதற்கு மேல் அவன் என்ன செய்வான்? பத்திரிகையைக் கொடுத்துத் தொலைத்தான். அப் பெண்கள் அதை வாங்கிக்கொண்டு தங்கள் இருப்பிடம் சென்றுவிட்டார்கள்.

இதற்குள், "மகாத்மாவைத் தரிசிக்க இப்போது முடியாது; சந்தர்ப்பமில்லை. இனிமேல் நாளைக் காலை 8 மணிக்கு வந்தால்தான் பார்க்க முடியும்" என்று தொண்டர்கள் கூறிவிட்டார்கள். அதைக் கேட்டு அநேகர் வீட்டுக்குத் திரும்பினார்கள். செட்டியாரும் புறப்பட்டுவிட்டார். சாகரனும் பத்திரிகையைத் தான் எப்படி திரும்பக் கேட்பது என்கிற சங்கோஜத்தினுல் அதை விட்டுவிட்டுச் செட்டியாருடன் போய்விட்டான்.

அவனுடைய மனது மட்டும் சற்றும் தெளிவு பெறுமல் ஒரு விதமாகக் குழம்பிப்போய்விட்டது. தான் எழுதிய கதையின் முடிவை நினைக்க நினைக்க மன வருத்தம் அதிகரித்தது. மீண்டும் சிவானந்தனின் கதையைப் பார்த்தான்...வாழாவெட்டி!...என்ன அசங்கியமான பெயர்! இதற்கா பரிசு வழங்குவது?...இது எப்படித் தான் இருக்கிறது பார்ப்போம் என்று மீண்டும் அந்தக் கதையைப் படிக்கத் தொடங்கினுன். மீண்டும் பழயபடி வெறுப்பினுல் சில வரிகளைப் படித்ததோடு நிறுத்தி மேலே பத்திரிகையைப் புரட்டிக் கொண்டு போனுன்.

வாத்ஸல்யம்

முதற் பரிசு 1000 ரூபாய் பெற்ற கதை.

"என்ன! ஆயிரம் ரூபாய் பரிசா!... அப்போது சிவானந்தத்தின் கதையைவிட இது சிறப்பானதாகவன்ருே இருக்கவேண்டும்... இதன் ஆசிரியர் பெயர் என்ன?" என்று பார்த்தான். சாதாரண வழக்கம்போல கதையின் மேலே போடாமல் புது மாதிரியாக இரண்டாம் பக்கத்து மத்தியில் அழகிய புஷ்ப பார்டர் கட்டி அதன் மத்தியில் ஆசிரியரின் பெயர் போட்டிருந்தது. ஆனல் சாகரன் அத்தனை ச்ரத்தையுடன் திருப்பிப் பார்க்கவில்லை. முதல் பக்கத்தில் காணுமையிலுலும் ஆயிரம் ரூபாய்க் கதை எப்படி இருக்கிறதென்று பார்க்கவேண்டுமென்கிற ஆவலே முதன்மையாக இருந்து அவனுடைய கவனத்தை, "வாத்ஸல்யம்" என்ற பெயர் இழுத்துவிட்டதால், அவன் கதையைப் படிக்கவே ஆரம்பித்துவிட்டான்.

வாத்ஸல்யம்

"மாணவர்களே! நீங்கள் இன்று படித்த பாடம் சாமான்யமானதல்ல. பசுமாடும், அதன் அரிய உபயோகமும், அதன் மகிமையும் நன்கு தெரிந்துகொண்டீர்கள். பசு மகாலக்ஷ்மியின் அவதாரமாகும். பசு தாயைப் போல எல்லோருக்கும் பால் கொடுத்து அன்புடன் ஆதரிக்கிறது. கோவில்களில் அதிகாலை கதவைத் திறந்ததும் பசுமாட்டை நிறுத்தி கடவுளுக்கு விச்வரூபமென்று காட்டுகின்றனர். பசுமாடுதான் காமதேனு என்று வழங்கப்படுவது. பசுமாட்டின் கோமியமும் சாணமும்கூட சுத்தத்திற்கு உபயோகப்படுகின்றன. கோமியம் சுகாதாரத்திற்கும் எடுத்த மருந்தாகும். அது எத்தனையோ பூச்சிகளைக் கொல்லுகிறது.

பசுமாட்டை எவனெருவன் அன்புடன் ஆதரித்து உபசரிக்கின்ருனே அவன் சாக்ஷாத் லக்ஷ்மி பூஜை செய்தவனுவான். பசுமாடு கன்று போடும்போது ப்ரதக்ஷணம் செய்து நமஸ்கரித்தால் பூமியை ப்ரதக்ஷணம் செய்த பலன் உண்டாகும். ஒரு சுபகாரியமாகச் செல்கையில் பசுமாடு எதிரே வந்தாலும், நீர் கழிந்தாலும் அது

ஓர் நல்ல சுப சகுனமாகும். பசுமாட்டிற்கு ஸ்நானம் செய்வித்து மஞ்சள் குங்குமம் இட்டு ப்ரதக்ஷணம் நமஸ்காரம் தினம் செய்தால் மகாலக்ஷ்மியையே தொழுததற்கு ஒப்பாகும்......மாணவர்களே! பசுவை அடித்து உபத்திரவிக்காதீர்கள்.

இத்தகைய மகோன்னத லக்ஷணங்கள் பொருந்திய பசு மாட்டைச் சில பால்காரப்பாவிகள் அதன் மகிமையை மறந்து வயிற்றுக்கு வேண்டிய தீனியும் போடாமல் கன்றுக்குட்டி இறந்துவிட்டாலும் அதை மகா கோரமாக வைக்கோல் அடைத்துச் செத்த கன்றையே பசுவிற்குக் காட்டிப் பால்கறந்து வயிறு வளர்க்கின்றார்கள். அது எத்தனை தோஷந் தெரியுமா! கன்றுக்குப் பாலே விடாமல் அதைக் கறந்து தாங்கள் விற்றுப் பணமாக்கி கன்றைக் கொன்று விடுகிறார்களே! இது எத்தனை பாதகம் தெரியுமா! பாதகம் செய்வதையே தொழிலாகக் கொண்ட அவர்கள் பாபத்தை எவ்விதம் உணர முடியும்?

பிள்ளைகளே! உங்களில் யாராவது பால்காரர்களாக இருந்தால் இனி அவ்வாறு செய்யாமல் உங்கள் பிதாவையும் தாயாரையும் தடுக்க வேண்டியே உங்களுக்கு இதை இத்தனை விஸ்தரித்துக் கூறினேன். பசு சாமான்யமானதல்ல. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே பசுவை மேய்த்தும் பசுவுடன் கோகுலத்தில் விளையாடியும் ரக்ஷித்தும் காட்டியிருப்பதால்தான் கோ....பாலன். (கோ-பசு; பாலன்-ரக்ஷகன்)....என்ற பெயர் உண்டாகியது. ஆதலால் பசுவினிடம் அன்பாயிருங்கள்."

என்று உபாத்தியாயர் மாணவர்களுக்குப் பசுவைப்பற்றிச் சொல்வதைக் கேட்ட சில பிள்ளைகளுக்கு மெய் மறந்த உணர்ச்சியும் சந்தோஷமும் உண்டாகிவிட்டன. அவர்களில் 10 வயதுப் பையன் வாஸுதேவன் என்பவனுக்கு மிக்க மன வருத்தமும் துக்கமும் உண்டாகிவிட்டன.

ஏனெனில் அவன் யாதவ குலத்துதித்த சிறுவன். உபாத்தியாயர் சொல்லியதுபோன்று அவன் தகப்பனார் பசுமாட்டை அலக்ஷியமாக அடிப்பதும் பாலை ஒட்டக் கறந்து பாதிக்குப் பாதி ஜலம்விட்டுப் பணமாக்குவதும் கன்றுக்குட்டியின் வாயில் கயிற்றைக் கட்டி வாய்ப்பூட்டுப் போட்டுவிடுவதும், பாலெல்லாம் ஒட்டக் கறந்த பிறகு அதை ஊட்டவிடுவதும், செத்த கன்றுக்குட்டியில் வைக்கோலை அடைத்துக் கொம்பில் கோர்த்து பசுமாட்டின் முன்பு

நிற்கவைத்து பால் கறப்பதும் உபாத்தியாயர் தெரிவித்தபடி பல அக்கிரமங்கள் செய்வது முற்றும் அவன் பார்த்துக்கொண்டிருப்பவன்; ஆகையினால், அவை முற்றும் அவன் கண் முன்பு தாண்டவமாடத் தொடங்கின.

களங்கமற்ற பரிசுத்தமான ஹ்ருதயத்தையுடைய அச் சிறுவனின் மனத்தில் விவரிக்க வியலாத சங்கடம் உண்டாகிவிட்டது. அதனால் அவன் முகம் வேறுபட்டுவிட்டது. அவன் திடீரென்று தன் உபாத்தியாயரை நோக்கி, "சார்! நீங்கள் சொல்லியதெல்லாம் என் மனத்தில் நன்றாகப் பதிந்துவிட்டது. எங்க வீட்டில் 5, 6 எருமை மாடுகளும், நாலு பசுமாடுகளும் இருக்கின்றன. அவைகளை என் பிதா நீங்கள் தெரிவித்தது போலவே செய்து அனியாயமாக நடத்துகிறார். சார்! எனக்கு இந்த விஷயங்கள் ஒன்றுமே தெரியாது. கன்றுக் குட்டிகள் இறந்தால் இவ்விதம்தான் செய்ய வேண்டுமோ என்னவோ வென்று நினைத்திருந்தேன்...சார்!...இப்படிச் செய்யும் பாபத்தினால்தான் சார்! எங்க அக்கா திடீரென்று இறந்துவிட்டாள். திருடன் வந்து சொத்தை எல்லாம் கொண்டு போய்விட்டான். இந்தப் பாவந்தான் இருக்குமென்று இப்போது தான் தோன்றுகின்றது..." என்று படபடத்துக் கூறிவிட்டான். மற்ற யாதவப் பிள்ளைகளும் இதை யாமோதித்தே தம் தம் வீட்டைப்பற்றிக் கூறினார்கள். இதைக் கேட்ட உபாத்தியாயருக்கு மெத்த சந்தோஷம் உண்டாகிவிட்டது. அவர்களுக்கு இன்னும் பல புத்திமதிகளைச் சொன்னார்.

வாஸுதேவன் வீட்டிற்கு வரும் வழியில் தன் தகப்பனார் வாடிக்கையாகக் கறக்கும் இடத்தில் பசுமாடு வீதியில் கட்டி இருந்தது. கன்றுக் குட்டியின் வாயில் பூட்டு போட்டிருந்தது கண்டு மிக்க விசனமும் கோபமும் அடைந்து சற்றும் தயங்காமல் அக் கன்றுக்குட்டியின் வாய்ப்பூட்டை அவிழ்த்துவிட்டு ஓட்டம் பிடித்தான்.

கன்று, கட்டை அவிழ்த்த உடனே தாயிடம் பாய்ந்து நன்றாக உரிந்து குடிக்க ஆரம்பித்தது. உள்ளே இருந்து வந்த பால்காரன் அந்தக் கன்று பால் குடிப்பதைப் பார்த்துக் கடுஞ் சினங்கொண்டு, "யார் இதை அவிழ்த்துவிட்டது?" என்று அங்குள்ளவர்களைக் கோபித்தவாறு பால் குடிக்கும் கன்றை வெடுக்கென்று இழுத்து விரட்டி உதைத்தான்.

அருகிலிருந்த ஒரு பையன், "ஐயா! ஐயா! உங்கப் பையன் வாஸுதான் வந்து அவிழ்த்துவிட்டான். எங்களை என் திட்டு கிருய்?" என்று கூறினன். பால்கார கண்ணனுக்கு வந்த கோபத்திற்கு ஓர் எல்லையே இல்லை. பசுவிடம் கறந்தால் பாலே இல்லை. கன்றுக்குட்டி நன்ருகக் குடித்துவிட்டது. ஒரு அரை ஆழாக்கும் கிடைக்காமையினல் கோபம் முன்னிலும் அதிகமாகப் பெருகி விட்டது...கண்கள் சிவக்க, மீசை துடிக்க தேகமே படபடத்து விட்டது.

கன்றுக் குட்டியின் வயிறு என்று மில்லாது நிறைந்திருப்பதைக் கண்டு மனமும் வயிறும் எரிகிறது. "பாவி மகன், சண்டாளப் பையன், வரட்டும், இன்று அவன் தோலை உரித்துவிடுகிறேன். உன் வயிற்றை அறுக்க....வயிற்றைப் பாரு...ஏத்தச் சால்போல உப்பி விட்டது"...என்று கன்றுக் குட்டியை இரண்டு அறை விட்டுக் குத்தினன்.

"ஐயோ! இன்னும் ஒன்றரைபடி பால் வாடிக்கை இருக்கிறதே! எவ்விதம் அதைக் கொடுப்பேன்? கட்டையில் போகிற மகன்! என் மனமும் வயிறும் எரிகிறதே! வாடிக்கை பால் நான் வாங்கியல்லவோ ஊற்றவேண்டும்" என்று தாறுமாருகத் திட்டினன். பிறகு யாரிடமோ பாலை வாங்கி ஊற்றிவிட்டு வீட்டிற்கு வந்தான்.

வீட்டில் வாஸுதேவன் கட்டி யிருந்த கன்றுக்குட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் அவன் பிதா அபாரமாகப் பொங்கி எழும் ஆத்திரத்துடன் ஓடி வந்து, "பாவி மகனே! படுபாவிப் பயலே! கன்றுக் குட்டியையேண்டா அவிழ்த்து விட்டு வந்தாய்? அத்தனை தைரியமாடா உனக்கு? கொட்டாப்புளி போல பாலையெல்லாம் அதன் வயிற்றை யறுக்கக் குடித்துவிட்டு என் வாயில் மண்ணைப் போட்டதே! நீ நாசமாய்ப் போக. இன்று 12 அணு செலவு வைத்தாயே!...உனக்கு வந்த கேடுகால மென்ன?" என்று திட்டிக்கொண்டே "தபார், தபார்" என்று கண்ட விடமெல்லாம் அடித்து, தலையில் குட்டி, தாடையில் கிள்ளிச் சித்திர வதை செய்து விட்டான்.

சிறு பையன் இந்த வலியைத் தாங்கமாட்டாது, "ஐயோ! ஐயோ! அப்பா! கன்னுக்குப் பால் விடாத பாவம் கொலை செய்வதை விட அதிகமான தென்று என் வாத்தியார் தெரிவித்தார்.

அத்தகைய பாவத்தைச் செய்யும் நீர் என்னை அடித்துக் கொலை செய்யத் துணியமாட்டீர்களா ?...விடுங்கள்...என்று பெரிதாகக் கத்திக் கதறினன்.

கண்ணப்பனுடைய ஆத்திரத்தில் இந்த வார்த்தை எரியும் தீயைத் தூண்டுவது போலாயிற்று. "என்ன...என்ன...வேதாந்தம் படிக்கிருயோ !...வாத்தியாரா சொன்னுன். அந்த வாயாடி கொழுத்த வாத்தியாரிட மிருந்தே 12 அணு வாங்கி வாடா ! அவனை நமது நஷ்டத்தைக் கொடுக்கச் சொல்லுடா !...படவாப் பயலே! வீட்டில் நஷ்டத்தை உண்டாக்குவதற்குத்தான் உன் உபாத்தியாயர் உனக்குச் சொல்லிக் கொடுத்தானு ?"... என்று பின்னும் ஆத்திரத்துடன் கூறி நையப் புடைத்தான்.

சிறு பையன் அதற்குமேல் என்ன செய்வான் ! ஓடிவிட்டான். ஆனல் அன்று முதல் அவன் பசுமாட்டினிடம் வைத்த ப்ரேமை, வாத்ஸல்யம் சொல்லமுடியாது. சதா பசுமாட்டிற்குத் தன் தாயார் தகப்பனுருக்குத் தெரியாது வைக்கோல், பொட்டு, தவுடு முதலியன கொடுப்பதும் திருட்டுத்தனமாக கன்றுக் குட்டியை அவிழ்த்துச் சிறிது நேரம் ஊட்ட விட்டுக் கட்டிவிடுவதும் காலை மாலை இரு வேளையும் பசுவைச் சுற்றி வலம் வந்து வணங்கி அதைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்வதும் பசுவைத் தன் முகத்தோடு முகம் பதித்து முத்தமிடுவது, கழுத்தில் தினவு சொறிவது, தடவிக்கொடுப்பது போன்ற செய்கைகளையே ஓயாது செய்வான்.

அவ்வாறு அவன் செய்யும்போதெல்லாம் பசுவை ஓர் மிருகமாக நினையாது உபாத்தியாயர் சொல்லியதுபோல சாக்ஷாத் லக்ஷ்மியைப்போலவே எண்ணி பக்தியும் வாத்ஸல்யமும் கலந்த அன்புடன் செய்வான். பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் பசுவைத் தானே ஓட்டிக்கொண்டு போய் குளத்தில் குளிப்பாட்டி அழைத்துக் கொண்டு வருவான்.

அவன் வீட்டிலுள்ள எல்லாப் பசுவையும் விட ஒரு குட்டையான அழகிய பசுவினிடமே அவனுடைய அன்பு முற்றும் விழுந்து விட்டது. அந்தப் பசுவையும் கன்றையும் தன்னுயிரினும் இனியதாக நேசித்து வந்தான்.

பையன் தினம் கன்றுக்குட்டிக்குப் பால் விட்டுவிடும் ரகஸியத்தை யறியாத கண்ணன் தினம் பால் குறைந்து வருவதைக்கண்டு பசுவின் மீது கோபித்து, "சனியன் பிடித்த மாடு ! தினி மட்டும்

மரக்கால் கணக்கில் கொட்டிக்கொண்டு சுறப்பே விடுவதில்லை. பால் கொடுக்காத பீடைக்கு வெட்டிக்குத் தீனி யார் போடுவது ?" என்று பால் கறக்கும்போதெல்லாம் சுப்ரபாதம் பாடி மாட்டைக் குத்தியும் அடித்தும் நெஞ்சில் சிறிதும் ஈவிரக்கமற்ற கட்டையைப் போலச் செய்வான். பால் வாங்குவோர்கூட இதைக் கண்டு வெறுப்பார்கள்.

வாஸுதேவன் குரல் கேட்ட உடனே அந்தக் குட்டைப் பசு "அம்மா ! அம்மா !" வென்று கத்தித் தன் சந்தோஷத்தைத் தெரிவிக்கும். அவன் அருகில் வந்து தட்டித் தடவி முத்தமிட்டுச் சொறிந்தால்தான் பேசாதிருக்கும். இல்லையேல் அது கத்திக்கொண்டே இருக்கும்.

பையன் பசுமாடே கதியாக விருந்து விஷமம் செய்கிறுன். படிப்பதே கிடையாது. இதை மறப்பதற்கு வழி செய்ய எண்ணி கண்ணப்பிள்ளை மாட்டையும் கன்றையும் வாஸுவுக்குத் தெரியாது தன் சினேகிதருக்கு விற்று ஓட்டிவிட்டு, அது கறக்கவில்லை யென்பதற்காக விற்று விட்டதாகக் கூறிவிட்டான்.

பசுவைப் பிரிந்ததனுலேயே வாஸுவுக்கு மிக்க விசனமும் ஏக்கமும் உண்டாகி ஊண் உறக்கத்தையும் நாடாது வெகுவாய் மெலிந்து நான்கு தினத்திற்குள்ளேயே துரும்பு போலாகிவிட்டான். பசுவையே எண்ணிப் புலம்பவும் ஆரம்பித்துவிட்டான்.

பொழுது விடிந்தால் தீபாவளிப் பண்டிகை. ஊர் முற்றிலும் ஒரே சந்தோஷம், கொண்டாட்டம், குதூகலம். சிறுவர் சிறுமியரின் ஆரவாரமும் குதூகலமும் கூறத் திறமல்ல. பட்டாஸ் வெடிகளின் சத்தம் வானை யளாவுகின்றது. மத்தாப்பின் பிரகாசமும் புருசு முதலிய பாணவேடிக்கைகளின் காக்ஷியும் கண் கொள்ளாத ஆனந்த மாக விருக்கின்றன. "என் பாணத்தைப் பாரடா ! உன் பாணத்தைப் பாரடா !" என்று சிறு பிள்ளைகளின் பெரிய ஆசைச் சொற்கள் செவியைத் துளைத்தன.

ஆனல் அத்தனை ஆரவாரம் நிறைந்த ஊரில் நமது வாஸு மட்டும் சற்றும் சந்தோஷமே இல்லாது விசனமே நிறைந்த முகமும் கண்ணீர் ததும்ப தலையும் தொங்கவிட்டுக்கொண்டு புலம்புகிறுன். இந்த வேடிக்கையில் அவன் மனம் நாடவே இல்லை. வீட்டிலுள்ள மற்றவர்கள் இதைக் கவனிக்கவில்லையெனினும் பரிகஸித்துச் சிரித்தார்கள். "ஆமாம். இதைப்போல ஆயிரம் மாடுகள் வாங்கியாயிற்று.

விற்றுயிற்று; எத்தனையோ இறந்தும் போயிற்று. அழுகையைப் பாரு...." என்றுர்கள்.

வாஸுதேவனுக்குத் தன்னைப் பெற்ற தாயார் மறைந்துவிட்ட தாகவே தோன்றியது. அந்தப் பசுவையும் கன்றையும் அவன் முறையே "கோகிலா! சுசீலா!" வென்று அழைத்துக் கொஞ்சு வான். அந்தப் பசுவும் கன்றும் கட்டியிருந்த இடத்தில் சென்று பார்ப்பான். முகத்தில் பரிதாபம் தாண்டவமாடுகிறது. அவன் அந்த இடத்தில் சற்று நின்று கண்ணீர் உதிர்ப்பான்.

"அடாடா! நாளைய தினம் தீபாவளியன்று காலையில் முதன் முதல் லக்ஷ்மிக்கு மங்களஸ்நானம் செய்வித்து லக்ஷ்மி பூஜைசெய்ய நினைத்ததெல்லாம் வீணுகிவிட்டதே!" என்று விசனித்தான். அவ னுக்கும் ஏக்கம் பிடித்துவிட்டது. சதா "கோகிலா! சுசீலா!" வென்று வாய் பிதற்றிகொண்டே தாங்கமாட்டாத உணர்ச்சியினுல் புலம்பினுன். அவனுக்குப் பசுவும் கன்றும் இல்லாத இடம் பாழாகத் தோன்றுகிறது....

மறுதினம் தீபாவளி; எங்கும் ஒரே ஆனந்தம். கிணற்றில் ஜலம் இழுக்கும் சத்தம் மூன்று மணி முதல் காதை செவிடு படுத்துகிறது. மங்கள ஸ்நானமும், கடவுள் பூஜையும், புதிய உடை யுடுத்திக் களிப்படைவதும், பட்டாஸ் வெடிப்பதும் ஊரே களிப்புக் கடலில் கொந்தளிக்கின்றது.

நமது சிறுவன் தாயாரின் பலவந்தத்திற்காக எண்ணெய் ஸ்நா னம் செய்துவிட்டுத் தெருக்கோடியில் நின்றுகொண்டு, இத்தனை நேரத்திற்குத்தான் நமது கோகிலா மேய்ச்சலுக்குச் செல்லும்.... உம்....இன்று எங்கிருக்கின்றதோ! யார் வீட்டில் அதை வாங்கி சந்தோஷமாக விருக்கிறுர்களோ! பால் குறைந்து விட்டதென்றுல், உடனே விற்று அதைப் பணமாக்கி விட்டார்களே! அடாடா! உழைக்கும் வரையிலும், உதவி இருக்கும் வரையிலுந்தான் பிரயோ ஜனம். இல்லையேல் வீண் வஸ்துவாகி விடுகிறது...என்று எண்ண மிட்டுக்கொண்டிருந்தான்.

அச் சமயம் அவன் பின்புறம், "அம்மா! அம்மா!" வென்று கத்திக்கொண்டே பசுமாடு ஓடி வரவும் அதன் கழுத்தில் கட்டிய கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஒரு ஆள் கன்றுக்குட்டியுடன் ஓடி வரவும் கண்ட வாஸுதேவன் மெய் மறந்தான். அதே நிமிஷம் பசுமாடு வாஸுவினருகில் வந்து சந்தோஷத்துடன் நின்றது. வாசு

பேரானந்தம் அடைந்து பசுவையும் கன்றையும் ஏக காலத்தில் சேர்த்துக் கட்டிக்கொண்டு, "கோகிலா! சுசீலா!...என்னருமை லக்ஷ்மீ!"...என்று கூறியபடியே அவைகளின் முகத்தோடு முகம் பதித்து, பசுமாட்டின் வாத்ஸல்யத்தில் ஐக்யமாகிவிட்டான். அந்த அருமைக் காக்ஷியை வர்ணிக்க முடியுமா?

ஸ்ரீமதி உமா தேவி எழுதியது

என்று வரைந்திருப்பதைக் கண்டதும் சாகரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "என்ன......ஓர் பெண் பிள்ளை எழுதியதா இது?...பெண்பிள்ளை...பெண் பிள்ளையின் கதைக்கா பரிசு...... என்ன!...இந்தப் பெண் பிள்ளை எழுதிய கதையையா நான் படித்தேன்......என்ற குழப்பம் பெரிதாக உண்டாகி, சாகரனை ஏதோ சித்திரவதை செய்கிறது. மீண்டும் கதையின் மீதி பாகத்தைப் படித்தான்.

அதே சமயம் அதைப் பிடித்து வந்த ஆள் "போதும்! போதும்! பணத்தைக் கொட்டி வாங்கி நாலு நாளாச்சு; ஒரு பீல் பால் கொடுக்க வில்லை. ஆகாரமும் எடுக்கவில்லை. மேச்சலுக்குப் போய் மேய வில்லை. 'அம்மா அம்மா' வென்று கத்துவதைத் தவிர தண்ணீர் கூட குடிக்கவில்லை. கிட்ட வந்தால் உதைக்கிறது. முட்டுகிறது. பசுவாக இல்லை. புலியா யிருக்கிறது. கொண்டு விட்டு வரச் சொன்னாரு எஜமான்" என்றான். சுபம்.

இந்தக் கதையைப் படிக்க வாரம்பித்ததுமுதல் சாகரனுக்குத் தன்னையே மறக்கும்படியாகிவிட்டது...என்ன! இந்தக் கதை முடிந்துவிட்டதே! எப்படி இதை ஒரே மூச்சில் முடித்தோம்... கதையிலென்ன விஷயம் என்று பார்த்தால் பசுமாட்டின் அன்பைத் தவிர வேறு காணோம். படிக்க ஸ்வாரஸ்யமாக இருப்பதன் காரண மென்னவென்று வியந்தவாறு கதை முடிந்த பக்கத்தின் கீழே காணப்பட்ட குறிப்பைக் கவனமாகப் படிக்கத் தொடங்கினான்.

குறிப்பு:—இக் கதையில் விஷயம் பசுமாடும், அதனிடம் வாத்ஸல்யமும்தான் ப்ரதானம். வேறு சிக்கல் முக்கலான விஷயங்கள் எதுவுமே இல்லை. உணர்ச்சியையும் பால்காரர்களின் கடின ஹ்ருதயத்தின் செய்கைகளையும் வெகு தெளிவாயும் சுருக்கமாயும் காட்டி

யிருப்பது மிகவும் போற்றத்தக்கதாகும். சிறுகதை என்பதன் கருத்தே உணர்ச்சி யூட்டுவது. அது மிகவும் பழயதான விஷயமாயி னும் படிக்கப் படிக்க மனத்தைக் கவரக்கூடியதுதான் அதன் சார மாகும்... சிறுவனின் பரிசுத்தமான ஹ்ருதயத்தில் தோன்றிய உணர்ச்சி பாராட்டத்தக்கது. பட்டாஸ் முதலிய பாண வேடிக்கை களில் சிறுவர்கள் மயங்குவது இயல்பு. இருந்தாலும் இச் சிறுவ னுக்கு அதன்மேலும் மனம் செல்லாது பசுமாட்டைக் கடவுள், லக்ஷ்மி என்கிற ஓர் உயர்ந்த நோக்கத்துடன் நேசித்துப் பக்தியும் அன்பும் செலுத்தும்படியாக ஆசிரியர் சித்திரித்திருப்பதும், காருண் யத்துடன் கன்றுக்குட்டிக்குப் பால் ஊட்டவிடுவதும் புகழத்தக்க தாகும்.

மேலும், இதன் ஆசிரியர், இதில் ஓர் முக்கியமான தத்துவத்தை நுட்பமாகக் காட்டியிருப்பது குறிப்பிடத் தக்கதே! பசுமாடு ஸ்ரீ மகா லக்ஷ்மியின் அம்சமாகையினுல் அதை யாவரும் போற்றி, கோஸம்ரக்ஷணை செய்து அதன் பாலையே ஊட்டிக் குழந்தைகளைப் பரிசுத்தமாக வளர்க்கவேண்டும் என்ற கருத்து ஒன்று. பண்டைய காலத்துப் பழக்க வழக்கங்களை விடலாகாது என்பதை நினைப்பூட்டு மிடத்துப் பசுமாட்டின் சாணத்தையும் கோமியத்தையும் சுகாதார விதியுடன் கலந்து வெகு திறமையாகக் காட்டியிருப்பது ஒன்று. போதகாசிரியர்கள் எப்படி போதித்தால் மாணவர்கள் மனத்தில் விரைவில் பதியும் என்ற தத்துவத்தை மிகவும் ச்லாகிக்கத்தக்க முறையில் காட்டியிருப்பது ஒன்று. பால்காரர்களின் இருதயம் கடும்பாறையினும் கொடிது. பாபத்திற்கும் அஞ்சாது. செத்த கன்றை வைத்துப் பால் கறக்கும் அநியாயத்தை அழகாகக் குறிப் பிட்டு அத்தகையோர்களின் மகனே அதற்கு நேர் எதிராக இருப்ப தாய்க் காட்டியுள்ளது வியக்கத்தக்கதே யாகும். இத்தகைய உயரிய அம்சங்களுக்காக முதல் பரிசு வழங்கப்பட்டது. இந்த ஆசிரியர் இதுபோன்ற பல உணர்ச்சி தரக்கூடிய கதைகளால் உலகத்திற்கு உதவிசெய்ய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

பத்திராதிபர்.

இந்தக் குறிப்பையும் அதிஸ்வாரஸ்யமாகவே நமது சாகரன் படித்தான். மீண்டும் இக்கதையை ஒருமுறை ஊன்றி முழு கவனத் துடன் படித்தான். அந்தக் குறிப்பில் கண்ட எல்லா விஷயங்களும்

மிகவும் பொருத்தமாயும் ஒழுங்காயும் இருப்பதாகவே அவன் மனத்தில் பட்டது. "என்ன ஆச்சரியம்! ஒரு பெண்பிள்ளை எழுதியுள்ள கதையிலும் ஒரு பெண்பிள்ளை கூட மருந்திற்கும் இல்லை. ஆனால் எத்தனை உணர்ச்சி...எத்தனை அன்பு...எத்தனை நம்பிக்கை...சிறுவனின் உறுதியும் உணர்ச்சியும் நம்மை ப்ரமிக்கவன்றோ செய்தது... கேவலம் ஓர் பசுமாடு...பசுமாட்டை ஆதாரமாகக் கொண்டு கதை சித்தரித்திருப்பது என்ன அதிசயம்...

ஆசிரியரும் மாணுக்கரும் என்று நாமும் ஆரம்பித்தோம் (தன் கதையை ஒரு முறை படிக்கிறான்) சீச்சீ! பத்திரிகைகளின் அபிப்ராயங்கள் மிகவும் சரியானவையே யாகும்...உப்பு சப்பு இல்லை... வெறும் எழுத்துக்கள் கோர்வைதான் இருக்கிறது...சே! வெட்கம்—வெட்கம்...படித்த ஓர் ஆண்பிள்ளை எழுதியது தோல்வியுற்றது... ஒரு பெண்பிள்ளை எழுதியது ஜெயித்ததா!... இது கேவலம் பரிகஸிக்கக் கூடியதல்லவா?"... என்று மிக்க அவமானமும், மனக்லேசமும் அடைந்து ஒரு மாதிரியாகிவிட்டான். அவன், திரும்பத் திரும்ப அக் கதையையும் குறிப்பையும் பலமுறை படித்துப் பித்தன்போல ஏதேதோ எண்ணியவாறு குழம்பிப்போய்விட்டான்.

அதிகாரம் 6

முருகனிடம் பக்தி—சிறுகதைப் பித்து

நமது வீர வாலிபன் சாகரனுக்கு ஓயாமல் கதை எழுதும் விஷயத்திலேயே மனது லயித்துப்போய் அதே சிந்தனையுடன் இரவு பகல் யோசனை செய்வதும் மூளை குழம்புவதுமாக ஆகிவிட்டது. எவ்விதமாகவாவது உணர்ச்சியளிக்கும் ஓர் சிறந்த சிறு கதையை எழுதியனுப்பி, முன்பு வந்த அவமானத்தை மாற்றிக் கொண்டால்தான் தன் மனது சமாதானமடையும் என்கிற தீர வைராக்யம் உண்டாகிவிட்டது.

அம்மாதிரி வைராக்யம் உண்டாகிய நாள்முதல் சதா ஏதோ யோசனை செய்வது, எழுதுவது, கிறுக்குவது, கிழிப்பது இப்படியே ஓர் ப்ரமை பிடித்துவிட்டது. முன்போல சிவானந்தத்தினிடமும்

அதிகம் பேசுவதில்லே. சதா இதே யோசனையில் மூழ்கிவிட்டான். தான் ஓர் உயரிய உணர்ச்சி ததும்பக்கூடிய அழகிய கதையை எழுத வேண்டு மென்ற ஆவல் உண்டாகிவிட்டதால், அதுமுதல் இயற்கை தேவி எங்தெந்த விடங்களில் தாண்டவ மாடுகின்ருளோ, அந்த விட மெல்லாம் தான் நேரே சென்று பார்த்து, அவைகளில் முக்யமான வற்றை யெல்லாம் புகைப்படம் பிடித்துக்கொள்வதும் தனது குறிப்பில் எழுதிக்கொள்வதுமாக வாரம்பித்தான்.

இச் சந்தர்ப்பத்தில் செட்டியார் வியாபார நிமித்தம் சாகரனைச் சில ஊர்களுக்குப் போகும்படி கட்டளையிட்டார். தனது எண்ணத்திற்கு இதுவும் நல்லதென்றே நினைத்து அவன் சந்தோஷ மாகவே ப்ரயாணமாகிவிட்டான். இதற்கு முன்பெல்லாம் ஏனே தானே என்றிருந்த சாகரன் எல்லா விஷயங்களையும் கூர்ந்து கவனிக்கவும், குறிப்புகள் வரையவும் தலைப்பட்டானென்ருல், அவனுடைய கதை எழுதும் ஆர்வம் எத்தனை ஓங்கி வளர்ந்து வருகிறதென் பதைக் கூறவேண்டுமா!

புகைப்படம் எடுக்கும் பித்துப் பிடித்த வுடனே சாகரன் பசு, பக்ஷி, நாய், பூனை, மாட்டு மந்தை, ஆட்டு மந்தை முதலிய எல்லா வற்றையும்—என் தெருவில் ஆப்பக்கடை வைத்திருக்கும் பாட்டி முதல் கருவேப்பிலை விற்கும் குறத்தி வரையில்—படம் பிடிக்கத் தொடங்கினுன்.

தான் சென்ற காரியத்தின் நிமித்தம் திருச்செந்தூருக்குச் செல்லவேண்டி வந்தது. அந்த ஊரில் ஓர் பெரிய மனிதரின் வீட்டில் தங்கினுன். அவனுக்கு ஏரி, குளம், கடல் முதலிய இடங்களில் ஸ்நானம் செய்வதில் அதிக ப்ரீதியாகையினுல் திருச்செந்தூர் சமுத்திரத்திற்குச் சென்ருன். திருச்செந்தூர் வேலவன் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ப்ரம்மாண்டமான கோவிலும் அக் கோவில் மதில்மீது சமுத்திரத்தின் அலைகள் பேரிரைச்சலுடன் ஓட்டமாக ஓடிவந்து மோதியடிக்குங் காக்ஷியானது, மதிலைத் தொட்டு நமஸ்காரம் செய்து ஆனந்தக் கூத்தாடி அகமகிழ்ந்து, இச் செய்தியை மற்ற இனத்தினருக்குத் தெரிவிப்பதற்கு விரைந்து செல்வதுபோன்று அதி யற்புதக் காக்ஷியாகத் தோன்றியது.

சாகரன், தன்னை மீறிப் பரவசமடைந்து பக்தியும் ஆனந்த மும் இயற்கை தேவியின் அற்புத தரிசனத்தின் அளப்பரிய வசீ கரமும் பொருந்திய சாகரத்தில் துளைபவனுகவே ஆகிவிட்டான்,

அவன் வேலையின் நிமித்தம் பலதடவை பல ஊர்களுக்குச் சென்றிருந்தும் இம் மாதிரியான ஓர் ஸ்தல அழகையும் அமைப்பையும் இயற்கையின் அதி சிங்கார வனப்பையும் கண்டதே இல்லை.

சாதாரணமான சமுத்திர ஸ்நானத்திற்குச் செல்வதாக அலக்ஷ்யமாக எண்ணி வந்த சாகரனுக்கு அந்தச் சமுத்திரத்தின் அழகும் அதன் கரைமீது அதியற்புதமான கோவிலும், கோயிலுள் பக்த கோஷ்டிகளும் அபார சக்திவாய்ந்த வேலவனின் தரிசனமும் அவனை அடியோடு மாற்றிப் பித்தனுக்கிவிட்டன.

சமுத்திரத்தில் தன் மனம் போனவரையில் நீந்தலடித்து ஸ்நானம் செய்தான். சமுத்திரத்திலிருந்த வண்ணமே சுற்றுமுற்றுமுள்ள கண்ணைக் கவரும் அற்புதக் காக்ஷிகளையும் வானத்தை யளாவும் கோபுரத்தையும் மதில் சுவற்றையும் சிகரங்களையும் பார்த்துப் பார்த்துப் பிரும்மானந்தமடைந்தான்.

பண்டைய காலத்துப் பெருமையும் புராணங்களின் மகிமையும் அவன் மனத்தின் முன்பு புத்துயிர் பெற்று எழுந்தன. இத்தனை அருமையான இடத்தை இதுபரியந்தம் பார்க்காமல் மகா மூதேவியாக விருந்தோமே!....இந்த வைபவமான க்ஷேத்திரம் இருக்கிறதென்றுகூட அறியாமல் காலம் கடந்ததே!

ஆஹா! என்ன அற்புதமான காக்ஷி! அக் காலத்தில் கவிகள் அதியாச்சரியமாகக் கவிகள் செய்தார்களென்றால் இம்மாதிரியான பரிசுத்தமான இடமும் பக்தியும்தான் காரணமாக விருக்கவேண்டும். இதைக் கண்ட எவர் மனந்தான் ஆனந்தமடையாது. எவர் மனத்தில்தான் பண்டைய காலத்துப் பெருமையும் பக்தியும் உதிக்காது......என்று தனக்குள் பலவிதமாக எண்ணி ஆச்சரியமுற்றபடியே இயற்கையான அழகைப் பார்த்துக்கொண்டே வெகு நேரம் நின்றான்.

அதன் பிறகு ஸ்நானத்தை முடித்துக்கொண்டு கோவிலுக்குச் சென்றான். இதற்கு முன்பெல்லாம் கோவிலுக்குச் செல்வதென்றால் சாகரனுக்கு அத்தனை பிடித்தமே கிடையாது. அன்று அவனை அறியாமலேயே கோவிலுக்குச் சென்றான். காம்பீரமாயும் கருணை ததும்பும் பார்வையுடனும் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீவேலாயுதக்கடவுளைத் தரிசித்தான். தன்னையறியாத பக்திசாகரத்தில் ஈடுபட்டு, "முருகா! ஷண்முகா! குகா! வேலாயுதா! திருச்செந்தூரா! வள்ளிமணாளா!"...வென்று பல தோத்திரங்கள் செய்தான்.

பிறகு கோவில் ப்ரதக்ஷணம் செய்கையில் அங்கு ஒருபுறம் பிரும்மாண்டமான மலையைக் குடைந்து அந்த மலைக்குள் ஒருபுறம் திருப்பதி ஸ்ரீ வெங்கடாசலபதி, ஒருபுறம் கஜலக்ஷ்மி, ஒருபுறம் ரங்கநாதர் பள்ளிகொண்டுள்ள சேவை ஆகிய தரிசனங்களைச் செய்து கொண்டான். மலையைக் குடைந்து ஸ்வாமிகள் சந்நிதியாக விருக்கும் இடம் மிகவும் ஆச்சரியமாக விருந்தது. அந்த அதிசயத்தையும் சற்று நேரம் கண்டு பிறகு வெளி மண்டபத்திற்கு வந்தான்.

வெளி மண்டபத்துப் படியின்மீது அலைகள் மோதுவதும் சமுத்திரத்தின் கொந்தளிப்பும் சாகரன் மனத்தைக் கவர்ந்தன. ஆகாரத்தையும் மறந்து அன்று பகல் 2 மணி வரையில் அவ் விடத்திலேயே இருந்துவிட்டான். பிறகே தன் வேலை ஞாபகத்திற்கு வந்தது. எழுந்து சென்றான். ஜனங்களின் சௌகரியத்திற்காக அங்கு கோயில் ஆரம்பம்முதல் கடைத்தெருவு பூராவும் இன்னும் பல தெருக்களுக்கும் சேர்ந்தார்ப்போல பெரிய பந்தல் போட்டு நிழல் உண்டாக்கியிருப்பது மிகவும் போற்றத்தக்கது.

அதோடு ஹரிஜனங்களுக்கென்று கோவிலுக்கு எதிரிலே ஒரு பெரிய மண்டபம் கட்டியிருப்பதும் சிலாகிக்கத்தக்கதா யிருந்தது. இத்தனை வைபவங்களையும் பார்த்துக்கொண்டே தான் இறங்கி இருந்த ஜாகைக்குக் கால்நடையாகவே சென்றான். அன்றைய தினம் அவன் மனம் ஒரே ஆனந்தக் களிப்பில் அமிழ்ந்திருந்தது.

அதன் பிறகு தன் வேலைகளைக் கவனித்துக்கொண்டு மாலையிலும் கோவிலுக்கு வந்தான். பிச்சைக்காரர்களின் எண்ணிக்கையோ கணக்கே இல்லை. அவர்களுக்கெல்லாம் பில்லை சாதங்கள் வாங்கிக் கொடுத்தான். இயற்கை வனப்பு முற்றும் புகைப்படம் பிடித்துக் கொண்டான். அவ் வூரில் அவன் வேலை முடிவதற்கு இரண்டு மூன்று தினங்களாயிற்று. அதுவரையில் தவறாது சமுத்திர ஸ்நானமும் வேலாண்டியின் தரிசனமும் விடாது செய்து இன்புற்றான்.

செட்டியாரின் வேலை நிமித்தம் சாகரன் மனத்தில் ஈச்வர பக்தி முதல் முதல் உண்டாகியது குறிப்பிடத் தக்கதே யாகும். சாகரன் இறங்கி இருந்த வீட்டில் பரிசாரகன் கிடையாது. அந்த வீட்டுக்காரருடைய விதவைப் பெண்ணே சமையல் செய்வதும், அவரே சாகரனுக்குப் பரிமாறுவதுமாக உபசாரங்கள் நடந்தன. சமையலின் ருசி அற்புதமாயிருந்ததால் சாகரன் தாராளமாகச் சாப்பிடலானான். ஆனால், ஓர் விதந்து சமைத்ததெனத் தெரியாது.

நான்கு தினங்களாக விடாமல் சமுத்திர ஸ்நானம் செய்து வந்ததனால் சாகரனுக்கு அது உடம்புக்குத் தாங்காமல் ஜுரம் வந்து விட்டது. இறங்கி இருந்த வீட்டிற்கு நேரே வந்தான். வீட்டுக் காரர் ஆபீஸுக்குச் சென்றிருந்ததால் அவனுக்கு மிக்க தரும சங் கடமாகி விட்டது. தலை இடியும் வாந்தியும் உண்டாயின. அவன் வாந்தி எடுத்துக்கொண்டு தவிப்பதைப் பார்த்த அந்த விதவைப் பெண்ணோ வீட்டில் தன் பிதா இல்லாமையினால் என்ன செய்வ தென்று தோன்றாது தவிக்கின்றாள். இவனுடைய பரிதாபத்தைப் பார்த்தாலோ மிகவும் கண்றாவியாக விருக்கிறது.

சில நிமிடங்கள் பார்த்தாள். உடனே அப் பெண்மணி 'ஆபத் தில் உதவுவதற்கு யார் துணை வேண்டும்? ஈசனேதான் துணை' என்று தைரியமாக முன்வந்து ஒரு செம்பில் தண்ணீரைக் கொண்டு சாகர னின் முன்பு வைத்தாள். அடுத்த வீடே சோடாக் கடை யாகையி னால் அங்கு சென்று ஒரு சோடா வாங்கிக்கொண்டு வந்து அதையும் உடைத்துச் சாகரனின் எதிரில் வைத்துவிட்டு "ஐயா! இதைச் சாப் பிடுங்கள். என் பிதா வருவதற்கு 5 மணி யாகும். அவர் வந்த உடனே வைத்தியரை அழைத்துவரச் சொல்லுகிறேன்" என்று குயில் போல மொழிந்து தூர நின்றாள்.

சாகரனுடைய அத்தனை தேக பாதையிலும் கூட, தன்னெதிரில் ஓர் பெண் வந்து தண்ணீரையும் சோடாவையும் வைத்துப் பேசு கிறாள் என்பதைக் கண்ட உடனே அவனுடைய இயற்கையான மன வெறுப்பும், கூச்சமும், அசூயையும் உண்டாகிவிட்டன. அவனுக்கு அவ் விடத்திலேயே நிற்கக்கூடாத ஓர் வித வேதனை ஏற்பட்டுவிட்ட தால் உடனே வாரிச் சுருட்டித் தன் மூட்டைகளைக் கட்டிக்கொண்டு ஒரு கடிதம் எழுதி மேஜை மீது வைத்துவிட்டு ஒரு வண்டியமர்த்திக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்துவிட்டான்.

ரயில் புறப்பட இன்னும் 4 மணி நேர மிருக்கிறது என்றதை யறிந்ததும் அங்குள்ள இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறைக்குச் சென்றான். அங்கு ஒரு துரையும் துரைசானியும் குழந் தைகளுடன் உட்கார்ந்து குலாவிக்கொண்டிருந்ததைக் கண்டு அங்கு செல்லமாட்டாது வெளியே வந்துவிட்டான்.

இவனுடைய உடம்பின் ஜுர வேகமோ ஆளைக் கீழே தள்ளு கிறது. ஆகையினால் ப்ளாட்பாரத்திலேயே வந்து படுக்கையை விரித்துக்கொண்டு படுத்துவிட்டான். இதைக் கண்ட அந்த துரை

சானி வெளியே வந்து ஆங்கிலத்தில் "ஐயா! என் வெளியில் படுத்தீர்கள். உள்ளே அந்த பக்கம் சோபா இருக்கிறது. கட்டிலிருக்கிறது. அதில் படுத்துக்கொள்ளும். இரண்டாவது வகுப்பு டிக்கட்டு வாங்கிவிட்டு, இம்மாதிரி படுப்பது சரியல்ல. எழுந்திருங்கள்" என்றாள்.

சாகரனுக்கு இது இன்னும் பெரிய தொந்தரவாகிவிட்டது. வெள்ளைக்கார மாது பேசுகையில் பதில் பேசாவிட்டால் மரியாதைக் குறைவாகிவிடும் என்பதை யுணர்வானுகையினால் மெல்ல, வேண்டா வெறுப்பாக பேசத் தொடங்கி, "இல்லை...இல்லை...இங்கு இருப்பது எனக்கு கஷ்டமில்லை. எனக்கு ஜுரம், தலை இடி, வாந்தி உபத்திரவமாக இருப்பதால் அதற்கெல்லாம் இந்த இடம்தான் தேவலை......வருத்தப் படவேண்டாம்" என்றான்.

துரைசானி:—ஓ!....உடம்பு சரியில்லையா!....அப்படியானால் உள்ளேதான் படுத்துக் கொள்ளவேண்டும்....இந்த இடம் சரியில்லை. உங்களைப் பார்த்தால் பெரிய மனிதராகக் காணப்படுகிறீர்கள்... எங்களுடன் இருப்பது உமக்குச் சரிப்படவில்லையென்றால் நீர் இந்த அறையில் இரும்......என்று கூறி ஸ்டேஷன் மாஸ்டரை நோக்கி "ஸார்! இவருக்கு உடம்பு சரி இல்லை. தற்போது இந்த ரூமில் ஆள் இல்லாமையினால் இங்கு படுத்திருக்கட்டும்—என்று சிபார்சு செய்தாள். அதற்கவர் இசைந்ததால் சாகரனிடம் வந்து, "சார்! எழுந்து வாருங்கள்" என்றாள்.

சாகரன் தயங்குவதைப் பார்த்து, துரைசானி சிரித்துக் கொண்டே, "ஐயா! என்ன யோசிக்கிறீர்கள்? இந்த வெள்ளைக்காரி என்ன இத்தனை உபசாரம் செய்கிறாளே என்று நினைக்கிறீரா! உங்கள் குரு மகாத்மா காந்தியடிகள் அனுஷ்டிக்கும் அஹிம்சா தர்மத்தை நாங்கள் கடைப் பிடிப்பவர்கள். பிறர் வருந்த சகிக்க முடியாது. நான் ஜீவரக்ஷக சபையின் காரியதரிசியாக விருக்கிறேன். அதோடு நான் ஓர் டாக்டர். என் புருஷரும் டாக்டர். அதனால்தான் நான் ஒருவிதமான அக்கரையுடன் சொல்கிறேன்" என்றாள்.

"இதென்ன கஷ்ட காலமாக இருக்கிறதே!" என்று சாகரனுக்குப் பெரிய தரும சங்கடமாக ஆகிவிட்டது. இதற்குள் சிலர் அங்கு வந்து ஏதோ விசேஷம் நடப்பதாக எண்ணிக் கூடிவிட்டார்கள். இதைக் கண்டதும் அவமானத்துடன் எழுந்து அங்குள்ள அறைக்குச் சென்று தன் படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டு அந்த

வெள்ளேக்கார மாதிற்கு வந்தனம் செய்து மெல்ல அனுப்பி விட்டான்.

சிறிது நேரத்திற் கெல்லாம் மீண்டும் அந்த துரைசானியும் துரையும் வந்து 'என்ன வேண்டும் ?'...என்று விசாரித்தார்கள். இது வும் சாகரனுக்கு மிக்க அருவருப்பாகவே இருந்தது. அவர்களுக்கு வண்டி வந்துவிட்டதால், அவர்கள் போய்விட்டார்கள். சாகரன் ஜுர வேகத்தில் உடம்பு தெரியாது படுத்துக் கிடக்கிறன்.

இன்னும் சிறிது நேரங் கழித்து சில பெண்பிள்ளேகள் ஸ்டே ஷனுக்கு வந்து வெய்ட்டிங் அறைக்குச் சென்ருர்கள். அங்கு சாகரன் படுத்திருப்பதைப் பார்த்துவிட்டு "இது யார் இங்கு படுத் திருப்பது, ஐயா ! இது பெண்கள் தங்குமிடம் என்று தெரியாதா ! இங்கு வந்து படுத்துவிட்டீரே ! எழுந்திரும்" என்று சற்று அதட் டினுற்போலக் கூறினுர்கள்.

உடம்பு தெரியாமல் படுத்திருக்கையிலும் இந்த வார்த்தைகள் அவன் காதில் சுறீலென்று தைத்தன. உடனே அலறிக் கட்டிக் கொண்டு "ஐயோ ! இது லேடீஸ் வெய்ட்டிங் ரூமா!...தெரியாமல் போய்விட்டதே! அடாடா !"......என்று கூறிக்கொண்டே அவ் விடத்தை விட்டு ஓட்டமாக வெளியே வந்தான். புருடர்கள் அறை யில் யாரும் இல்லாமையால் அங்கு சென்று படுத்துக்கொண்டான்.

சாகரன் வாய் திறக்காமல் மூட்டையைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்ட செய்கையானது அந்த விதவைப் பெண்ணேத் திடுக்கிடச் செய்தது. அவள் பிதா வந்தால் என்ன சொல்வது என்று பயமும் திகிலும் உண்டாகிவிட்டன. அதோடு அந்த மனிதன் இத்தனே உடம்பிலும் எதற்காக இப்படி எழுந்து ஓடிவிட்டான் என்பது அவளுக்கு விளங்காமல் பெரிய ஆச்சரியத்தைக் கொடுத்தது.

மாலே 5 மணிக்கு அவள் பிதா வந்தார். அவர் மேஜைமீதுள்ள கடிதத்தைப் பார்க்கும் முன்பே அவரது மகள் நடந்த விஷயத்தைக் கூறிவிட்டாள். இதைக் கேட்டு அந்த மனிதரும் ஒன்றும் விளங் காமல் அதிசயித்தார். சாகரன் அங்கு வைத்துச் சென்ற கடிதத் தைப் படித்தார்.

"ஐயா !

திடீரென்று அபாரமான ஜுரம் வந்துவிட்டதால் நான் அவசரமாக ஊருக்குச் செல்கிறேன். தங்களுடன் சொல்லிக்கொள்ள முடியாமைக்கு மன்னிக்க வேண்டு

கிறேன். உங்களுடைய அன்பான உபசாரத்தை என்றும் மறக்கமாட்டேன். ஊருக்குப் போய் கடிதம் எழுதுகிறேன்.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள
சாகரன்"

இதைப் படித்தார். இதற்கு மேல் என்ன செய்வது. சாகரனுக்கோர் கடிதம் எழுதிவிட்டுப் பேசாதிருந்து விட்டார்.

சாகரன் வெயிட்டிங் ரூமில் சென்று படுத்ததும் இன்னும் என்ன தடங்கல்கள் வருமோ என்ற குழப்பத்துடன் தூங்காமலேயே புரண்டுகொண்டிருந்தான். ஜுர வேகத்தினுல் சற்று நேரத்திற்கெல்லாம் மீண்டும் தூங்கிவிட்டான். இவனுக்கு அங்கு தெரிந்தவர்களும் இல்லை. இவன் எங்கே போகவேண்டுமென்றும் ஒருவருக்கும் தெரியாது.

சாகரன் செல்லவேண்டிய வண்டி வந்துவிட்டது. இவனை யாரும் எழுப்பவில்லை. இவன் தூங்கிக்கொண்டிருப்பதால் இவன் வேறு எங்கு செல்லவேண்டுமோ என்று நினைத்துவிட்டார்கள். வண்டி போய்விட்டது. வெகுநேரங் கழித்துக் கண்விழித்துப் பார்த்தான் ; விளக்கு வைத்தாகிவிட்டது கண்டு தூக்கி வாரிப்போட்டது. தன் கடியாரத்தைப் பார்த்தான். மணி ஆறடித்தாகிவிட்டது. வண்டி போய்விட்டதென்பதை யறிந்து மிக்க வருத்தமுற்முன். மீண்டும் இவனுக்கு இரவு 1 மணிக்குத்தான் வண்டியாகையினுல், அதுவரையில் அங்கேயே காத்துக்கிடக்கும்படி யாகிவிட்டது. இனி என் செய்வது ?

ஜுரத்தின் வேகம் ஒருபுறம், தலைவலியும் உடம்பு வலியும் ஒரு புறம், பசியொருபுறமும் பாதிக்கின்றன. எல்லா அவஸ்தையுடன் தலைவிதியே என்று படுத்திருந்தான். ஸ்டேஷனில் உள்ள ஓட்டலில் சிறிது காப்பி வாங்கிக் குடித்தான். சமுத்திர ஸ்நானமும், ஸ்வாமி கோவிலும், இயற்கை வனப்பும் எத்தனை ஆனந்தமாக விருந்ததோ அதற்கு நேர்மாருன சங்கடம் உண்டாகிவிட்டது.

விதியே என்று விழித்திருந்து 1 மணிக்கு வண்டி வந்ததும் அதில் ஏறினுன். நல்ல வேளை காலியான இரண்டாவது வகுப்பு வண்டி கிடைத்தது. உடனே அதில் ஏறி படுத்துக்கொண்டான். நிம்மதியாக தூங்கிக்கொண்டே மறுதினம் தன் ஊரையடைந்தான்.

அவன் சென்ற காரியம் முற்றிலும் முடிவதற்குள் இத்தனை அலங்கோலத்துடன் வீடு வந்து விழுந்துவிட்டான். சிவானந்தன் இவனுடைய நிலைமையை அறிந்து தானே பக்கலிலிருந்து கவனித்து வந்தான். பலமான படுக்கை போட்டுவிட்டதால் சுமார் ஒரு மாதத்திற்குப் பிறகுதான் குணமேற்பட்டது.

அதிக பலவீனனாகிவிட்டதால் இரண்டு மாத காலம் பூராவாக ஓய்வு எடுத்துக்கொண்டான். சாகரனுக்கு சங்கீதத்தில் எப்போதும் பிரியம் அதிகம். அவன் சாதாரணமாக நல்ல சங்கீதம் நடக்கும் இடத்திற்கெல்லாம் போய்க் கேட்பது வழக்கம். அதோடு பெரிய வித்வான்களைத் தன் வீட்டிற்கு அழைத்துப் பாடச் செய்து ஆனந்திப்பான்.

பிரதி தினமும் இரவு சாப்பிட்ட உடனே சிறிது நேரம் ஆநந்தமாக சங்கீதம் கேட்டு மகிழும்பொருட்டு அவன் ஒரு பாடகரை ஒரு மணி நேரம் பிடில், வீணை, புல்லாங்குழல், வாய்ப்பாட்டு முதலியன பாடும்பொருட்டு மாதச் சம்பளம் கொடுத்து வைத்திருந்தான். அவர் வந்து, என்று எதை இச்சிக்கிறானோ அதைப் பாடுவது வழக்கம்.

இப்போது தேகசுகம் கெட்டுப் படுத்திருந்து தேறிய நிலையில் ஓய்வுடனிருப்பதால் சாயங்கால வேளையிலும் சங்கீதத்தை ஆனந்தமாகக் கேட்டுவந்தான். மகாத்மா வந்திருந்தபொழுது முதல் நாள் தரிசிக்க முடியாது போய்விட்டது. மறுநாள் அவசரவேலையின் நிமித்தம் ஊருக்குச் சென்றுவிட்டான். தரிசனம் கிடைக்கும் பாக்கியமே பெறவில்லை. இதுவும் ஓர் ஏக்கமாக விருந்தது. பத்திரிகையில் அவர் விஷயத்தைப் பார்த்துக்கொண்டே வந்தான். மகாத்மா திரும்பிப் போகும்போது இங்கு வந்துதான் செல்லப்போகிறார்; ஆதலால், அவரை அப்போதாவது தரிசிக்க எண்ணி, எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

சிறு கதைப் போட்டிக்கென்றே நடக்கும் சில பத்திரிகைகளுக்கு ஓயாது கதை எழுதியனுப்ப வாரம்பித்தான். அப் பத்திரிகைகளில் வரும் கதைகளையும் விடாது படித்து வந்தான். கதைப் பித்து அவனைப் பலமாகப் பிடித்துக்கொண்டது. அது ஒரு ஆனந்தகரமான பொழுதுபோக்காகத் தோன்றியது. அதில் அவனை யறியாத ஓர் உற்சாகமும் ருசியும் ஏற்பட்டுவிட்டன. தினந்தோறும் எழுதுவதும் படிப்பதும் தொழில்போலாகிவிட்டது. பசுமாட்டைப் பற்றிய

உமாதேவியின் சிறுகதை மட்டும் அவன் கவனத்தைக் கவர்ந்தது. அதை தினம் ஒரு முறை புரட்டாமலிருக்கமாட்டான். உமாதேவி யின் கதைகள் வேறு ப்ரசுரமாகும்போதெல்லாம் அதை முதலில் படித்து மகிழ்வான்.

இவன் அதற்குப் பிறகு அனுப்பும் கதைகளில் பெரும்பாக மும் திரும்பி வருவதும் சில மட்டும் தாங்களே திருத்தி எழுதி பத் திரிகையில் இடம் கிடைக்கும்போது போடுவதாகவும் பதில் வந்து விட்டதானது, அவனுக்குப் பெரிய அவமானமாகிவிட்டது. பந்த யத்தில் ஜெயிக்கக்கூடிய கதை ஒன்ருவது தனக்கு அமையாதா என்ற ஏக்கமும் பிடித்துவிட்டது. அதற்காகவே முயற்சி செய்து இரவு பகலாக யோசனை செய்துகொண்டிருந்தான்.

அதிகாரம் 7

மகாத்மா தரிசனம்—மனம் மாறும் அதிசயம்

மகாத்மா திரும்பிச் செல்கையில், நாளையதினம் மீண்டும் வரும் செய்தி யறிந்த சாகரன் தான் ஓர் தனி கார் அமர்த்திக் கொண்டு சென்று பார்க்கத் தீர்மானித்து அவ்வாறே மறு தினம் சென்ருன். அன்றும் முன்போல எள் விழ இடமில்லாமல் இருந்த ஜனக்கூட்டத்தின் வைபவத்தைக் கண்டு ப்ரமித்தான்.

மகாத்மா வெகு சாந்த ஸ்வரூபியாயும் ஓயாமல் சர்க்காவில் நூற்றுக்கொண்டும் யாருடனே பேசிக்கொண்டிருந்தார். அந்த வார்த்தைகளைக் கதவுக்கு வெளியிலிருந்து நமது சாகரனும் கேட்டுக் கொண்டே இருந்தான். அவர் பேசியதாவது :—

"அப்பா! நீ இவ்விதம் செய்வது சுத்த தவருன காரிய மாகும். நீயோ சிறிய வயதுடைய வாலிபன். மன வைராக் யத்துடன் தேசசேவை செய்வது மிகவும் அவசியம். அதைச் செய்ய மற்ருேரைத் தூண்டுவதும் செய்து காட்டுவதும் மிக மிக முக்யமான காரியமே! எனினும் விவாகம் செய்து கொண்ட மனைவியைத் தாய் வீட்டில் விட்டுவிட்டு நீ பிரம்மச்சரியம் கொண் டாடுவது சற்றும் பொருந்தாது. பிரம்மச்சரியம் மனிதனுக்கு எத்

தனை முக்யமோ, அதேபோல இல்வாழ்க்கையும் அவசிய மென்று கருது. இல்வாழ்க்கையிலிருந்து கொண்டே பல தொண்டுகள் செய்யலாம். இல்வாழ்க்கையை ஓர் கேவலமாக நினைக்காதே! ஸ்ரீ சங்கராசாரியரின் சரிதையை நீ படிக்கலில்லையா!''......

என்று மகாத்மா ஒரு யுவனுக்கு உபதேசம் செய்வதைக் கேட்டுக்கொண்டே வெளியிலிருந்த சாகரனுக்குச் சற்று அச்சமும் பயமும் உண்டாகிவிட்டன. "எல்லோரையும் இவர் யோக க்ஷேமம் விசாரித்து, புத்தி புகட்டுவது வழக்கம் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அதேபோல இங்கு நடந்துகொண்டிருக்கிறதே! நம்மைப் பார்த்து நமது விஷயத்தைக் கேட்டால், என்ன சொல்வது? இந்த பெரிய மகானிடம் ஒன்றையும் ஒளிக்கக்கூடாது. ஒளிக்காமல் விஷயங்களைச் சொல்லவும் வெட்கமாக விருக்கிறது. ஏனெனில், இவர் கண்டிப்பாக என் கொள்கையை மறுத்துத்தான் பேசுவார்... ஆகையினால், நாம் கும்பலில் கோவிந்தா போட்டு, தரிசித்துவிட்டு ஓடிவிடவேண்டும்'' என்று தீர்மானித்துக்கொண்டான்.

வெகு நேரம் வெளியிலேயே காத்திருந்தான். உள்ளே இருந்தவர்கள் வெளியே வந்ததும் காலேஜில் படிக்கும் மாணவிகள் ஒரே கூட்டமாக நகைத்த முகத்துடன் வெகு ஆவலாக மகாத்மாஜியைத் தரிசிக்க வந்தார்கள். எல்லோரும் துல்லியமான வெள்ளைக் கதருடை அணிந்துகொண்டு படாடோபம், கர்வம், பெருமை, தலைத் திமிர் ஏதுமின்றி வெகு வணக்கத்துடன் "மகாத்மாஜீ! நமஸ்தே!''... என்று ஒவ்வொருவரும் விழுந்து வணங்கிவிட்டுத் தம் கையிலுள்ள வளையல்கள், கழுத்துச் சங்கிலி, மோதிரம், நோட்டுகள் முதலியன தம் தம் இஷ்டம் போலக் கழற்றிப் பாத காணிக்கையாகக் கொடுத்தார்கள்.

உலகம் போற்றும் உத்தமர் அந்த மாணவிகளின் பக்தியையும் ஒழுக்கத்தையும் கண்டு சந்தோஷத்துடன் அவர்களை உட்காரச் சொன்னார். அவர்கள் யோக க்ஷேமத்தை விசாரித்து அவர்களுக்கு சில புத்திமதிகளைப் போதித்தார்.

வெளியிலிருந்து இந்தக் காக்ஷியையும் சாகரன் பார்த்துக் கொண்டே இருந்தான். இப் பெண்கள் கூட்டத்தைக் காணவும் தனது வழக்கமான எண்ணம் தடை செய்கின்றது. ஆனால், மகாத்மாஜியின் தரிசனமும், பொன் போன்ற மொழிகளும், அவருடைய பொக்கை வாய்ச் சிரிப்பின் வசியமும் இவனை மின்சாரம்

போலப்பற்றி இழுப்பதால், அவ்விடத்துப் பார்வையை வெறுக்க முடியவில்லை.

மாணவிகள் மகாத்மாவின் உபதேசம் பெற்ற பின்னர் தாங்கள் தயாரித்துக் கொண்டிருந்த ஓர் பாடலை எல்லோரும் சேர்ந்து பாட வாரம்பித்தார்கள்.

"ஜெய ஜெய காந்தி மகாத்மா! ஜெயஜெய சாந்தசுத்தாத்மா!

"சத்யமே உருவாம் த்யாகி! அனித்யத்தை வென்ற நல்யோகி!"

என்ற பாடலை வெகு இனிமையாயும் பக்தியாயும் பாடினார்கள். மகாத்மா மனமாற ஆசீர்வதித்து, "குழந்தைகாள்! இம்மாதிரி என்னிடம் கொண்ட பக்தியைத் தேசத்தினிடமும், தேச மாதாவின் விடுதலையைக் கோரித் தெய்வத்தினிடமும் செலுத்திப் பயனடையுங்கள். நான் ஓர் சாதாரண மனிதன். கடவுள் இட்ட கட்டளையின் படி நான் உழைக்க வந்துள்ள ஓர் ஊழியன்தான். ஆகையினால் இப்புகழ் முற்றும் கடவுளுக்கும், நம் தாய்நாட்டிற்கு மாகும்—என்று உபதேசித்தார்.

வெளியில் நிற்கும் சாகரனுக்கு இம் மாணவிகள் குயிலினும் இனிய குரலுடன் ஒன்று கூடிப் பாடியது வீணாகானம் போன்றும் தேன் மாரி போன்றும் சுவையுடன் செவியில் பாய்ந்தது. அவன் ஆயுளில் இம்மாதிரி ஓர் அற்புத கானத்தைக் கேட்டதே இல்லை. எங்கு சங்கீதம் கேட்டாலும் பாகவதர்களும் கச்சேரிக்காரர்களும் பாடிக் கேட்டிருக்கின்றானே யன்றி, ஸ்திரீகளிடம் கொண்ட வெறுப்பு சங்கீதத்திலும் நிறைந்திருந்தது. ஆதலால், அவன் காதுகளையே—அவன் மனத்தையே—அவனால் நம்ப முடியாதபடி ப்ரமிப்பு உண்டாகிவிட்டது.

இம்மாதிரியான ஆனந்த கானத்தைக் கேட்பது இதுவே முதல் தடவை யாதலால், பரவச மடைந்தான். சங்கீதம் முடிந்து விடப்போகின்றதே என்றும் தோன்றியது. அக் கூட்டத்தை அதன் மேல் தன் கொள்கைக்கு விரோதமாகத் தலை நிமிர்ந்து பார்த்தான். சுமார் 15 பெண்களுக்கு மேல் ஓர் பெருங் கூட்டம் காணப்பட்டது. எல்லோரும் சமமாக ஒரே மாதிரியான துல்லியமான தூய கதர் உடையில் அழகிய புஷ்பக் கரை போடப்பட்டிருந்த சேலையுடுத்து நின்றிருந்த காக்ஷியானது வெள்ளாடை யுடுத்து வீணையைக் கைக் கொண்ட வாணியே போன்ற கவர்ச்சி யளிக்கும் தோற்றமாக விருந்தது.

ஆடம்பரமோ, படாடோபமான ஆபரணங்களோ, பகட்டான அலங்காரங்களோ ஒன்றுமில்லாமல் வெகு சாதாரணமாகவும் பார்ப்பதற்கு மிச்சு வசீகரமாயும் காணப்பட்ட அம் மங்கையர் கூட்டம் அடுத்த நிமிடமே புன்னகை பூத்த வதனத்துடன் மகாத்மாவிடம் வணக்கத்துடனும் ப்ரீதியுடனும் மீண்டும் விழுந்து வணங்கி அவருடைய ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு, ஏககாலத்தில் மின்னல் கொடிகள் தோன்றி மறைவதைப் போல மறைந்து விட்டார்கள்.

பிறவிக் குருடனுக்குத் திடீரென்று ஒரு வெளிச்சம் தோன்றி அழகிய கட்டிடமும் கண் முன்பு தெரிந்து உடனே மறைவது போலும், செவிடனுக்கு ஒருவிநாடி கந்தர்வகானமும் அதி மாதுர்யமான வசனமும் கேட்டு உடனே சப்தம் நின்றுவிடுவது போலும் அவ்விடத்தில் சாகரனுக்குத் தோன்றியது. சில விநாடிகள் வரையில் அவன் தன் கொள்கைகளை அடியோடு மறந்துவிட்டான் என்றே கூறவேண்டும். ஒன்றுமே தோன்றாமல் அந்தச் சங்கீதத்தின் நாத ப்ரம்மமே அவன் காதில் சப்தித்துக் கொண்டிருந்தது.

அடுத்த விநாடி இவனை ஒரு தொண்டன் வந்தழைத்த பிறகே சற்றுத் தெளிவுபெற்று எழுந்து சென்றான். மகாத்மாவை ஆனந்தமாக தரிசனம் செய்து ஒரு நூறு ரூபாய் நோட்டைப் பாத காணிக்கையாகச் சமர்ப்பித்தான். அந்த மகானிடம் என்ன பேசுவதென்றே தெரியாமல் திகைத்து சற்று நேரம் நின்று பின்னர் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டான்.

அவன் வீட்டிற்கு வந்ததும் மகாத்மாவின் சாந்த ஸ்வரூபமும், பொக்கை வாய்ச் சிரிப்பும், அருமையான உபதேசமும், பெண்கள் பாடிய சங்கீத த்வனியின் ஒலியும் அவன் மனக் கண் முன்பு காட்சி கொடுத்துக்கொண்டே இருந்தன. மறுநாள் காலையில் வழக்கம் போல எழுந்து வந்தான்.

அன்று வெள்ளிக்கிழமையாதலால் வீடு முற்றும் வழக்கம் போல மெழுகி வெகு அழகாகக் கோலம் போட்டிருந்தது கண்டு வியப்புற்றான். இதுவரையில் பார்த்திராத விதமாக வெகு அழகாயும் முத்து கோத்திருப்பது போலும், தாமரைப் புஷ்பமே புஷ்பித்திருப்பது போலும் வித விதமாகச் சித்திரம் பொறித்திருப்பதைப் போன்றும் காணப்பட்டது.

அத்தகைய அழகான அருமையான கோலத்தை அவன் இது

வரையில் பார்த்ததேயில்லை யாகையினால் அபாரமான ஆச்சரியமும் கவர்ச்சியும் உண்டாயின. உடனே அவன் வீட்டிலுள்ள கோலங்களையெல்லாம் பார்த்துக்கொண்டே வந்தான். வீடு கூட்டி வேலை செய்யும் கந்தனை யழைத்தான்.

கந்தனின் ஜவாப் இல்லை. சமையல்கார சுப்பன்தானிருந்தான். அவன், திருகத் திருக விழித்ததைக் கண்டு, "ஏண்டா! கந்தன் எங்கே!" என்று கேட்டான். சுப்பன் சற்று நடுங்கிக்கொண்டே "எஜமானுக்குச் சொல்லவேண்டாம் என்று சொன்னான்...சொன்னால் இந்த வேலைக்கார நாய்கள் மேல் எஜமானுக்குக் கோபம் வரும்" என்று இழுத்தான்.

சாகரன் :—என்னடா! விஷயத்தைச் சொல்லு. எதற்கு இத்தனை பீடிகைகள்?

சுப்பன் :—(சற்று நடுங்கியவாறே) எஜமான்! கந்தனுக்கு நேற்று முதல் கடுமையாக ஜுரம் காயுது. அவனால் வேலை செய்ய முடியவே இல்லை. இன்று வீடு முற்றும் கழுவி மெழுகும் நாளாகையினால் அவன் தன் மனைவியை அழைத்துக்கொண்டு வந்து விடியற் காலையிலேயே மெழுகிக் கோலம் போடச் சொல்லிவிட்டு, எஜமானிடம் இதைச் சொல்லவேண்டாம் என்று தெரிவித்துச் சென்றான். எஜமானன் அந்த ஏழையை மன்னிக்கணும்—என்று வேண்டினான்.

சாகரன் சுப்பனுக்கு ஒன்றுமே பதில் சொல்லவில்லை. அந்தக் கோலத்தின் அழகை வெகு நேரம் பார்த்துவிட்டு, தோட்டக்காரனை விட்டு 'உடனே கந்தனை அழைத்து வா' என்றான். இதைக் கேட்டவுடன் எல்லோருக்கும் பெரும் பயமெடுத்துக் கொண்டது. கந்தன் எஜமானுக்கு விரோதமாக தன் மனைவியை அழைத்து வந்து வேலை செய்யச் சொன்னதால், அவனது வேலைக்கே ஆபத்து வந்துவிட்டது என்று அவன் எண்ணி நடுங்கியவாறு கந்தன் வீட்டிற்கு ஓடிக் கந்தனிடம் செய்தியைத் தெரிவித்தான்.

அந்தோ! இதைக் கேட்ட ஏழைக் கந்தனின் உள்ளம் துடித்தது. மனம் இடிந்து "ஐயோ! அறியாத்தனமாக ஒரு நாள் செய்த வேலையின் கொடுமை ஆபத்தாகி விடும் போலவிருக்கிறதே! ஈசா! ஏழை என்ன செய்வேன்? என்னைக் கைவிடாதே! காப்பாற்று; என்னப்பனே!" என்று வேண்டிக்கொண்டு மிகவும் விசனமும் நடுக்கமும் அடைந்தவனாய் என்ன பதில் வந்துவிடுமோ என்று பயந்தவாறு எஜமானன் எதிரில் வந்து நின்றான்.

"கந்தா! உனக்கென்ன உடம்பு சரி இல்லையாமே!...ஆமாம்... இத்தனை வருடமாக நீயும் கோலம் போடுகிறாயே! இம்மாதிரி ஏன் இதுபரியந்தம் போடவில்லை?" என்றான்.

கந்தன்:—எஜமானே! கோவிச்சிக்கக்கூடாதுங்க. இந்த நாயிக்கு ஜொரம். வேலே ஆவணமேன்னு இந்த கயிதெ ஒரு தப்பு எஜமானுக்குத் தெரியாமெ சேஞ்சுட்டுது. மன்னிக்கணும்...இந்தக் கோலம் இந்த நாயிக்குப் போடத் தெரியாது. எம் பொஞ்சாதி போட்டா! பொம்பிளெங்க தான் இந்த வேலையெ நல்லா சேவாங்க. எஜமான்! எனக்கு இத்தினி நல்லா போட தெரிஞ்சா போடாது இருப்பேனா! இந்த கயிதைக் கென்ன கொயிப்பா! மதமா! எஜமான் அப்படி நெனெக்க வாண்டாம்...என்று மிகத் தாழ்மையான குரலில் கேட்டு என்ன பதில் வருமோ என்று ஆவலே வடிவாய் நின்றான்.

"கந்தா! நாளை முதல் நீ வேலைக்கு வரவேண்டியதில்லை"... என்று சாகரன் முடிப்பதற்குள், கந்தன் தீயை மிதித்தவன் போல "ஹா!...என்ன!...எஜமான்! எஜமான்!...ஏழெ...வேலைக்கார நாயி செஞ்சுட்ட ஒரு தப்பை மன்னிக்கக்கூடாதா!....எஜமான்"...என்று கண்ணில் நீர் பெருக மிகவும் பரிதாபமாகக் கேட்டு எஜமானின் காலில் விழுந்து "எஜமான்! 4 பிள்ளை குட்டிக்காரன். தாய் தகப்பன் இரு கிழங்கள். ஆக எட்டு ஆத்மா ஜீவிக்கணும்....எஜமான்...எஜமான்"...என்று உண்மையாகப் புலம்பவே ஆரம்பித்துவிட்டான்.

இதைக் கண்ட சாகரன் கந்தனை எழுந்திருக்கச் செய்து "கந்தா! ஏன் இப்படிப் புலம்புகிறாய்? நான் மேலே சொல்வதற்குள் இவ்விதம் அழுகிறாயே? பயப்படாதே! இந்த கோலத்தைப் பார்த்த உடனே வீட்டிற்கே ஓர் புதிய களையும் சோபிதமும் உண்டாகிவிட்டன. இம்மாதிரி கோலத்தைப் பார்த்ததே ஓர் ஆனந்தமா யிருப்பதாலும் சித்திரம் போல அழகா யிருப்பதாலும் இந்தக் கோலம் என் மனத்தைக் கவர்ந்தது. ஆகையால் நாளை முதல் வீடு கூட்டவும் கோலம் போடவும் உன் மனைவியே வந்து செய்யட்டும். நீ மற்ற வேலைகளை வழக்கப்படி செய்து வா!...அதற்காக உன் மனைவிக்கு மாதம் 5 ரூபாய் தருகிறேன் போ!"...என்றான்.

இவ் வார்த்தையைக் கேட்ட அங்குள்ள ஏனையோருக்கும் அதியாச்சரியமாகிவிட்டது. 'எஜமானுக்கு ஏதோ மனத்தில் புதிய மாறுதல் உண்டாகிவிட்டது' என்று வியப்புக் கடலில் மூழ்கினார்கள். கந்த

னுக்கு அதுவரையிலிருந்த ஜுரமும் பறந்து போய் விட்டதென்றே கூறவேண்டும். இரட்டிப்புச் சந்தோஷத்துடன் எஜமான் காலில் விழுந்து வணங்கி, தன் முழுச் சந்தோஷத்தையும் தெரிவித்துக் கொண்டான். அன்று முதல் கந்தனின் மனைவி கோலப் புத்தகம் ஒன்று வாங்கி புதிய புதிய கோலங்களைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினுள்.

சாகரன், தன் வழக்கம் போல தினசரிப் பத்திரிகைகளையும் சிறு கதைப் போட்டிக்கென்றே உழைக்கும் பத்திரிகைகளையும் படிக்க வாரம்பித்தான். ஒரு பத்திரிகையில் கொட்டை எழுத்தில்

பரிசு பெற்ற சிறுகதை

ஸ்ரீமான் K. சாகரன் எழுதியது.

என்றிருந்ததைப் படித்ததும் அவனை ஒரு குலுக்கு குலுக்கி ஆட்டிவிட்டது. அவனுடைய தேகமும் மனமும் சந்தோஷத்தினுல் பெரு மகிழ்ச்சி யடைந்தன. கதையின் பெயர் மட்டும் தான் வைத்த பெயராக இல்லாததைக் கண்டு சற்று யோசனை செய்தான். "ஒருகால் பத்திரிகைக்காரர்கள் மாற்றிவிட்டார்களோ!" என்று சந்தேகித்தபடியே கதையைப் படிக்க வாரம்பித்தான். தன்னுடைய தென்றுல் எத்தகையோருக்கும் ஓர் தனித்த சந்தோஷம் உண்டாகு மல்லவா!

காதல்! காதல்!!
இன்றேல்
சாதல்!! சாதல்!!!

சலசல வென்ற ஓசையுடன் நதியின் துல்லியமான தெளிந்த ஜலம் சங்கீதத்திற்குச் சுருதி கூட்டுவது போன்று இனிமையாக ஓடிக்கொண்டிருக்கின்றது. ஆங்காங்கே சிலர் கும்பல் கும்பலாக நின்று பேசிக் கொண்டிருப்போரும் நடப்போருமாக விருந்தனர்.

அந்தி நேரத்தின் வெகு அழகிய தோற்றம் மக்களின் மனத்தைப் பரவசப் படுத்துகின்றது. சிலுசிலுப்பான காற்றும், கீழ்த் திசையில் சந்திரன் ஜகஜ்ஜோதியாகத் தன் குளிர்ந்த பார்வையுடன் தோன்றும் காக்ஷியும் ஒன்று கூடி எல்லோரையும் ஆனந்த சாகரத்

தில் அழுத்திவிட்டன. விண் மீன்கள் ஒன்ருெடொன்று க்ஷேம லாபங்களை விசாரித்துக்கொண்டு தங்கள் எஜமானனுகிய சந்திரனின் வரவை எதிர்பார்த்து நிற்பதேபோலக் கூட்டங் கூட்டமாகப் பிரகாசிக்கின்றன.

பக்ஷி இனங்கள் எல்லாம் கூட்டை யடைந்து தம் தம் குஞ்சுகளுடன் ஆனந்தமாகக் குலாவுகின்றன. சில பறவைகள் சந்தோஷமாகக் கூவிக்கொண்டே அங்குமிங்கும் பறந்துசெல்கின்றன. சந்திர வெளிச்சம் பால் போல எங்கும் பரவி வெகு அற்புதமாகவும் மனக்களிப்பூட்டும் வண்ணமும் காக்ஷி யளித்தது. மரங்களும் செடிகளும் அடர்ந்த சில இடத்தில் பூர்ண காந்தியுமின்றி இலைகளின் மறைவில் சிறிய பொட்டு பொட்டான நிலவின் வெளிச்சமும் மற்ற இடங்களில் இருளும் கூடி அதோர் அழகாக விளங்கியது.

இத்தகைய அற்புதமான ஆனந்த வேளையில் அந்த நதிக்கரையின் தென்னண்டைப் பக்கத்தில் மிகவும் சாதாரணமான சிறிய வீட்டின் வாசற்புறமுள்ள அறையில் மினுக்குமினுக்கென்று விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவ்வறையில் சந்தடியே ஏதும் இல்லை. என்ருலும் சிறிது நேரத்திற்கு ஒரு தரம் யாரோ பெருமூச்சு விடும் சப்தம் மட்டும் கேட்பதால், யாரோ ஒருவர் அவ்விட மிருப்பதாக அறிவித்தது.

கயிற்றுக் கட்டிலில் வாடித் துவண்டு தளர்ந்த தேகமும், குழி விழுந்த கண்களும், எண்ணெயை அறியாது காற்றில் பறக்கும் தலை மயிரும், கண்ணிலிருந்து நீர் பெருகி கன்னத்தின் வழியாக ஓடிக் கொண்டிருக்கும் பரிதாபகரமான தோற்றத்துடன் சோகப் பதுமையோ, அல்லது உயிருள்ள பாவையோ என்று ஐயுறும்படிக்கு இள நங்கையான சுபாஷிணி படுத்தவாறு கீழ்த் திசையில் தோன்றும் சந்திரனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளைத் தவிர அவ் வறையில் வேறு யாரும் இல்லை. புயல் காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல அவள் மனம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது...“ ஆம்...ஆம்...நியாயத்திற்கும் பெரியோருக்கும் கட்டுப் படவேண்டியது என் கடமை யல்லவா ! அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென்று படித்ததை மறக்கவோ, மறுக்கவோ கூடுமா ?....அங்ஙனம் செய்வது தருமமாகுமா !...ஆகாது...எல்லாவற்றிற்கும் காரணம் எது...என் விதி...ஆம்...சந்தேகமில்லாது விதிதான் காரணம்.

பாஸ்கரா! என் மனத்தைக் கொள்ளைகொண்ட பாஸ்கரா! விதியின் ஆட்சிக்கும், கொடிய சட்ட திட்டங்களுக்கும், தடையுத்தரவுகளுக்கும் முன்பு நம்முடைய பரிசுத்தமான காதல்...தெய்வீகமாயுதித்த காதல்—என்ன செய்ய முடியும்? சுத்தமான காதல் சத்தியமல்லவா! அதர்மம் செய்யவும் ஹிம்சை செய்யவும் பலாத்காரத்தில் பிரவேசிக்கவும் அந்த தூய காதல் இடங் கொடுக்காது... நிச்சயமாய் இறங்காது...

சீச்சீ! இதென்ன பகல் கனவு...பாஸ்கரா!...பாஸ்கரா... யாரங்கே நிற்பது...நிழல்போலத் தெரிகிறதே!...அடடா!...ஒரு வெளித்தோற்றமோ!...என்ன ஏமாற்றம்...என்ன மோசம்''... என்று தனக்குள் பிதற்றிக்கொண்டும் பெருமூச்சு விட்டுக் கொண்டும் படுத்திருந்தாள்.

[இதுவரையில் சாகரன் படித்துக்கொண்டே வருகையில், அவனுக்கு ஆச்சரியமும் சந்தேகமும் பலமாகிவிட்டன........ "இதென்ன! கதையின் பெயரைத்தான் காதல் காதல் என்று மாற்றினார்களோ என்று எண்ணினேன். இக் கதை ஆரம்பமே ஓர் புதிதாக இருக்கிறதே! ஓர் பெண்ணையே முதல் கூட்டி ஆரம்பித்திருக்கிறதே!...நானு இப்படி ஆரம்பம் செய்வேன்!...சீச்சீ!...இது ஏதோ மாறுதல்...ஏமாற்றமாக இருக்கிறது...இது முற்றிலும் வேறு கதைதான் என்பதற்கு ஐயமே இல்லை...முழுதும் படித்துப் பார்த்துவிடுவோம்....இதில் முதல் ஆரம்பமே என்னையறியாது மனக் கவர்ச்சி உண்டாக்குகிறது...எத்தனை அழகாக வர்ணனையும் இயற்கையின் லக்ஷணமும் காட்டி சித்திரித்திருக்கிறது!'' என்று தனக்குள் வியப்புற்றவாறு மீண்டும் படிக்கத் தொடங்கினான்.]

அந்த நதிக்கரையில் இருந்த எல்லோரும் தம் தம் வீடுகளை நோக்கிச் சென்றுவிட்டார்கள். நதியின் நீர் வேகத்தின் ஓசையைத் தவிர வேறு சந்தடியே இல்லை. வடவண்டை பாகத்தில் ஒரு வீட்டில் கல்யாணம். அங்கு மேளம் வாசிக்கும் ஓசை மட்டும் சிறிது கேட்டுக் கொண்டிருக்கின்றது. அந் நதிக்கரையிலுள்ள கோவிலில் பக்த கோடிகள் கடவுளைக் குறித்து மனமுருகப் பாடும் அழகான தோத்திரத்தின் தொனி ரமணீயமாக ஒரு புறம் காதில் விழுகின்றது.

சுபாஷிணிக்கு மனம் இருக்கை கொள்ளவில்லை. வெகு நேரம் யோசனை செய்து புரண்டாள். அவளுக்கு ஒரு உறுதியும் ஆவேச

மும் உண்டாயின. உடனே எழுந்து விளக்கை பெரிதாகப் பொறித்துக்கொண்டு தன் மேஜையின் அருகில் வந்து உட்கார்ந்து கீழ் வருமாறு ஒரு கடிதம் எழுதத் தொடங்கினுள்.

''அன்பே உருவா யமைந்த பாஸ்கரா!

என் பரிசுத்தமான காதல் கடவுளே!......இக் கடிதம் உன்னை ஆச்சரியமுறச் செய்யும்என்று நான் நம்பவில்லை. ஏனெனில் எல்லாம் காலத்தின் கோலம்...எத்தனை ஆழமான அன்பு உன்னிடம் இருப்பின் இதை நான் எழுதத் துணிவேன் என்று நீயே யோசித்துக் கொள்ளு.

பாஸ்கரா!...நாம் பட்டின வாசம் செய்த காலத்தின் நிகழ்ச்சிகள், பிறகு பள்ளிக்கூடம் படித்த காலத்துச் சம்பவங்கள், அதன் பின் என் பிதா இறந்துவிட்ட நாட்களின் சம்பவம். அதன் பின்னர் நாம் பிரிந்துபோய் நான் மட்டும் இந்த கிராமத்திற்கு வந்து சேர்ந்த அந்நாளின் உணர்ச்சியும், அதன் பிறகு ஒரு வருடத்திற்கு ஒருதரம் நீ வந்துவிட்டுச் சென்றதையும் நீ இதற்குள் மறந்திருக்கமாட்டாய் என்றே நான் நம்புகிறேன். ஏனென்றால் நீயும் என்னைப் போன்ற மனித ஜென்ம மல்லவா! மனிதனுக்குள்ள உணர்ச்சி மறைந்தா போய்விடும்!

ஆருயிர் பாஸ்கரா! நீயும் சிறிய பையனல்ல. நானும் சிறு குழந்தையல்ல. காலச்சக்கரம் நம்மைச் சுற்றிக்கொண்டு போனபோதிலும் ஒரு மனிதனுக்கு உதிக்கும் அன்பையுமா மறக்கும்படிச் செய்து விடும்? நான் அவ்விதம் நினைக்கவில்லை. நான் கேள்விப் பட்ட தெல்லாம் பொய் என்றே நினைத்து இதை எழுதுகிறேன்.

சில தினத்திற்கு முன் உனது உறவினனுகிய கோபாலன் இங்கு வந்திருந்தான். அவன் தெரிவித்ததாவது:—உனக்கு ஓர் செல்வ வந்தரின் மகளை விவாகத்திற்கு நிச்சயித்திருப்பதாயும் அநேகமாக இம்மாதம் 28-ம் தேதி முகூர்த்தத்திலேயே விவாகம் ஆகிவிடும் என்றும் கூறினுன்.

பாஸ்கரா!......பழய காலத்து நிகழ்ச்சிகளை நீ மறந்திருந்தாலும் அத்தகைய பேரன்புக்குப் பாத்திரமாகிவிட்ட என் செவியில் இம்மொழிகள் விழுந்த உடனேயே என் நிலைமை எப்படி இருந்திருக்குமென்று நீ ஊகித்துக் கொள்ளுவாய் என்று நினைக்கிறேன்......பாஸ்கரா!......உனக்கும் ஹ்ருதயம் ஒன்றுதானிருக்கும் என்று நம்பினேன்......எனது மாதாவையும் நம்பும்படிக்குச்

செய்தேன்............ஆனல்............அந்தோ !..........நினைக்கவே நெஞ்சு பகீரென்கிறதே !......

ப்ரிய நேசா !......உனது ஹ்ருதயத்திலிருந்து வந்த ஆணித் திறம்போன்ற உணர்ச்சி ததும்பும் அன்பு வெள்ளத்தை ஒரு காலத்தில் நேரில் கண்டது என் மனக் கண்ணில் இன்னும் தாண்டவம் செய்கின்றதே !......உன் மனத்தில் அந்த பசை உலர்ந்து வரண்டு விட்டதா !......உன் மனம் பாலைவனமாகி விட்டதா !......

ஒரு நாள் நீயும் நானும் அவரைப் பந்தலருகில் உட்கார்ந்து என் தாயாரால் செய்து கொடுக்கப்பட்ட பக்ஷணத்தைச் சாப்பிடும்போது நீ கூறிய வார்த்தைகளையும் மறந்தாயா !...... "சுபாஷிணீ ! உன்னை உன் தந்தை தனியே விட்டு இறந்தார் என்று நீ விசனிக்காதே. நான் உன்னைக் கைவிடமாட்டேன் என்பதை உன் தாயாருக்கும் உறுதி கூறிவிடு. நானும் நீயும் இனி வேறல்ல. என் படிப்பு முற்றும் முடியட்டும். நான் உன்னை விவாகம் செய்து கொள்ளுகிறேன்" என்று கூறிய உறுதியை மறந்து போய்விட்டாயா ?...... பாஸ்கரா !......அவ் வுறுதி மொழியைப் பரம ஏழையாகிய நான் மறக்கவில்லை. உன் வாக்குத் தத்தத்தைக் கேட்டுக் கொண்டிருந்த கடவுள் மறந்திருக்க மாட்டார். அவரையும் ஏமாற்றிவிட முடியாது......

அன்பே உருவான பாஸ்கரா !......நீ நெடுநாட்களாக ஒரு கடிதமும் போடாதிருந்ததையும் நான் சந்தேகிக்கவில்லை. ஏனெனில் ஆகாயத்திலுள்ள பாஸ்கரனைக் கண்டு தாமரை மலர்வதே போன்று நானும் உன்னை வெகு தூரத்திலிருந்தே எண்ணி எண்ணி மனக்கோயிலில் வைத்து பூஜை செய்தவாறு இருக்கின்றேன்.

இப்போது நான் கோபாலன் சொல்லியதை நம்பாது தத்தளிக்கின்றேன். இச் செய்தியை என் தாய் கேட்டதும் திடுக்கிட்டுக் கவலைக் கடலில் மூழ்கியதோடு, "உன் வார்த்தையைக் கேட்டு நம்பி நான் மோசம் போனேனே ! பந்துக்களிடமெல்லாம் இன்னும் விவாகம் செய்யாத குற்றத்திற்கு விரோதப்பட்டுக் கொண்டும் பாஸ்கரனை நம்பி இருந்தேனே...ஏழை நான் இனி என் செய்வேன்" என்று என்னையும் திட்டுகிருள் ; தன்னையும் நொந்து கொள்கிருள்......

பாஸ்கரா !......இது தருமமா ?......நியாயமா !...நான் என்ன சொல்வதென்று நினைக்கிருய்...உன்பால் நான் நம்பிக்கொண்டுள்ள

காதலுக்குப்பதில் சாதலா!...அன்றி...சாகாமல் உலகில் நடைப்பிணம் போல உலாவுவதா? எனக்கு என்ன கட்டளையிடுகிறாய்? உனக்கு விவாகமாகப்போவது உண்மைதானா?.........பாஸ்கரா......ப்ரிய பாஸ்கரா......காதல் பாஸ்கரா...இதற்குக் கட்டாயம் பதில் எழுது வாய் என்று எதிர்பார்க்கிறேன். திரஸ்கரித்துவிடாதே...ஏழையின் மீது இரக்கமிருக்கட்டும்...இதற்குமேல் எழுத என் மனம் இடங் கொடுக்கவில்லை...உன் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்......

இங்ஙனம்,

உன் பிரிய காதலி

சுபாஷிணி."

என்ற கடிதத்தை எழுதி உறையிலிட்டு உடனே அதைத் தானே கொண்டுபோய் எதிரிலுள்ள தபால்பெட்டியில் போட்டு விட்டு வந்து மீண்டும் படுத்துக்கொண்டாள். சந்திரன் இவளைக் கண்டு நகைப்பதுபோலத் தோன்றியது.

நாட்கள் நான்கு ஆயின. சுபாஷிணியின் தாயார் அடுத்த கிராமத்தில் ஒரு வரன் இருப்பதாகக் கேள்விப்பட்டு, அங்கு சென்று விசாரிக்கப் போயிருந்தாள். சுபாஷிணி ஒவ்வொரு நிமிடமும் தபால்காரனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். எங்கு சந்தடி உண்டாகியபோதிலும் தபால்காரன்தான் என்று எண்ணி வாசலை நோக்கி ஆவலே வடிவாக நிற்பாள்.

அவ்வூர், கிராமாந்திரமாகையினால் ஒரு நாளைக்கு ஒருதரம்தான் தபால் வரும். தபால்கார கந்தசாமி பல வருஷங்களாக இந்தக் கிராமத் திற்கும் இதைச் சுற்றியுள்ள சிறு கிராமத்திற்கும் தபால் கொடுப் பவன். அவன் இயற்கையிலேயே வெகு நல்லவன். அவன் மனத்தில் சதா எல்லோருக்கும் நன்மையே உண்டாகவேண்டும்; நிறைய மணியார்டர்கள் வரவேண்டும்; எல்லோருக்கும் பணம் நிறைய வந்தால் தனக்கு ஏதாவது கிடைக்கும் என்று பகவானை வேண்டிக்கொண்டே இருப்பான்.

அவனுடைய நல்ல மனத்திற்குத் தக்கபடியே அவனுடைய பீட்டில் எல்லோருக்கும் நிறைய மணியார்டர்களும் நல்ல க்ஷேம கடிதங்களும் வரும். ஆதலால், அவனைக் கைராசிக்காரனென்றும், நல்ல மனத்தை யுடையவ னென்றும், யோக்கிய னென்றும் அவ் வூரார் அவனிடம் மிகுந்த மதிப்பும் பிரீதியும் வைத்திருந்தார்கள்.

இப்போது கந்தசாமியின் முறை; ஆகையினால் சுபாஷிணி கந்த

சாமியின் வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டே ஜன்னலருகில் உட்கார்ந்திருந்தாள். தபால்கார கந்தசாமி தெருக் கோடியில் வருவதைப் பார்த்த உடனே அவள் தனக்கும் ஒரு கடிதம் கொண்டு வருவானு!...கடவுளே!...அவன் சீக்கிரம் வராமல் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மணி நேரம் வாயாடுகிருனே...என்று தவித்துக்கொண்டிருந்தாள்.

சிரித்த முகத்துடன் வயது முதிர்ந்த கந்தசாமி, "சுபாஷிணியம்மாள்! சுபாஷிணியம்மாள்!"...என்று கூவிக்கொண்டே கூடத்திற்கு வந்தான். இதற்கே காத்துக்கொண்டிருந்த சுபாஷிணி ஓடி வந்து, "என்ன கந்தசாமி! எனக்குத் தினமா கடிதம் வருகிறது? என்றைக்கோ ஒன்று வந்தால் நீ அதை முதலில் எனக்குக் கொடுத்து விட்டுப் போகலாகாதா! நான்தான் இரண்டுநாளாக உன்னைக் கேட்கிறேன். இந்தத் தெருவில் 8 மணிக்கே புகுந்தவன் 12 மணிக்கா இங்கு வருவது?....இப்படிக் கொடு...கடித மெங்கே? எடு....எடு...என்ன கந்தசாமி வேடிக்கை செய்கிருய்...கொடு... என்று தன் மனத்திலுள்ள ஆத்திரத்தில் குழந்தையைப்போலக் கேட்டாள்.

இது கண்ட கந்தசாமி கடகடவென்று நகைத்துக்கொண்டே, "என்ன குழந்தை! இத்தனை ஆத்திரப்படுகிருயே! உனக்குக் கல்யாணமா என்ன!...எனக்கு விருந்துச் சாப்பாடு, வேஷ்டி எல்லாம் கிடைக்குமல்லவா! தபால்காரக் கிழவனை மறக்கமாட்டாயே!.... இதோ கொடுக்கிறேன் அம்மா! நான் முதலில் உன் கடிதத்தைக் கொடுத்துவிட்டால், உனக்கு என்மீது கோபம் வருமா!...

நான் என்ன செய்வேன் சொல்லு. கோடிவீட்டு சேஷிப் பாட்டியம்மாளுக்கு ஒரு கடிதம் வந்தது. பாட்டிக்குப் படிக்கத் தெரியாதல்லவா...அவளுக்கும் கடிதத்திலுள்ள விஷயமறிய அதிக ஆவல்......ஆகையினுல் அதைப் படித்துக் காட்டினேன். பிள்ளைக்குக் கல்யாணம் நிச்சயமாய்விட்டதென்ற கடிதம் அது. அதைக் கேட்டு, பாட்டியம்மா சந்தோஷத்துடன் ஒரு அணு கொடுத்தாள். நான் ஏழை. பெரிய குடும்பம். பிள்ளைகுட்டிக்காரன் பிழைக்க வேண்டாமாம்மா......

ரங்கநாத பண்டிதருக்குக் கண்ணு மத்திமம்...அவருக்குக் கடிதம் படித்துக் காட்டினேன். அவர் பிள்ளைக்குச் சம்பளம் உயர்ந்ததாகக் கடிதம் வந்திருக்கிறது. பண்டிதர் அதைக் கேட்டு

அபார சந்தோஷமடைந்து, அரை ரூபாய் கொடுத்தார். தலையாரி தாண்டவராயனுக்குப் படிக்கவே தெரியாது. வெட்டியான் வீரனுக்கும் குடியானவர்களாகிய இருளப்பன், முனியன், பேயச்சி, பாவாடை, மூக்கன் முதலிய யாருக்கும் படிக்கத் தெரியாது. அவர்கள் எல்லாம் என்னைப்போல ஏழைகள். பாவம் அவர்களுக்கெல்லாம் படித்துக் காட்டிவிட்டு, இங்கு வர நேரமாகிவிட்டது. கோபம் கொள்ளாதே குழந்தை!.........இதோ உன் கடிதம்... உன் கல்யாணத்தில் மட்டும் என்னை மறக்காதே!''......என்று நகைத்துக்கொண்டே கடிதத்தைக் கொடுத்துவிட்டு மறைந்தான்.

சுபாஷிணி கடிதத்தை வெகு ஆவலுடன் வாங்கிக்கொண்டு, தன் அறைக்குச் சென்று, உடைத்துப் படிக்கலானாள்.

“ அன்புமிக்க சுபாஷிணிக்கு,

உன் கடிதம் கிடைத்தது. படித்துச் சகல விஷயமும் அறிந்து கொண்டேன். நான் ஆதியில் சொல்லிய யாவும் உண்மையே. நான் இல்லை என்று ஒளிக்கவில்லை. நான் உன்பால் கொண்ட அன்பும் மனத்தில் மாறவில்லை. என்றாலும் காலச் சக்கரம் சுழலும்போது ஆசைக் காற்று அலைபோல அடித்து மக்களை மயக்குவது சகஜந்தான்.

சுபாஷிணி! உன்னிடம் கொண்ட அன்பு இருப்பினும் ஒரு விதத்தில் நான் சற்று மாறுதலே அடைந்திருக்கிறேன். அதாவது, நீ யொரு பரம ஏழைப்பெண்; நான் ஒரு பரம ஏழைப் பையன். நாம் இருவரும் காதலை மட்டும் பார்த்தால் மற்ற உலக விஷயங்களில் களிப்பு என்பதை யடைய முடியாது. வறுமை என்னும் முட்டுக் கட்டை குறுக்கிடுகிறது.

எனக்கு மேல்நாடுகள் சுற்றவும் உயர்ந்த படிப்புகள் படிக்கவும் என்னை மீறிய ஆசை என்னைச் சில வருடங்களாக வாட்டுகின்றது. அதற்கு நமது விவாகம் இடங்கொடாது...ஆகையால் எண்ணத்தை மாற்றிவிடு...கோடி ஐச்வரியரான கோவிந்தருடைய பெண்ணை நிச்சயமாக்கி இருப்பது உண்மையே. 15 ஆயிரம் வரதக்ஷிணை. அது தவிர, சீர்வகைகள்...அதுவும் தவிர, சீமை முதலிய வெளிநாட்டிற்குச் சென்று படிக்க வைக்கும் பொறுப்பு யாவும் அவருடையதே யாகும்....இத்தனையையும் எப்படி ஒரு காதலுக்காக நான் விட்டுவிட முடியும்?...

சுபாஷிணி! நீ நல்ல வரனைத் தேடி மணம் செய்து கொள்ளு.

15 ஆயிரம் எனக்கு என் மாமனர் கொடுத்துவிட்டார். அதில் ஒரு ஆயிரம் ரூபாய்க்கு உனக்குச் செக்கு வைத்திருக்கிறேன். உன் கல்யாணச் செலவுக்கு அதை வைத்துக் கொள். கோபிக்காதே... உலகம் பலவிதம்...மீண்டும் உன்னைச் சந்திக்கும் பாக்கியம் கிடைக் கும் போது கட்டாயம் பார்க்கிறேன்.

இங்ஙனம்,
உன் நண்பன்
பாஸ்கரன். "

இதைப் படித்த சுபாஷிணி அப்படியே மின்சாரம் தாக்கியது போலத் துள்ளித் துடித்து "ஹா !......பாஸ்கரா !......பணம்...... வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின் ஆசை...... இவ்விரண்டுமா உத்தமமான காதலை உதறித் தள்ளச் செய்தன.......பாஸ்கரா...... இதுதானு உன்னுடைய முடிவு"—என்று கண்ணீர் மடமட வென்று பெருகியவாறு அப்படியே கட்டிலின்மீது வேரற்ற மரம் போல வீழ்ந்தாள். உயிர் இருக்கிறதா, இல்லையா வென்ற நிலை மையில் சவம் போலானுள்.

[இந்தப் பாகத்தைப் படிக்கும் நமது சாகரனின் மனத்திலும் பழய கொள்கைகளை மீறி உணர்ச்சி ததும்புகின்றது...சீச்சீ... மடையன்.......இவ்விதமாக வாக்கைக் கொடுத்துவிட்டுப் பணத் திற்காக வாக்குத் துரோகம் செய்வது......ஐயோ பாவம்...சுபா ஷிணி எத்தனை அழகான பெயர்...என்று வாய்விட்டும் சொல்லிக் கொண்டான். கண்ணில் அவனை யறியாமலேயே இரு துளிகள் சிந்திவிட்டன. அதைத் துடைத்துக்கொண்டு மேலே என்ன ஆயிற்று என்ற ஆவலுடன் படிக்கத் தொடங்கினுன்.]

சுபாஷிணியின் நிலைமை வெகுநேரம் வரையில் பிரக்ஞை இல்லாதிருந்தது. பிறகு சற்று தெளிவு பெற்றுள். கடிதத்தைப் பல முறைகள் படித்தாள். துக்கமும் ஆவேசமும் தாங்க வியலாது கட்டு மீறி பாதிக்கின்றன. காரைகாணுத சாகரத்தில் தான் அமிழ்ந்து விட்டதாகவே அவளுக்குத் தோன்றியது. உடனே ஒரு கடிதம் எழுத வாரம்பித்தாள்.

" நண்பன் பாஸ்கரா !

உன் கடிதம் கிடைத்தது. விஷயங்களை யறிந்தேன். உயர்ந்த விருக்ஷங்களால் சூழப்பட்டுப் பிரகாசித்த உன்னத தோட்டம் அடுத்த விநாடி பாலைவனமாகிவிடும் என்பதை நான் உனது அனுப

வத்தினுல் அறிந்தேன். நீ எந்த விதமாகவாவது சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்தால் அதுவே என் வாழ்நாளின் இன்பமாகும். பசையற்ற மொழியில் பண உதவி மட்டும் செய்ய முன் வந்ததற்காக வந்தனம். ஆனுல் உன்னுடைய அபரிமிதமான காதல் வெள்ளத்தை—பரிசுத்த ஹ்ருதயத்தை—அன்புக் குன்றை—ப்ரேமைப் புதையலை நான் எதிர்பார்த்து இரவு பகல் தவஞ்செய்தேனே யல்லாது உன் மாமனுர் கொடுத்த பணத்தில் ஆயிரம் ரூபாய்க்கு நான் ஆசிக்கவில்லை. என் தலையில் ஈசன் எழுதியபடியே நடத்திக் கொண்டு போவான் என்கிற நம்பிக்கையை நான் இழக்கவில்லை.

பாஸ்கரா! காலச் சக்கரம் எதை மாற்றிய போதிலும் என் மனத்தில் உதித்த காதலை மாற்ருது என்பது ஞாபகமிருக்கட்டும். உனது செக்கை இதோடு திருப்பியிருக்கிறேன். நான் பணத்திற்கு ஆசைப்படும் விலைமாதல்ல. அற்பமல்ல...என்பதை ஞாபகமூட்டுகிறேன். இதுதான் கடைசிக் கடிதம். நம்முடைய ப்ராப்தம்...கடவுள் உனக்குச் சகல பாக்கியங்களும் அளிப்பாராக.

இங்ஙனம்,
அபாக்கியவதி
சுபாஷிணி."

கண்ணீர் பெருகியவாறு அதை எழுதித் தபாலில் போட்டு விட்டாள். இதற்குமேல் அவள் நிலைமையை விவரிக்கவேண்டுமா? தீயினுல் பொசுக்கப்பட்ட இளந்தளிர் எவ்விதம் இருக்குமோ அதே மாதிரி யாகிவிட்டது சுபாஷிணியின் வாழ்க்கை.

அடுத்த கிராமத்திற்குச் சென்றிருந்த அவளுடைய தாயார் வந்து சேர்ந்தாள். சுபாஷிணி கடிதம் எழுதிய விவரமே தாயாருக்குத் தெரியாதாகையினுல் இந்த விசனத்தை அவளிடம் ஏன் தெரிவிக்கவேண்டுமென்று வாளா விருந்துவிட்டாள்.

"நான் பையனைப் பார்த்தேன். நன்ருகத்தான் இருக்கிருன். உனக்கு அதிர்ஷ்டமென்று எல்லோரும் சொல்கிருர்கள். சுபாஷிணீ! எனக்கும் இது சம்மதமாகத்தான் தோன்றியதால், நான் நிச்சயம் செய்து வாக்குக் கொடுத்துவிட்டேன். உன் புகைப்படத்தைக் கண்டே அவர்கள் திருப்தி யடைந்துவிட்டார்கள். உடனே உன் அத்தையின் கையில் நமது கடனுக்காக ஐயாயிரம் ரூபாய் கொடுத்து விட்டார்கள். உன் அத்தைக்குக் கொடுக்கவேண்டிய கடனையும் கொடுத்துவிட்டேன். மிச்சமுள்ள கடன்காரர்களுக்கும் பைசல்

செய்துவிட்டு வந்தேன். முகூர்த்தமும் வைத்தாயிற்று. அதனுல்தான் இரண்டு நாளாகிவிட்டன. உனக்கு வைரக் கம்மல் முதலிய நகைகள் செய்கிறுர்களாம்'' என்று பாடம் ஒப்பிப்பதுபோலக் கூறினுள்.

இதைக் கேட்ட சுபாஷிணிக்கு எரியும் அடுப்பில் எண்ணெயை வார்த்தது போன்று தேகம் பற்றி எரிகின்றது. என்ன பதில் சொல்லுவாள்...“தாயாருக்கு எதிர்த்துப் பதில் சொல்லிமட்டும் பயன் என்ன ?...அல்லது தற்கொலை புரிந்துகொண்டு இறந்தால் தான் பலன் என்ன ? இரண்டும் ஒன்றல்லவா ?...

ஆம் ஆம் ! என் வரையில் மட்டும்தான் இரண்டும் ஒன்ருகும். பல கஷ்டங்களுக்கு இலக்காகி என் ஒருத்தியால் உயிர் வாழும் அன்னைக்கு இரண்டும் ஒன்ருகாது. நான் அவளை மகிழ்விக்கக் கடமைப்பட்டவள். அம்மாதிரி செய்வதைவிட்டு இறந்தால், என் அன்னையின் கதி யாதாகும். நான் இறந்தும் அன்னையைக் கைவிட்டுத் தற்கொலை புரிந்துகொண்ட மகாபாவி என்ற வசைக்கே ஆளாவேன். என்னையும் பறிகொடுத்துவிட்டு, கடன்காரர்களுடைய உபத்திரவத்தினுல் அவளும் தற்கொலை புரிந்துகொள்ளவேண்டும்... இல்லையேல் சிறைவாசம் செய்யவேண்டும்.

அந்தோ !...பயங்கரம்...பயங்கரம்...என்னைப் பெற்ற அன்னைக்கு நான் துரோகம் செய்வதா என் பிறப்புரிமையாகும். இல்லை. இல்லை...நான் இச்சித்த பண்டமும் இல்லை...அதற்காக பெரும் பாபத்தை மூட்டை கட்டிக்கொண்டு அலைவதில் என்ன லாபம் ?... விரதங் கெட்டாலும் சுகமாவது தக்கட்டும்....

என் தாயின் நிலைமையை அறிந்தும் இத்தனை பணத்தைக் கொட்டி ஒரு வாலிபனுக்கு விவாகம் செய்ய முன்வந்ததானது ஏதோ அவர்களிடம் உள்ள ஊழலோ...பயங்கரமோ...வியாதியோ ...குற்றமோ...இவைகளை மறைக்கும்பொருட்டுச் செய்வதாகத் தான் ஏற்படுகின்றது...இருக்கட்டும். என் வரையில் எதுவாயினும் ஒன்றுதான். என் வாழ்நாள் பாழாகியது. என் மனச் சந்துஷ்டி மடிந்தது. என் இன்பம் துன்பமாகியது...தாயாருக்காவது கஷ்டமில்லாது இருக்கட்டும்” என்று தனக்குள்ளே பலவாறு யோசனை செய்து முடிவு கட்டிக்கொண்டாள். பிறகு, சம்மதமென்று தாயாரிடம் தெரிவித்துவிட்டுக் கோபப் பதுமையாகத் தன் அறைக்குப் போய்விட்டாள்.

பின்னும் சில நாட்கள் சென்றன. ஒரு வாரப் பதிப்பு பத்திரி

கையில் பாஸ்கரனும் அவனுடைய மனைவியும் கல்யாண கோலத்துடன் நிற்கும் புகைப்படம் காணப்பட்டது. இதைப்பார்த்துக் கண்ணீர் பெருகியவாறு, அதைமட்டும் கிழித்து வைத்துக்கொண்டாள்.

பின்னும் 10 தினத்திற்குள் சுபாஷிணிக்கு விவாக விலங்கு பூட்டியாகிவிட்டது. முகூர்த்தம் நடந்து பின்னர் மணச் சடங்குகள் நடந்துகொண்டே இருக்கையில், கல்யாண மாப்பிள்ளைக்குக் காக்காய் வலிப்பு வந்து விலு விலுவென்று உதைத்துக் கொண்டு கோரமாயும் பயங்கரமாயும் கூச்சலிட்டுக் கீழே விழுந்துவிட்டான். வாயில் நுரை நுரையாகத் தள்ளுகிறது. ஒவ்வொரு அங்கமும் சகிக்க முடியாது இழுத்து வதை செய்கிறது.

இதைக் கண்ட சுபாஷிணிக்கு ஏற்கெனவே இருக்கும் மன அதிர்ச்சியை விட இது ஒன்றும் பெரிதல்ல. ஏனெனில், குறை ஏதோ ஒன்று இருக்கத்தான் வேண்டும் என்று அவள் எதிர்பார்த்தவள் அல்லவா! அவர்களுக்கு வேலை செய்ய ஓர் ஆள் தேவை... கூலிக்கு வைத்தால் நன்றாக அக்கரையுடன் கவனிக்கமாட்டார்கள். விவாக பந்தத்துடன் ஓர் ஆளை அவன் பெற்றோர்கள் நியமித்ததாகவே எண்ணினாள். மேலும் அவளது அத்தை முதலிய பந்துக்கள் தங்கள் பாக்கிப் பணம் எப்படியாவது வசூலானால் போதும் என்ற ஒரே நோக்கத்துடன் நிறைவேற்றிக் கொண்டனர். இனி மேல் என்ன இருக்கிறது.

பந்தலில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசிக் கொண்டார்கள். இரும்புச் சாவிகளையும் கம்பிகளையும் பையன் கையில் கொடுத்தார்கள். சுமார் 10 நிமிடங்கள் வரையில் இழுத்தது. பிறகு கட்டைபோலாகிவிட்டது. சுபாஷிணியின் தாயார் அடித்துக் கொண்டு அழுகிறாள். "பாவிகளே! சண்டாளர்களே! இப்படியா ஏமாற்றுவது?......என் குடியைக் கெடுத்து என்னைப் பாழ்படுத்தி விட்டீர்களே!" என்று அலறுகிறாள். கல்யாண வீடு ஒரே கலவர வீடாகி, சண்டையும் அழுகையும் பொருந்த அமர்க்களமாகிவிட்டது. சுபாஷிணி மட்டும் துக்கச் சிரிப்பு ஒன்று சிரித்துவிட்டுக் கண்ணீர் பெருக ஓர் அறைக்குள் போய்ப் படுத்துக்கொண்டாள்.

* * * * *

இடையில் ஏழு வருடங்கள் ஓடி மறைந்தன. பாஸ்கரன் விவாகம் செய்து கொண்ட மறுதினமே கப்பலேறிவிட்டான். வெளி நாடு முற்றும் சுற்றித் தன் ஆவல் தீரப் படித்துத் தேறினான்.

அவன் பணத்திற்காக எத்தகைய தைரியசாலியாக இருந்தபோதி லும் சுபாஷிணியின் நினைவு அடியோடு மறக்கவில்லை. அவளையே விவாகஞ்செய்துகொண்டு இந்த மாதிரி பாக்கியம் பெற முடியாமல் போய்விட்டதே என்று அடிக்கடி நினைப்பான்.

சுபாஷிணி யாரை மணந்தாளோ! எப்படி இருக்கிருளோ!...... அவள் ஆயிரம் ரூபாயை த்ருணமாக மதித்துத் திருப்பிவிட்ட செய் கையை மட்டும் அவனால் மறக்கமுடியவில்லை. ஆனால், தன்னுடைய பணத்தாசையையும் மாற்றமுடியவில்லை. அடிக்கடி சுபாஷிணியை நினைப்பான். தான் ஒரு கடிதமெழுதி க்ஷேமலாபங்களை விசாரிக்க லாமா வென்றும் எண்ணுவான். சீச்சீ! அது சரியில்லை. என்னை நம்பி மோசம் போய்விட்ட பிறகு என் கடிதம் அவளுக்குக் கொடிய பாணம்போல விருக்கும்......என்று சதா நினைப்பான்.

தன் மனைவிக்குக் கடிதமெழுத வேண்டுமென்று நினைத்தால், மனத்தில் அன்பு உண்டாகவில்லை. எனினும், இனி உண்டாக் கிக் கொள்ளும்பொருட்டு எழுதிப் பார்க்கலாம் என்ருலோ, அவளை முகூர்த்த நிமிஷத்தில் பார்த்ததைத் தவிர பிறகு பார்க்கவுமில்லை... எதற்கும் எழுதுவோம்—என்று பலவாறு குழம்பியபடியே ஒரு கடிதம் எழுதினான்.

அதற்கு மனைவியிட மிருந்து "சாந்தியாவதற்கு முன்பு இவ்விதம் எழுதுவது எனக்கு வெட்கமாக விருக்கிறது. எல்லோரும் பரிகஸிக் கிருர்கள். இனிமேல் எழுதவேண்டாம்" என்று பதில் வந்துவிட்டது கண்டு, அந்த நிமிடம் சுபாஷிணியின் ஆழ்ந்த காதலை எண்ணி மிகவும் துக்கித்தான். வெளிநாட்டில் காதலர்களின் களியாட்டத்தைக் காண இவன் மனது அடியோடு மாறத் தொடங்கியது.

சுமார் ஏழு வருட காலங்கள் வெளிநாட்டில் சுற்றிவிட்டுத் தன் தாய்நாடு திரும்பி வந்து சேர்ந்தான். பரீக்ஷை பாஸ்செய்து விட்டு வந்ததற்காக கப்பலிலிருந்து இறங்கிய உடனே மாமனர் புதிய கார் ஒன்று வாங்கிப் பரிசாகக் கொடுத்தார். இதைக்கண்டு மீண்டும் அவன் உள்ளம் பூரித்துவிட்டது.

தான் எத்தனையோ பாக்கியம் செய்ததனுல்தான் இம்மாதிரி யான ஓர் மாமனர் தனக்குக் கிடைத்தாரென்று மட்டுமீறிய சந்தோ ஷமும் சிறிது கர்வமும் உடனே ஏற்பட்டுவிட்டன. மாமனரின் தடபுடல் உபசாரம் பாஸ்கரனை அப்படியே கவிழ்த்து விடும்போலாகி விட்டது. தான் எத்தனை சந்தோஷத்தில் மூழ்கி இருந்தபோதிலும்,

சுபாஷிணியின் முகம் பளிச் பளிச் என்று அவன் கண் முன் தோன்றி மறைவதுமட்டும் அவனால் மறக்கமுடியவில்லை. அவளும் தற்போது உயர்ந்த நிலைமையில்தான் இருக்கக்கூடும் என்று தன் மனத்தில் எண்ணியதோடு விட்டுவிட்டான்.

வெளிநாட்டில் பெரிய டாக்டர் பரீக்ஷைக்குப் படித்துப் பாஸ் செய்துவிட்டு வந்த உடனே மாமனாரின் உதவியால் பெரிய மருத்துவ சாலை நிறுவப்பட்டு, பாஸ்கரன் பெரிய வைத்தியனாயும், சர்ஜனாயும் ஆகிவிட்டான். பாஸ்கரனுக்கு விவாகம் செய்வித்த பெண், விவாக காலத்தில் மிகவும் சிறிய பெண். அவன் 8 வயதுக் குழந்தையைப் பணத்திற்காக மணந்துகொண்டான்.

விவாகத்திற்குப் பிறகு நாம் முன்பு தெரிவித்ததே போல, இப்போது மத்தியில் ஏழு வருடங்கள் கடந்துவிட்டன. பாஸ்கரனும் பெரிய டாக்டர் பதவியை அடைந்துகொண்டே வருகிறான். அவன் மனைவியை அழைத்துக்கொள்ளும் நாளும் சமீபித்தது. அவன் வெளிநாட்டிற்குச் சென்று திரும்பிய பெரிய நாகரிகக்காரனாகையினால், பெண்ணை ரகஸியமாகவே தன் வீட்டில் கொண்டு விடுங்கள்" என்று கடிதம் எழுதிவிட்டான்.

ஆடம்பரமான சீர்வரிசைகளுடன் அவன் மனைவியும் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அன்றையதினம் தன் மனைவியைப் பார்க்கப் போகும் சந்தோஷம் சற்றுப் புதிதாகவே உண்டாகியது. எனினும் ஒரு மின்னல் மட்டும் அடிக்கடித் தோன்றி மறைந்துகொண்டே 'ஒரு பெண்ணுக்கு வாக்குக் கொடுத்து மோசம் செய்துவிட்டாயே!' என்று இடித்துக் காட்டுகிறது. அந்த வேதனையையும் அவன் உணராமல் இல்லை. ஆனால்......

இரவு 9 மணி இருக்கும் பாஸ்கரனின் தாயார் பாஸ்கரனின் படுக்கை யறையைச் சிங்காரித்து வாஸனைத் திரவியங்களும் பரிமள அத்தர்களும் சுகந்தம் மிக்க புஷ்பங்களும் ஏராளமாக வைத்து, தன் ஆசைக்காக அலங்காரம் செய்தாள். 8-30 மணிக்குத்தான் அவர்கள் பாஸ்கரனின் மனைவியைக் கொண்டு வந்து விட்டார்கள்.

பாஸ்கரனின் தாயார் மருமகளைக் கண்டு பெரும் மகிழ்ச்சியடைந்து பூரித்தாள். பாஸ்கரனின் தாயார், 9-30 மணிக்கு இருவருக்கும் மங்கள ஆரத்திசெய்து, உள்ளே யனுப்பினாள். அந்தப் பெண்ணின் சகோதரி உள்ளே கொண்டுபோய்ப் பெண்ணை விட்டு விட்டு வெளியில் வந்தாள்.

பெரிய டாக்டர்—புகழும் கீர்த்தியும் தினே தினே விருத்தி யாகிக் கொண்டிருக்கும் பாஸ்கரன்—தன் பிற்கால வாழ்க்கையின் இன்பத்தை எண்ணி, மட்டு மீறிய ஆனந்தக் கோட்டை கட்டிக் கொண்டே இருக்கிறான். அவன்மனைவி பொற்கொடியோ, பூங் கொம்போ என்று ஐயுறும்படியாக, அத்தனை அழகாய் ஒரு புறம் நின்று கொண்டிருந்தாள். ஸ்திரீகளுக்குள்ள இயற்கை லஜ்ஜையும் கூச்சமும் அவளிடம் நிரம்பி இருந்தன.

பாஸ்கரனும் 15 நிமிடங்கள் வரை பேசாமல் சோபாவில் உட் கார்ந்திருந்தான். அவன் மனைவி, அவனைத் தலை நிமிர்ந்தும் பார்க்க வில்லை. அவன் மனத்திலோ கோபமும் சோகமும் ஒன்றுகூடி வதைக்கின்றன.

சுபாஷிணியின் முகம் எங்கு பார்த்தாலும் தெரிவதுபோல உணர்ச்சி யொருபுறம் பாதிக்கின்றது......அவைகளை மாற்றிக் கொண்டு மெல்லிய குரலால், "சாரதா! சாரதா!!...ஏன் காலைக் கடுக்க நிற்கிறாய்? நான் கூப்பிடவேண்டுமென்று பிகு செய்கிறாயா? இப்படி வந்து உட்காரு"...என்று கூப்பிட்டான்.

பதில் இல்லை. மீண்டும், நமக்குக் கல்யாணமாகி எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. இன்று நானாகக் கூப்பிட்டும் என்னுடன் பேசுவதற்கு உனக்குப் பிடிக்கவில்லையா? இப்படி வா; உட்காரு" என்றான். அதற்கும் பதிலில்லை. பாஸ்கரனுக்கு அதிகமாக கோபம் வந்தது. உடனே எழுந்து கட்டிலில் படுத்துவிட்டான்.

மீண்டும் அரை மணியாயிற்று. நிசப்தமான அவ்வறையில் தேம்பித் தேம்பி அழும் சத்தம் கேட்டது. பாஸ்கரன் சடக்கென்று எழுந்து சாரதாவை நோக்கினான். அவள், தன் முகத்தை மூடிக் கொண்டு தேம்பித் தேம்பி யழுவதைக் கண்டு அவளருகில் சென்று "சாரதா! நீ ஏன் இப்படிப் புலம்புகிறாய்! எனக்கு ஒன்றும் விளங்க வில்லை. சீமைக்கு எனக்குக் கடிதம் எழுதினதுபோல...இப்போ தும் பிறர் பரிகஸிப்பார்களே என்று வருத்தமா! வெட்கமா...உன் மனத்தில் இருப்பதைத்தான் சொல்லிவிடு...அழாதே!...அழாதே!" என்று அவளைச் சமாதானம் செய்து கண்ணைத் துடைத்து மெள்ள அழைத்து வந்து சோபாவில் உட்காரவைத்துக் கொண்டான்.

சாரதாவின் துக்கம் இன்னும் அதிகரித்துவிட்டது. பின்னும் தேம்பித் தேம்பிப் புலம்புகிறாள். பாஸ்கரன் எத்தனை சமாதானம் செய்தும் அடங்கவில்லை. பாஸ்கரனுக்கோ ஒன்றுமே தோன்றாமல்

பெரிய குழப்பமாகிவிட்டது. பல இனிய வசனங்களால் மீண்டும் அவளைத் தேற்றினன்.

சாரதா எழுந்து பாஸ்கரனின் உடம்பைத் தடவிக்கொண்டே வந்து, காலைப் பிடித்துக்கொண்டு கீழே விழுந்து, "நாதா !...என் ப்ராணநாதா !...எனக்கென ஈசன் உலகத்தில் மக்கள் அனுபவிக்க வேண்டிய பல சுகபோகங்களையும், பெரிய ஐச்வர்யத்தையும், உன்னதமான ஒப்பற்ற கணவனையும் மற்ற எல்லாவற்றையுந்தான் கொடுத்தார். ஆனல்...ஆனல்...நாதா !...ஆனல்...எல்லாவற்றையும் கண்டு அனுபவிக்கும், ஆனந்திக்கும் மூலப்பொருளாகிய கண்ணைக் கொடுக்காமல் என்னைக் குருடியாகப் பிறப்பித்துவிட்டார்...

பாஸ்கரன்:—ஹா!...என்ன ! என்ன !! என்ன!!! குருடியா!...நீ குருடியா !!...ஐயோ !...

சாரதா:—ஆம். நான் குருடி. என் ப்ராணநாதரின் அபூர்வ வனப்பைக் கண்டு களிக்கும் பேறு பெருத குருடி ! என் நாதர் இன்னர் என்று கண்டறியும் பாக்யம் செய்யாத குருடி. என்னையே நான் தெரிந்துகொள்ளமாட்டாத குருடி...

இந்த வசனங்கள் பாஸ்கரனின்மீது எரிமலையையே புரட்டியது போலாக்கிவிட்டன. அவனுக்கு ஆகாயமும் பூமியும் ஒன்ருகிவிட்டது. தலை சுழலுகிறது. மார்பு துடிக்கிறது. சித்திரவதை செய்கிறது. அவனல் சகிக்கக்கூடாமல் அப்படியே விழுந்துவிட்டான்.

பாஸ்கரனின் நிலைமையை அறிந்துகொள்ளமாட்டாத பிறவிக் குருடாகிய அவள் என்ன செய்வாள் பாவம் ! புலம்புவதைத் தவிர வேறு அறியவில்லை. பாஸ்கரனின் இருதயம் வெடித்துவிடும்போலவிருக்கிறது. தனக்கு எத்தனை உயர்ந்த பதவிகள் இருந்தபோதிலும் மனைவி ஒரு குருடியல்லவா ! ஐயோ !...சுபாஷிணியின் சாபம் தான் இது...பேதைப் பெண்ணை ஆசை காட்டி மோசம் செய்ததன் பலன் இது...ஆம்...சுபாஷிணீ !...சுபாஷிணீ !...உன்மனம் எனது கடின சித்தத்தைக் கண்டு வெடித்திருக்குமல்லவா ! அந்த வினை தான் என்னுள்ளம் இப்போது தவிக்கின்றது......

"ஹா!...என்ன செய்வேன்...அடே வஞ்சகப் பாவி ! கிராதகா சண்டாளா !...என் தலையில் ஒரு குருட்டுப் பெண்ணைக் கட்டுவதற்காகவா இந்த நாடகம் ஆடி பணத்தை ஜலமாக இரைத்தாய்... ஐயோ ! மோசமே !" என்று புழுவாகத் துடிக்கிருன். அவன் ஓர்

நடைச் சவம் போலாகிவிட்டான்.

உடனே எழுந்து அவ்விடத்தை விட்டு வெளியே வந்து தனது வைத்திய கட்டிடத்திற்குப் போய் படுத்துக்கொண்டான். பாஸ்கரனின் தாயாருக்கு ஒன்றுமே தெரியவில்லை. பையன் ஆவேசத்துடன் எழுந்து சென்றதும் பெரிய பயம் பிடித்துக் கொண்டது. "பணக்காரப் பெண் என்கிற கர்வத்துடன் அப்பெண் ஏதேனும் பேசிவிட்டதோ! அதனால் கோபித்துக் கொண்டு போய் விட்டானோ!" என்ற பல யோசனைகள் தோன்றின.

உடனே மருமகளிடம் சென்றாள். அவளும் சோபாவில் அழுதுகொண்டு படுத்திருந்ததால், பின்னும் திகில் அதிகரித்தது. நேரே மகனிடம் ஓடினாள். பாஸ்கரன் தலைவிரி கோலமாகக் கதறிக் கொண்டு படுத்திருப்பதைக் கண்டு "என்னடா! பாஸ்கரா! என்ன விஷயமடா?" என்று கேட்டாள்.

பாஸ்கரன் சீறி விழுந்தவாறு, "போதும்! பணம்! பணம்!! என்று எனக்குப் புதிய ஆசையை உண்டாக்கி, பணக் கடலில் என்னைத் தள்ளினாய். ஆனால் அக்கடலில் ஆனந்தமளிக்கக்கூடிய நல் முத்து, பவழம், சங்கு முதலியன இல்லாமல் பெரிய திமிங்கிலம் இருந்து என் சந்தோஷத்தையே விழுங்கிவிட்டது...அம்மா!...'சுபாஷிணியை மறந்துவிடு. ஏழை பிச்சைக்காரி...இக்காலத்தில் பணந்தான் பிரதானம்' என்று சொன்னாயே! சுபாஷிணியைத் துரோகம் செய்தது சரியாகப் பலித்தது. கலிகாலத்தில் கைமேல் பலன் என்பது என் விஷயத்தில் அப்படியே பலித்துவிட்டது. நீ தேடிப் பிடித்த பெண் பிறவிக் குருடு...இரு கண்களும் அற்ற பாவை.... என்றான்.

இதைக் கேட்ட ரங்கம்மாள், "ஹா...குருடா!...குருடா!... ஐயையோ!...நமக்கு வேறு பெண்ணைக் காட்டி மயக்கி மோசம் செய்துவிட்டார்களே!......கடவுளே!........என் வாழ்வில் சிறிது சந்தோஷமேனும் உண்டாகும் என்று எண்ணுவதற்குள் தீராத வேதனையை வைத்துவிட்டாயே!" என்று முட்டிக்கொண்டாள். இனி, யார் என்ன செய்து என்ன பலன்! இருவர் மனமும் உடைந்துவிட்டது. கரைகாணாத கவலையில் ஆழ்ந்து விட்டார்கள்.

சுபாஷிணி வாழ்க்கையின் வைபவத்தைக் கூறவேண்டுமா! காக்காய் வலிப்பு புருஷனுடன் எத்தனை சந்தோஷமாக குடும்பம் நடத்துவாள் என்பதைக் கூறவேண்டுமா? ஏழு வருடங்கள் எப்

படியோ ஓடி மறைந்துவிட்டன. தன்னுடைய உண்மையான ஜீவியத்தின் சக்தி அன்று கந்தசாமி கொணர்ந்த கடிதத்தைப் பார்த்த நிமிடத்திலேயே போய்விட்டது. கேவலம் ஓர் கட்டைபோலவும் ஜடம்போலவும் ஆகிவிட்டாள். "பாஸ்கரா! என்னை மோசம் செய்ததை எப்போதாவது நினைக்கமாட்டாயா? அப்போதாவது என் நிலைமையை அறிவாயா?" என்று பலகாலும் எண்ணுவாள். பாஸ்கரன் சௌக்கியமாக இருக்கவேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்திப்பாள். இவ் வேழு வருடத்திற்குள் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாள். காக்காய் வலிப்புக்காரனுக்குப் பிறந்த குழந்தைகளைப்பற்றிக் கூறவேண்டுமா? அவைகளுக்கும் அதே வியாதி வந்துவிட்டது. சுபாஷிணியின் சந்தோஷம் எத்தனை உச்சத்திலிருக்கும்?

நிலம் புலன்கள் யாவும் விளைவின்றிப் பாழாகிவிட்டன. அசலும் கரைந்துவிட்டது. காக்காய் வலிப்புக்காரன் என்பதனால் வேலையும் கிடைக்கவில்லை. பெற்றோர் பரலோகம் போய்ச் சேர்ந்தார்கள். உடன்பிறந்தோர் பாகத்துடன் விலகிக் கொண்டார்கள். இரண்டு காக்காய் வலிப்புக் குழந்தைகள், காக்காய் வலிப்புப் புருஷன். வருமானமோ பூஜ்யம். சாப்பாட்டிற்கும் தகராறு. சுபாஷிணி என்ன செய்வாள் பாவம்!

வேதனையினால் வெதும்பிப்போய் அழகு குன்றி ஓர் குச்சிபோலாய்விட்டாள். சதா மனவேதனையும் துயரமும் கொண்ட ஜீவன் எத்தனை நாளைக்குத்தான் ஈடு கொடுக்க முடியும்? வேதனையே வியாதியாக மாறி, இருமல் நோயால் பீடிக்கப்பட்டு, சில மாதத்திற்குள்ளேயே படுக்கையோடு படுக்கையாக ஆகிவிட்டாள். பழைய நதிக்கரை வீட்டிற்கே குடியேறினார்கள்.

அதே அறை, அதே நார்க்கட்டில், அதே சுபாஷிணி. அதே நதிக்கரை—ஆனால் "அம்மா! அம்மா" வென்று கத்தும் இரு நோயாளிக் குழந்தைகளின் குரல்களும், நோயாளி புருஷனுடைய பெருமூச்சும், பெற்ற தாயாரின் ஹ்ருதயத் தவிப்பும் இன்று அதிகப்படியாகக் காண்கின்றன.

வெகு இன்பகரமான மாலை நேரம். சந்திரன் கீழ்த்திசையில் வெகு ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்துக்கொண்டு கிளம்புகிறான். நக்ஷத்திரக் கூட்டங்களும் கூடிக் களிக்கின்றன. எங்கும் சிலுசிலுப்பான காற்று. இடை இடையே மேகங்களும் உலாவுகின்றன.

சுபாஷிணியின் கண்கள் அந்தச் சந்திரனையே நோக்குகின்றன. ஆனால் இரு விழிகளும் இரு அருவிகள் போல ஓடுகின்றன...ஜடை பிடித்த கேசங்கள் முகத்தின்மேல் காற்றினால் தாறுமாறாக ஆடி விழுகின்றன. மூச்சு மட்டும் அடைத்தும் துரத்தியும் திணறியும் வருகின்றது.

சுபாஷிணியின் கண்கள் மழை பெய்கின்றனவேயன்றி, அவள் வாய்விட்டு அடிக்கடி சிரிக்கிறாள். கைகூப்புகின்றாள். தன் குழந்தைகளின் முகத்தைக் கூர்ந்து நோக்குகிறாள். தாயாரைப் பார்த்துத் தவிக்கிறாள். கணவனைக் கவனிக்கிறாள். பெரும்பான்மையாக ஆகாயத்தையே பார்க்கிறாள்.

குழந்தைகள், "அம்மா! ஏன் அழறேம்மா...உனக்கென்னம்மா ஒண்ணும்"...என்று மழலைச்சொற்களால் அடிக்கடி கேட்கின்றன. கணவனோ ஒன்றுமே பேசவில்லை. தாயார் "சுபாஷிணீ! சுபாஷிணீ !!...என்னை என்ன செய்யப் போகிறாய் கண்ணே!"...... என்கிறாள். அதற்குமேல் பேச முடியவில்லை.

சுபாஷிணி மெல்ல தன் தாயை நோக்கி, "அம்மா! கோபிக்காதே! நீ இறப்பதற்குள் பாஸ்கரனைக் கண்டால் சுபாஷிணி இறக்குந் தறுவாயிலும் உன்னுடைய க்ஷேமத்தைக் கோரினாள்; உன்னைப் பற்றிக் கேட்டாள்...என்று சொல்லுகிறாயா!...இதுதான்...தவறாமல் சொல்லு—என்றாள். தொண்டையை அடைத்தது. கண் மூடிவிட்டாள்.

அவ் வறையில் தடதடவென்று யாரோ வரும் ஓசை கேட்டது. அடுத்த நிமிடம் துரும்பென மெலிந்த தேகமும் சோபையற்ற முகமும், உத்ஸாகம் இழந்த மனமும், விசனமே வடிவான தோற்றமும் கொண்ட பாஸ்கரன், "சுபாஷிணீ!...என்னை க்ஷமிக்கவேண்டும்...மன்னிக்கவேண்டும்"...என்று கண்ணீர் பெருகியவாறு அவ் வறையில் நுழைந்தான்.

இங்குள்ள கோர சம்பவத்தைக் கண்டு திடுக்கிட்டான். இம்மாதிரி இருக்குமென்று அவன் சற்றும் நினைக்கவில்லையாதலால், தீயை மிதித்தவன் போலத் துள்ளியவாறு, "சுபாஷிணீ! சுபாஷிணீ!...என்ன உடம்பு?"...என்று கேட்டுக்கொண்டே அருகில் சென்றான்.

இக் குரலைக் கேட்ட சுபாஷிணி கண்ணைத் திறந்தாள். ஏதோ புதையல் கண்டெடுத்தவளைப்போலத் துள்ளியவாறு, "பாஸ்கரா!

பாஸ்கரா !! உன்னருமை மனைவி எங்கே?...நீங்கள் செளக்யமா? இப்படி உட்காரு" என்றாள்.

அதே நிமிடத்தில் அவ் விரு குழந்தைகளுக்கும் காக்காய் வலிப்பு வந்து விலுவிலு என்று உதைத்துக்கொண்டு கத்துகின்றன. அதைக் கண்ட அவள் புருஷனும் கட்டை போல நீட்டிவிட்டான். வாயில் நுரை ததும்புகின்றது. இந்தக் கண்ருவிகளைக் கண்டும், சுபாஷிணி கேட்ட வார்த்தைகளைக் கேட்டும் பாஸ்கரனின் மனம் துடியாத் துடிக்கின்றது. ஒன்றுமே தோன்ருமல், சுபாஷிணியின் முகத்தையும், குழந்தைகளின் முகத்தையும் பார்க்கிருன்.

தேம்பித் தேம்பிக் கதறுகிருன். சுபாஷிணி, தன்னை மீறிய சோகச் சிரிப்பு ஒன்று பலமாகச் சிரித்துவிட்டு, "பாஸ்கரா! இவை கள்தான் நான் கண்டு அனுபவிக்கும் ஆனந்தமாகும். உன்னை நம்பி நான் கண்ட பலன்கள் இவைதான்...பாஸ்கரா!...கோபிக்காதே! ஆத்திரம் பொல்லாதது...மூடத்தனமாய்ச் சொல்லிவிட்டேன். என் விதி...என் விதி. பாஸ்கரா!...உன்னை...இல்லை...இல்லை...இல்லை... தெய்வீகமாக உதித்த காதல்!...காதல்!!...காதல் !!!....இன்றேல், சாதலே மேல்....நான் வந்த காரியமும் என் கடனும் முடிந்தன.

பாஸ்கரா!...காக்காய் வலிப்புடன் மூன்று கொத்துயிர்களும், மகா பாபத்தைச் செய்து என்னைப் பெற்ற ஜீவனும்...இரக்கமற்ற இதயத்தை யுடைய நீயும்...இந்தச் சரீரத்தைச் சூழ்ந்திருங்கள். கடைசி முறை எல்லோரையும் பார்க்கிறேன்...பாஸ்கரா!...அம்மா! குழந்தைகளே!....நாதா!......ஹி! ஹி! ஹி!...ஒரே பார்வை...சில நிமிடங்கள் ஸ்வாஸம் திணறியது. அடுத்த விநாடி சுபாஷிணியின் ஆவியானது கிளியைப்போலப் பறந்து நிம்மதி உலகத்தில் ஐக்கிய மாகிவிட்டது.

இந்தக் கோரத்தைக் காணச் சகியாத சந்திரன் ஒளி குன்றி ஞன். மேகம் அவனை மறைத்துவிட்டது. இருளும் நிசப்தமும் குடி கொண்டன. இயற்கை தேவியும் துயரத்தினுல் மறைந்துவிட்டாள். எங்கும் சோபை இழந்ததுபோலாய்விட்டது. அத்தகைய பரிதாப மான வேளையில், "சுபாஷிணீ! சுபாஷிணீ!"...என்ற பெயரைக் கூறி, இரண்டு குரல்களும், அம்மா! அம்மா! வென்று இரண்டு குழந்தைகளின் குரல்களும் சேர்ந்து வானத்தை யளாவி வீறிட்டன. ஆனுல், சுபாஷிணி கவலையற்று நிம்மதியாகப் படுத்துவிட்டாள்.

அதிகாரம் 8

தீரம் வீரம் மாறிய சாரம்

கதையின் கடைசி வார்த்தை முடியும் வரையில் சாகரன் வெகு ஸ்வாரஸ்யமாயும் தன்னையே மறந்தும் படித்தான். அந்தந்த சமயத்து உணர்ச்சிகள் அவனை மின்சாரம்போலத் தாக்கி, கடைசி பகுதிகள் படிக்கும்போது அவன் மனத்தைக் கரைத்துவிட்டன. கண்ணீர் தானாகவே வழிந்து செல்வதையும் அவன் அறியவில்லை. சுபாஷிணி "அம்மா! பாஸ்கரனை நீ கண்டால், நான் கடைசியாக இறக்குந் தறுவாயிலும் அவனுடைய க்ஷேமத்தைக் கோரியதாகச் சொல்லு" என்ற வாக்கியத்தைப் படிக்கையில், அவனை மீறிய துக்கம் வந்துவிட்டது. மேற்கொண்டு படிக்காமலிருக்கவும் முடிய வில்லை. புலம்பிக்கொண்டே கதையைப் படித்து முடித்தான்.

சில நிமிஷங்கள் வரையில் அக் கதையிலேயே ஐக்கியமாகி ஏதும் தோன்றாமல் பாஸ்கரனை வெறுத்தும் கோபித்தும் பலவித உணர்ச்சிகளால் சூழப்பட்டு யோசனையில் ஆழ்ந்திருந்தான். மீண்டும் அக் கதையைப் படித்தான். பித்தன்போலச் சற்று நேரம் கிடந்தான்.

இத்தனை அழகாக ஒரு கதையை எழுதி, யார் என் பெயரில் எப்படி பிரசுரம் செய்தார்கள் என்ற பெருங் குழப்பமும் கலவர மும் உண்டாகிவிட்டன. கதையின் கீழே இருந்த பத்திராதிபரின் குறிப்பைப் பார்த்தான்.

குறிப்பு:—இக் கதையை எழுதிய ஆசிரியர் சில மாத கால மாக ஓயாது சிறு கதைகள் போட்டிக்கு அனுப்பிக்கொண்டே இருந்தார். ஆனால், அவைகள் எல்லாம் கதை என்று சொல்வ தற்கும் தகுதி இல்லாதவை என்பதை அவருக்கே எழுதித் திருப்பி யனுப்பிவிட்டோம். இப்போது, அவர் தனது முழுத் திறமையையும் காட்டி, வெகு அற்புதமாக இக் கதையை உலகானுபவத்துடன் எழுதியிருப்பது போற்றத்தக்கது. அதோடு ஒரு முக்கிய விசேஷம் என்னவெனில், அவர் எழுதிய முதல் கதையில் பெண்களின் பெய ரைக் கூட உச்சரிக்கவில்லை. பிறகு வந்த அநேக சிறுகதைகளிலும் அதையே அனுசரித்தார். அத்தகையவர், இக் கதையில் முக்ய

ஆதாரம் பெண்ணுக்கே கொடுத்துச் சோக ரசத்தில் கண்ணீர் பெருகும்படி எழுதி முடித்திருப்பது மிகவும் முக்கியமானதாகையால் இங்கு குறிப்பிட்டிருக்கிறோம். இதுமாதிரியே எல்லோரும் விருத்தியடைய கொண்டுமென்பதே எமது நோக்கம். இந்த ஆசிரியருக்கு 500 ரூபாய்க்குச் செக்கு அனுப்பியுள்ளோம்.

முக்கிய கவனிப்பு :—இந்தக் கதையைச் சாமானிய காதல் தானே என்றோ அல்லது துக்ககரமான முடிவுதானே என்றோ நினைக்கக்கூடாது. இதில் மிகவும் சிறந்ததும் வாழ்க்கையில் நடக்கும் அரிய விஷயங்களும் நிரம்பிக் கிடக்கின்றன. கண்ணை மூடிக்கொண்டு பெண் வீட்டாரோ, பிள்ளை வீட்டாரோ பணத்தை ஜலம்போலச் செலவழிப்பதில் உள்ள ஏதோ பெரும் விபரீதமான ரகஸ்யம் மறைந்து கிடக்கின்றன என்பதை இதன் ஆசிரியர் வெகு அழகாயும் சமயோசிதமாயும் தான் செய்த தவறு தனக்கே பட்டு உறுத்தும்படியான நீதியையும் புகட்டிச் சித்திரிப்பது மிகவும் போற்றத் தக்கதாகும். பெண் வீட்டாரோ, பிள்ளை வீட்டாரோ பணத்தை வாரி இரைத்தால் அதை நன்கு யோசித்து ஆராய வேண்டிய பாடத்தை வாசகர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டிய உணர்ச்சியைக் கிளப்பிவிட்டிருக்கிறார்.

காதல் கொண்டு விட்டதனுலேயே வீட்டை விட்டு ஓடி விட்டாள்...தூக்கிக்கொண்டு போய்விட்டான்......என்கிற நடைமுறைக்கு ஒவ்வாத முறையை ஆசிரியர் கையாளாதது குறிப்பிடத் தக்கது. இக் கதையில் இந்த முடிவை எதிர்பார்க்க முடியாதவாறு கொண்டுபோய் திடும்பிரவேசமாக இப்படி முடித்திருப்பதானது படிப்போரின் மனத்தைக் கரைத்து உருக்குகின்றது. வியாதிக்காரர்களுக்குப் பிறக்கும் குழந்தை வியாதிப் பிண்டமாகவே பிறப்பது கவனிக்கத் தக்கதாகும். இம்மாதிரியே ஆசிரியர் இன்னும் அரிய பல சிறு கதைகளை எழுதி உலகத்திற்கு உதவும்படி எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.

பத்திராதிபர்.

இதைப் படித்ததும் சாகரனுடைய மனோவேகமும் வேதனையும், சந்தேகமும் பின்னும் அதிகரித்தன. இம்மாதிரி யார் எழுதி தன் பெயரைப் போட்டிருப்பார்கள்...இதென்ன! பெரிய வேடிக்கையாயும் நம்பக் கூடாத விஷயமாகவும் இருக்கிறதே...என்று குழம்பிப் போய்விட்டான்.

பிறகு அன்று வந்த மற்ற கடிதங்கள், பாக்கெட்டுகள் எல்லா வற்றையும் பார்த்தான். அதில், ஒரு கட்டைப் பார்த்ததும் இவன் ஆச்சரியமும் வியப்பும் பின்னும் பதின்மடங்கு அதிகரித்துவிட் டன. அக் கட்டில் ஒரு கடிதமும் 500 ரூபாய்க்கு ஒரு செக்கும் இருந்ததே யாகும். கடிதத்தில் பின் வருமாறு எழுதியிருந்தது.

" அன்பு மிக்க ஐயா !

உங்களுடைய விடாமுயற்சிக்கும் அபிவிருத்திக்கும் நாங்கள் ஆச்சரிய மடைகின்றோம். உம்முடைய முதல் கதைக்கு நாங்கள் எழுதிய கடிதத்தை மறந்திருக்கமாட்டீர். பரிசுப்போட்டியில் ஜெயித்த கதையுடன் இரண்டு கதைகள் அனுப்பியிருந்தீர்களே அவை உமது முதல் கதைக்குத் துணையாகத்தான் இருந்தன. அவற் றுடன் சுத்தமாகத் தமிழ் டைப்ரைடிங்மெஷினில் டைப் செய்து அனுப்பியிருந்தானது எங்களுக்குப் படிக்க மிகவும் சௌகரியமாக இருந்தது. உமது கையெழுத்துப் புரிவதும் கஷ்டமாக இருக் கிறது. இனிமேல் இதுபோன்று நல்ல கதைகள் எழுதினால், அவற்றை டைப் செய்தே அனுப்பவும். இதோடு 500 ரூபாய்க்குச் செக் ஒன்று வைத்திருக்கிறோம் ; பெற்றுக்கொள்ளவும்.

பத்திரிகாசிரியர்."

இதைப் படித்த உடனே நாம் முன் கூறிய ஆச்சரியத்தையும் குழப்பத்தையும் விட நூறு மடங்கு அதிகரித்த வியப்பும் பிரமிப் பும் சாகரனை வதைக்கின்றன. அக் கடிதத்துடன் தான் அனுப்பிய கட்டுகள் அப்படியே திரும்பி வந்திருப்பதைப் பார்த்து வெட்கப் பட்டான். "இதோடு கூட இக்கதை டைப் செய்து வைத்திருந்த தென்றால், என்ன ஆச்சரியம்! நான் கட்டியனுப்பிய பார்ஸலில் டைப் செய்த கதை ஒன்று எப்படி முளைத்திருக்கும்?

ஒன்றுமே விளங்கவில்லையே! வேண்டுமென்றே அவர்கள் என் பெயரைப் போட்டுப் பிரசுரஞ்செய்து, என்னை அவமானப்படுத்த எண்ணுகிறார்களா?...இல்லையே!...அப்படி எண்ணினால் 500 ரூபாய்க்குச் செக்கு எப்படி அனுப்புவார்கள்? இது ஏதோ ஜகஜ் ஜால வித்தையாக வன்றோ இருக்கிறது!...இதைப் பார்க்க என் மனத்தை வெட்கமும் துக்கமும் பாதிக்கின்றனவே!....

என்ன அருமையான கதை!...எத்தனை ஒழுங்காக எழுதி யிருக்கிறது. மனத்தை உருக்கி, மதியை மயக்கி, தன் வயப்படுத் திக்கொள்ளும் சக்தி வாய்ந்த கதையை நான் எழுதியதாக யார்

தான் போட்டிருப்பார்கள்? ஒருகால் பேர் தவருக இருக்குமோ என்பதற்கும் இல்லை. நான் முதல் கதை எழுதியதிலிருந்து இது வரை நடந்துள்ள விவரங் கொடுத்திருக்கின்ருர்களே!...

இந்தச் செக்கை நான் என்னவிதமான சாக்குச் சொல்லித் திருப்புவது?...இதைப் பெற்றுக்கொள்வது மிகவும் வெட்கக் கேடானதும் பாபமானது மல்லவா?''...என்று குழம்பிக் கொண் டிருக்கையில், இவனுக்குத் தெரிந்த சிலர் இவனுக்குப் பரிசு வந் ததைப்பற்றிச் சந்தோஷம் விசாரிக்க வந்துவிட்டார்கள்.

இவனுக்கோ பதில் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. தான் எழுதவில்லை என்று மானத்தை விட்டுச் சொல்லவும் வெட்க மாக விருக்கிறது. தான் எழுதியது என்று சொல்லவும் மனச் சாட்சி குத்துகின்றது. என்ன செய்வான் பாவம்!...வந்துள்ள ஒவ்வொருவரும் ''சாகரா! பலே! கதையென்ருல், இப்படியல்லவா எழுதவேண்டும்? நீ வெகு நாளாக எழுதும் ரகஸியம் இப்போது தான் தெரிந்தது. அதைப் படிக்கும்போது எங்கள் கண்கள் மழை பொழிந்தபடியே இருந்தன...அம்மாதிரி ஓர் அற்புதமான கதையை நமது சாகரன் எழுதிப் பரிசும் பெற்றது எங்களுக் கெல் லாம் பெரிய சந்தோஷமல்லவா?''...

என்றெல்லாம் போற்றிப் பேசுகிருர்கள். ஏதோ சமயோ சிதம் போலப் பேசி அவர்களை யனுப்பிவிட்டான். அடுத்த வினடி சிவானந்தம் தாங்கமாட்டாத சந்தோஷத்துடன், ''பலே சாகரா!... மெச்சினேன்...அளவற்ற ஆனந்தம் அடைகின்றேன். இப் பொழுதுதான் என்னுடைய உள்ளம் பூரிக்கின்றது. கதையைப் படித்துப் படித்துப் பிரும்மானந்த மடைந்தேன். நான் எழுதிய கதையை விட உன்னுடைய கதைதான் வெகு நன்ருக இருக்கிற தென்று அதைப் படித்த பலரும் சொன்னர்கள்...சாகரா! என் மகிழ்ச்சியினுல் உனக்கு கங்க்ராச்யுலேட் (congratulate) செய் கிறேன்'' என்று கூறி, சாகரனைத் தட்டிக் கொடுத்தான்.

சாகரனுக்கோ இந்த வார்த்தைகள் காதில் பொத்துகின்றன. அவனுடைய ஆப்த நண்பன் சிவானந்தன் ஒருவன்தான்; ஆகையி ஞல் அவன் மனத்திலுள்ளதை ஒளிக்காமல், ''சிவானந்தம்!...நீ ஏதோ என்னைத் தோத்திரம் செய்கிருய். என் மனமோ குழம்பிக் கிடக்கின்றது. கதை மிகவும் ஸ்வாரஸ்யமா யிருக்கிறது. என் மனத்தையும் மாற்றிக் கலக்கிக் கண்ணீர் பெருகச் செய்துவிட்ட

பெருமையை நானே அறிந்தேன்.

சிவா!...இது நான் எழுதியதல்ல. யாரோ எழுதி என் பெயரைப் போட்டு என்னை அவமானப் படுத்துவது போலிருக்கிறது. நீ கூடச் செய்திருக்கலாமோ என்று எனக்குச் சந்தேகம்...அப்படிச் செய்திருந்தால் சொல்லிவிடு. என்னை வருத்தாதே!...நான் அனுப்பிய கதைகள் யாவும் திரும்பி வந்துவிட்டன......

என்று கண்ணீர் பெருக மிக்க விசனத்துடன் தெரிவித்ததைக் கேட்ட சிவானந்தத்திற்குத் தூக்கி வாரிப் போட்டது. "என்ன! என்ன! யாரோ எழுதி உன் பெயர் போட்டிருக்கிறதா! இதென்ன வேடிக்கை....என் மீது சந்தேகிக்கிறாயா?...சாகரா! நான் அப்படிச் செய்வதா யிருந்தால், உன்னிடம் சொல்லிவிட்டே செய்திருப்பேன். என் தாயாரின் மீது ஆணையாக நான் அப்படிச் செய்யவில்லை. இது எனக்கே வியப்பாக விருக்கிறது"...என்று அவனும் வியப்புக் கடலில் மூழ்கினான்.

சாகரனின் மனமே சரியில்லையாகையினால் அங்கு அதிகம் பேச முடியவில்லை. சிவானந்தன் வீட்டிற்கு வந்துவிட்டான். அவனுக்கும் இந்த விஷயம் வெகு ஆச்சரியமாக விருந்தது; கண்டு கொள்ள முடியாது சிறிது யோசித்தான். அவனுடைய சகோதரி நித்யானந்தம் அங்கு வந்தாள். தன் அண்ணன் ஒருவாறு கலக்கத்துடன் இருப்பதைக் கண்டு "என் அண்ணா! உடம்பு என்ன?.... ஏதோ ஒருவாறு இருக்கிறீர்களே?"...என்றாள்.

சிவா:—ஒன்றுமில்லை. விசித்திரமான காரியம் ஒன்று என் சினேகிதன் சாகரனுக்கு நடந்திருக்கிறது. அதைக் கேட்டது முதல் சிறிது கலக்கமா யிருக்கிறது....என்று நடந்த விஷயங்களைக் கூறி, "இவ்விதம் யாரோ செய்திருக்கிறார்கள்"...என்றான்.

இதைக் கேட்ட நித்யா சிறிதும் வியப்புறாமல் விழுந்து விழுந்து நகைத்துக்கொண்டே "இதற்காகவா கவலை?" என்றாள்... சிவானந்தம் சற்று கோபித்தவாறு, "என்ன நித்யா! நீ குழந்தைத் தனமாக எண்ணிச் சிரிக்கிறாய். யார் எழுதிய கதையோ இவன் பேருக்குப் போட்டுப் பரிசும் 500 ரூபாய் வந்திருக்கிற தென்றால், இதை எழுதியவன் என்ன நினைப்பான். மிகவும் விபரீதமாகவன்றோ முடியும். அவன் சட்டப்படி நடவடிக்கையும் எடுக்கலா மன்றோ! இது மிகவும் விகாரமான காரிய மாயிற்றே!......

என்று முடிப்பதற்குள், நித்யா "அண்ணா! அவ்வாறு ஒன்

றும் நேராது; பயப்படாதீர்கள். அத்தனை விபரீதங்கள் எதும் கனவிலும் சம்பவிக்காதென்று அவரிடம் சொல்லித் தேற்றுங்கள். அண்ணு!...உங்களிடம் சொல்லாத ரகஸியம் என்ன இருக்கிறது? என்ருலும் இதுகாறும் சொல்லியும் பயனில்லை என்று பேசாதிருந்தேன். இனிமேல் ஒருகால் பயன் கிடைக்கலாமோவென்று சொல்ல சமயம் பார்த்திருந்தேன்.

அண்ணு! என்னுடைய சுகத்திற்கும் சந்தோஷத்திற்கும் பாத்யப்பட்டவர்கள் நீங்களே ஆவீர்கள். தாய்தந்தையரின் உரிமையும் உங்களைச் சேர்ந்துவிட்டது. நீங்களும் சாகரனும் ஆதிமுதல் ஒன்ருகப் பழகிய சினேகிதர்களாய் ஒருயிரும் ஈருடலுமாக இருக்கிறீர்கள். ஆதலால், அவருடைய குணத்தின் உயர்வு, யோக்யதை யாவும் நான் நன்கறிந்துகொண்டேன். அவருக்குள்ள ஒரு அபிப்பிராய பேதம் மட்டும் தடையாயிருந்ததால், நான் அதை வெளியிடாமலும் வேறு வரன்களுக்கு இசையாமலும் இருந்து வந்தேன்.

அண்ணு! வீண் வளர்த்தல் எதற்கு? அவரை மணந்து இல்லரசு புரியவேண்டுமென்ற ஆவல் என் மனத்தில் வெகு நாட்களாக வேரூன்றி வளர்ந்துவிட்டது. அவர் மனத்தை மாற்றுவதற்கு நீங்கள் செய்த பந்தயத்தையும் நான் அறிவேன். அவருக்குக் கதை விஷயத்தில் நீங்கள் பேராவலை ஊட்டிவிட்டதையும் அறிவேன்.

இன்னெரு ரகஸியம். அண்ணு! மன்னிக்கவேண்டும். என் சினேகிதை உமா எழுதியதாக பத்திரிகையில் பரிசு பெற்ற கதை சிலவற்றை உமக்குக் காட்டியது நினைவிருக்கலாம். அது சுத்த பொய்...நானே எழுதி, உமாவென்ற பெயரால் பத்திரிகைகளுக்கு அனுப்பினேன். நல்ல வேளையின் பயனுல் பல பரிசுகள் கிடைத்தன. சினேகிதையின் விலாசத்தின் மூலமாகவே பணத்தையும் பெற்று வைத்திருக்கிறேன்.

ஜனங்களின் மனப்பான்மையிலிருந்தும் பத்திரிகைகளின் மதிப்பிலிருந்தும் என் கதைக்கு நல்ல செல்வாக்கிருப்பதை அறிந்து கொண்டேன். சாகரன் பெண்பிள்ளையே வராது ஓர் கதை எழுதியதையும் உங்கள் மூலம் அறிந்தேன். அதே மாதிரியாக மாணுக்கரும் உபாத்தியாயரும் என்று பெண்பிள்ளையே இல்லாது "வாத்ஸல்யம்" என்று ஓர் கதை எழுதினேன். அது அவருடைய மனத்தை நன்ருக மாற்றியதையும் நான் அறிந்துகொண்டேன்.

மகாத்மா காந்தியை நாங்கள் கும்பலாக தரிசித்த காலத்தில்

அவர் வெளியில் நின்றிருந்ததை நான் பார்த்தேன். அவரது மனம் மாறியதை முகக்குறிப்பால் அறிந்தேன். அதையே ஓர் ஆதாரமாகக் கொண்டு அவரை இன்னும் திருப்பும்பொருட்டு ஒரு யோசனை செய்தேன். ஒரு கதை நானே எழுதினேன். அவருடைய ஆளிடம் அவர் எழுதிய கதைகளைப் பத்திரிகாலயத்திற்கு அனுப்பும்போது அதைக் கவனித்திருந்து அவனை ஏதோ காரியமாக அழைத்து எனக்கு அவசரமாக ஓர் சாமான் வாங்கி வரும்படியாக வெளியே அனுப்பிவிட்டேன். அவன் கட்டுகளை இங்கே வைத்துச் சென்றான். நான் என் சிநேகிதையின் வீட்டு, தமிழ் டைப் மெஷினில் டைப் செய்து தயாராக வைத்திருந்த கட்டை அவர் கதைகளுடன் கூட வைத்துக் கட்டி ஒட்டிவிட்டேன். அதை அவன் கொண்டுபோய் விட்டான். இவை நிகழ்ந்த பின்னர் தினந்தோறும் பத்திரிகையைப் பார்த்து வந்தேன். அது, இன்று வெளி வந்திருப்பதையும் அறிந் தேன். இதனால், அவர் முற்றிலும் மாறி இருப்பதோடு சற்றுக் குழம்பியும் போவார் என்று நான் அறிவேன். ஆனால், அதைப் பிறகு நானே சரிப்படுத்த எண்ணினேன்.

என்று முடிப்பதற்குள்...என்ன ! என்ன !...“வாத்ஸல்யம்” நீயா எழுதினாய் ?...உமா என்று உன் பெயரை மாற்றிக்கொண் டாய் ?...பிறகு இப் பெயரால் வெளியான “கண்ணீர்” “வஞ்சனை” “பச்சாத்தாபம்” முதலியவைகள் நீ எழுதியவைதானா ? என்ன ஆச் சரியம்...என் செல்வச் சோதரீ !...மெச்சினேன்...என் உள்ளம் ஆனந்தம் அடைகின்றது” என்று கட்டு மீறிய அபாரமான சந்தோ ஷத்துடன் தங்கையைத் தடவிக் கொடுத்தான்.

நித்யா ! நீ செய்த இந்தக் காரியம் சாகரனைப் பெரிய துக்க சாகரத்திலன்றோ ஆழ்த்திவிட்டது. ஐயோ பாவம் !...குழம்பிப் போய்விட்டான். மன நிம்மதியின்றித் தத்தளிக்கின்றான். செல்வச் சோதரீ ! நீ கதை எழுதும் ரகஸியத்தை மட்டும் நான் இந்த நிமிடம் வரையில் அறியமாட்டாமேயன்றி, உன் காதல் விஷயத்தை நான் சில காலமாக அறிந்துகொண்டேன். அதைப் பூர்த்தி செய்ய முடியுமா வென்று ஏங்கினேன். அதற்காகவே அவனைக் கதைப் பந்தயத்தில் இழுத்தேன். எத்தனையோ மாறுதல்கள் அடைந்து விட்டான்.

நித்யா ! நான் உடனே சாகரனிடம் தெரிவித்து விடட்டுமா ? தவிக்கிறான் பாவம்” என்று ஆத்திரத்துடன் கேட்டான். இவைகளை

யெல்லாம் தூரத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த சிவானந்தத்தின் மனைவி நகைத்துக்கொண்டே எதிரிலே வந்து, "கல்யாணம் எப்போது வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நித்யா ! நீ என்னிடம் கூட இந்த ரகஸியங்களை ஒளித்தாய் அல்லவா ! இருக்கட்டும். உன்னால் ஒளிக்கமுடியாத மற்றொரு சமயம் நேரும்போது நான் சொல்கிறேன்" என்று பரிகஸித்தாள்.

பிறகு சிவானந்தத்தின் மனைவி சில யோசனைகளைச் சொன்னாள். சிவானந்தமும் நித்யானந்தமும் அவற்றை ஆமோதித்தார்கள். உடனே சிவானந்தம் ஒரு கடிதமெழுதி சாகரனுக்கு அனுப்பினான்.

சாகரன் உண்மையிலேயே குழப்ப சாகரத்தில் மூழ்கி இருக்கையில் கடிதம் வந்தது. உடனே அதை ஆவலுடன் பிரித்துப் படிக்க வாரம்பித்தான்.

"என்னுருயிர் நண்பா ! உன் விஷயத்தை யறிந்து வந்தது முதல் எனக்கு மிகவும் ஆச்சரியமும் கவலையும் ஏற்பட்டுவிட்டன. அதைப்பற்றி நான் விசாரித்து உண்மையைக் கண்டு பிடித்துவிட்டேன். உடனே உனக்கு அறிவிக்க வேண்டி இதை எழுதுகிறேன்.

நண்பா ! காலச் சக்கரம் சுழலும் அதிசயத்தைப் பார். இக்கதையை எழுதியவர் யாரென்று நினைக்கிறாய்... தெரிந்தமாத்திரத்தில் வியப்பே வடிவாயும் அபாரமான பிரமிப்பும் அடைவாய். சில நாட்களாக பல பத்திரிகைகளில் சிறு கதைகள் எழுதி, புகழும் பரிசும் பெற்று வரும் உமாதேவியே இக் கதையையும் எழுதியதை யறிந்து நானே கட்டு மீறி வியப்புறுகிறேன் என்றால்...நீ...

[என்ன ! என்ன !...உமாதேவி எழுதினாளா... ஹா !...என்ன ஆச்சரியம்...என்று பெரும் ஆவலுடன் சாகரன் மேலே படிக்கலானான்.]

அருமை சாகரா ! இவ்வாறு எழுதியதற்குக் காரணம் என்ன தெரியுமா ! உன்னை அவமானப்படுத்தவோ, அவமதிக்கவோ, கேலி செய்யவோ அல்ல.......உன்மீது கொண்ட தெய்வீகமான—பரிசுத்தமான, உண்மையான—காதலே காரணமாம். இவ் வார்த்தைகள் அந்த மாதரசியின் வாயிலாக வந்த மொழிகளே யாகும்.

அம் மங்கைக்கரசியின் காதலை நீ யறியும் பொருட்டே

கதையின் பெயரையே காதல்! காதல்!! இன்றேல் சாதல்!! சாதல்!!! என்று வரைந்ததாயும் அம் மாதுசிரோமணியே தெரிவித்தாள். இது கேட்டு என்னுள்ளம் பூரித்தது. உன் மனத்தை மாற்றுவதற்குத் தான் உன் வேலைக் காரன் கட்டுகளைக் கொண்டு போகும்போது அவற் றைத் தந்திரமாக வாங்கித் தான் டைப் செய்த கதையை வைத்து அனுப்பியதாகத் தெரிவித்தாள்.

அரிய தோழா! நீ பழய கொள்கைகளுடனேயே இனியும் இருந்து அந்த நங்கையை நிராகரிப்பாயானால், அந்தக் கதையின் முடிவுதான் தன் முடிவும் ஆகும் என்று குறிப்பாகத் தெரிவித்தபோது என் மனம் கரைந்து கண்ணீர் வடிந்துவிட்டது. நீ என்னை உனது ஆத்ம நேயனாக மதித்துப் பிரீதியுடனிருப்பதால் நான் இதை உனக்குத் துணிவுடனும் சுதந்திரத்துடனும் சொல்கின் றேன். நன்றாக யோசித்துப் பதில் தெரிவிக்க வேண்டு கிறேன்.

இங்ஙனம்,
உன் ஆப்த மித்திரன்
சிவானந்தம்."

இந்தக் கடிதத்தைப் படித்ததும் சாகரனுக்குண்டாகிய அபார மான ஆச்சரியத்திற்குக் கரையே இல்லாது போய்விட்டது. "உமா தேவி எழுதிய கதையா...உமாதேவியா என்னைக் காதலிக்கின்றாள். உமாதேவி!...உமாதேவி!!....என்ன விசித்திர சம்பவம்!" ...என்று தனக்குள் எண்ணி பெரிய யோசனையில் ஆழ்ந்துவிட்டான்.

சுகுணபூஷணம்

அற்ப புத்தி ஆபத்தில் புகுத்தும், ஐயப்பாடு அவதி யுறச் செய்யும், பொறுமை என்றும் பெருமை யளிக்கும், பக்ஷபாதம் பழிக்கச் செய்யும், உண்மைக் காதலே நன்மை பயக்கும், உத்தம நெறியே உயர்பெற்றோங்கும் முதலிய விஷயங்கள் அடங்கிய துப்பறியும் நாவல்.

விலை அணா நான்கே.

அதிகாரம் 9

இல்லற இன்பம்—நல்லற வாழ்க்கை

சாகரனின் மனம் சாகரத்தின் அலைகளில் அகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருக்கின்றது. உமாதேவி எழுதி வெளியான கதைகளை மீண்டும் ஒருமுறை படித்தான். தன் பெயரால் வந்த கதையையும் திரும்பப் படித்தான். சிவானந்தத்தின் கடிதத்தையும் மீண்டும் படித்தான். மாறி மாறி இவைகளைப் பார்த்துக்கொண்டு ஏதோ எண்ணமிட்ட வண்ணம் சிறிது நேரம் பித்தன் போல விருந்தான்.

தான் கதையில் படித்த பாஸ்கரனின் முகமும், சுபாஷிணியின் முகமும் கண்கள் முன்பு தோன்றி, காக்ஷி கொடுத்தன. அதற்குப் பக்கத்தில், உமாதேவியைத் தான் பார்க்காவிட்டாலும் ஓர் அழகிய பெண்ணுருவம் தன்னை நோக்கி நகைப்பதுபோன்று தோன்றியது. சிவானந்தம், உமாதேவியைக் கண்டு பேசி, அவள் கருத்தை எழுதி இருப்பதை நினைக்க நினைக்க, இவன் மனத்தில் இவனையறியாத ஓர் ஆனந்த ஊற்று உதயமாயிற்று. உமாதேவியைத் தான் பார்க்க வேண்டுமென்று ஓர் வேட்கை யுண்டாகியது. அன்று முற்றும் அதைப்பற்றியே யோசித்துக்கொண்டிருந்தான்.

மறு தினம் ஆபீஸிலும் வேலைசெய்யத் தோன்றவே இல்லை. வீட்டிற்கு 3 மணிக்கே வந்துவிட்டான். தான் பதில் எழுதாமலிருந்தால், சிவானந்தம் என்ன நினைப்பானோ! உமாதேவியும் என்ன நினைப்பாளோ என்று தோன்றியது. உடனே ஒரு கடிதம் எழுத ஆரம்பித்தான்.

"அன்பு மிக்க சிவானந்தம்!

உன் கடிதத்திலுள்ள விஷயங் கண்டு அளப்பரிய ஆச்சரியமடைந்தேன். இதற்கு என்ன பதில் எழுதுவது என்று தெரியாமல் தவிக்கின்றேன். நண்பா! அந்த உமாதேவியின் திறனைக் கண்டதும் அத்தகையோரைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவல் தலை தூக்கி அபாரமாக எழுந்து தாண்டவமாடுகின்றது. ஆனால், வெட்கமாயுமிருக்கிறது...எனினும் அந்த அம்மாளைப்பற்றி நீ எழுதி

யிருப்பது உண்மையாயிருப்பின், அதைத் தடுத்து முறி யடித்தால் துரோகம் செய்த பாவி யாவேன்.

நண்பா! முதலில் அந்த அம்மாளை நான் எப்போது பார்க்கலாம் என்பதைத் தெரிவி...உன் பந்தயத்தில் நான் தோல்வியுற்றதைத் தாழ்மையுடன் ஒப்புக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
உன் பிரிய
சாகரன்."

என்று எழுதியனுப்பிவிட்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வெகு சந்தோஷத்துடன் சிவானந்தம் அங்கு வந்து சாகரனை மனப்பூர்வமான ப்ரீதியுடன் கட்டித் தழுவி, தடவிக்கொடுத்து, "சாகரா! வருந்தாதே! உலகமே இவ் விதந்தான். எத்தகையோராயினும் மனப்பூர்வமாக விவாகத்தை முற்றிலும் வெறுத்தவர்கள் லக்ஷத்தில் ஒருவர் கிடைப்பதும் அரிது. சிலர் வெறுத்ததாக வேஷமிட்டுக்கொண்டு அடாத காரியத்தை அந்தரங்கமாகச் செய்வார்கள். சிலர், சில நாள் வெறுக்கலாம்; பிறகு இச்சையுண்டாகியபோது இல்வாழ்க்கையில் புகுதலும் உண்டு. ஆதலால் இது புதிதல்ல. சாகரா! இன்றே உமாதேவி யைப் பார்க்க ஓர் சந்தர்ப்பம் இருக்கிறது. அதற்காகத்தான் நான் இப்போதே வந்தேன். இன்று அவர்கள் காலேஜில் ஏதோ விசேஷ மாம். அங்கு பலவிதமான கதம்பக் கேளிக்கைகள் (Variety Entertainment) நடக்கப் போகிறதாம். அதற்கு எவர் வேண்டு மாயினும் பார்க்கச் செல்லலாம். ஆதலால், அங்கேயே சென்று பார்க்கலாம்...பிறகு நடப்பதைப்பற்றி யோசிக்கலாம் எழுந்திரு" என்றான்.

இது கேட்ட சாகரன் "நண்பா! என்னைப் பரிகஸிக்காதே! இத்தனைக்கும் காரணம் நீதான் என்பதில் சந்தேகமில்லை. கதைப் பித்தையும் பரிசு ஆசையையும் கிளப்பிவிட்டாய். அதுதான் இத் தனை தூரத்திற்கு இழுத்துவிட்டது"...என்று கூறிக்கொண்டே சிவானந்தத்துடன் சென்றான்.

காலேஜில் எள்ளு போட்டால் எள்ளு விழாதவாறு கூட்டம் கூடிவிட்டது. சாகரனும் சிவானந்தமும் ஒரு பக்கம் உட்கார்ந் தார்கள். அங்கு நடவடிக்கைகள் ஆரம்பமாயிற்று. முதலில் பல மாணவிகள் ஒன்றுகூடி சிலர் பிடில், சிலர் வீணை, தம்பூரா, புல்

லாங்குழல், சித்தார், தபேலா முதலிய வாத்தியங்களில் ஏக காலத்தில் கந்தர்வ கானம் போல ஆரம்பித்துப் பாடினார்கள்.

இதுபரியந்தம் இம்மாதிரி கந்தர்வ கானத்தையே கேட்டிராத சாகரனுக்கு அதியாச்சரியமும் அத்யாநந்தமும் உண்டாயின. இப் பெண்களைப் பார்த்ததும், இவர்களே மகாத்மா காந்தியின் முன்பு பாடியவர்கள் என்ற நினைவு வந்தது. 'இப்படியும் ஒரு கந்தர்வ கானம் உண்டா!' என்று பிரமித்தான்.

சிவா :—சாகரா! அதோ! மத்தியில் வீணை வைத்துக்கொண்டு வாசிக்கும் மாதுசிரோமணிதான் ஸ்ரீமதி உமாதேவி...என்றதும் சாகரன் அந்த மங்கை மடவன்னத்தையே உற்று நோக்கி மெய் மறந்தான். "இந்த மாதரசியா உமாதேவி!"...என்று தனக்குள் அடக்க முடியாத ஆனந்தமடைந்தான்.

அடுத்தபடி உமாதேவி தனியாக வாய்ப்பாட்டுப் பாடினாள். மூன்றுவதாக அவர்களெல்லோரும் பழங்காலத்துக் கும்மியை விடாமல் சுற்றி வளைந்து கும்மியடித்தார்கள். அதற்குப் பின் ஒரு சிறிய நாடகம் நடந்தது. அதில் சிங்கார ரஸம் ததும்பிற்று. காதலன் வருகைக்காக காதலி எதிர்நோக்கித் தன் மன வேகத்தைக் காட்டும் பாகம் அங்கு வந்திருந்த எல்லோருடைய மனத்தையும் உருக்கியது. பின்னர் பிரஸங்கங்கள் மற்றவை எல்லாம் நடந்து, கொண்டாட்டம் முடிவாயிற்று. கூட்டமும் கலைந்தது.

சிவானந்தமும் சாகரனும் கிளம்பினார்கள்......"சாகரா!... உமாதேவிக்கு என்ன பதில் சொல்லப்போகிறாய்?...உன் மனத்தை ஒளிக்காது வெளியிட்டுவிடு"...என்றான். இதைக் கேட்ட சாகரன் சிறிது விசனத்துடன் "நண்பா! நான் கொண்டிருந்த கொள்கை முற்றும் அசம்பாவிதமானது என்றும், மனிதனுடைய ஆனந்தத்திற்கு முட்டுக்கட்டை போன்றதென்றும் நான் உண்மையாக அறிந்து கொண்டேன். நீ ஆதியில் சொல்லியதெல்லாம் எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது.

பெண்களுடைய சாமர்த்தியமும் அவர்களிடம் இயற்கையாகக் காணக்கூடிய இனிமையும், மிருதுத்தன்மையும், வசீகரமும் இதுகாறும் நான் உணராது ஜடமாயிருந்தேன். வீண் வார்த்தை எதற்கு?...நண்பா! இப்பெண்மணி என்மீது காதல் கொண்டிருப்பது உண்மையாயின், என் ஆப்த மித்திரனாகிய நீயே முன் நின்று விவாகத்தை முடித்துவிடு. இதுதான் பதில். அந்த யுவதியைப்

பாராமலேயே கதையின் மூலம் மாறுதல் அடைந்தேன். இனிமேல் தாமதமே வேண்டாம்'' என்று தன் மனத்தை ஒளியாது கூறி விட்டான்.

சாகரனுடைய உண்மையான மாறுதலைக் கண்டு பரம சந்தோஷமடைந்த சிவானந்தம் "சாகரா! அதிசயத்திலும் அதிசய மான விஷயத்தை நான் உனக்கு இப்போது சொல்லப்போகிறேன். ஆனால் நானும் இதை யறிந்தபோது இப்படித்தான் ஆச்சரியமடைந் தேன். நண்பா! உன்னை நான் அயலானுக்கு மருமகப்பிள்ளையாகக் கொடுத்துவிட மாட்டேன். நானே பிள்ளைவீட்டுக்காரன்; நானே பெண்வீட்டுக்காரன்; எல்லாம் நானே. யார் உமாதேவி தெரியுமா? எனது சகோதரி நித்யானந்தம் தான் அவள்....என்று முடிப்ப தற்குள்,

சாகரன் கட்டுமீறிய ஆவலுடன் "என்ன! என்ன! உமாதேவி உன் சகோதரியா!...உன் சகோதரியா உமா...நண்பா!...பரிகஸிக் காதே!...உண்மையைக் கூறு. வீணாக என் ஆவலைக் கிளப்பாதே!'' என்று அவன் கையைப் பிடித்துக்கொண்டு கேட்டான்.

சிவா:—(நகைத்துக்கொண்டே)...நண்பா! உன்னை நான் பரிக ஸிக்கவில்லை. என் சகோதரிதான் உமா என்று நேற்றுவரையில் எனக்கே தெரியாது. நேற்றுதான் விவரம் தெரிந்தது (நடந்ததைக் கூறி) நண்பா! இரவு பகல் உன் தியானமாகவே இருக்கும் உமாவை இனியும் கலங்க வைக்கவேண்டாம். விரைவிலேயே விவாகத்தை முடித்துவிடலாம்...

சாகரனுக்கு உண்டான சந்தோஷத்திற்கும் ஆச்சரியத்திற்கும் அளவே இல்லை. உடனே உமாவைத் தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்துவிட வேண்டுமென்ற பேராவல் உண்டாகிவிட்டது. அதிர்ஷ்டவசமாக அதிக நாட்கள் தாமதமின்றி, ஒரு வாரத்திற்குள் அதிக ஆடம்பரமின்றியும் வெகு அழகாயும் சிறப்பாயும் நல்லதொரு முகூர்த்தத்தில் விவாகம் நடந்தேறியது. தம்பதிகளின் ஆனந்தகர மான இல்வாழ்க்கையின் தனித்த இன்பத்தைக் கூறவேண்டுமா?

காதலர்கள் இருவரும் போட்டா போட்டியாக ஒருவரைவிட ஒருவர் திறமையுடன் கதைப்போட்டிக்கு எழுதும் பந்தயம் வலுத்து விட்டது. இரண்டு வருடத்திற்குள்ளேயே இவர்கள் எதேச்சையாக உட்கார்ந்து எழுதவிடாமல் ஒரு வயதுச் செல்வன் குறுக்கிட்டு மேலே விழுந்து கட்டிக்கொள்வதும், பேனாவைப் பிடுங்கிக்கொள்

வதும், காகிதத்தைப் பிடித்து இழுப்பதும், முகத்தைத் தடவி முத்தம் இடுவதும், மழலை மொழிந்து சத்தமிடுவதுமாக வாரம்பித்து விட்டான்.

சில வருடங்களுக்குள் தங்கள் பெயரையே ஆதாரமாகக் கொண்டு, "ஆனந்தசாகரம்" என்கிற அழகிய பெயருடன் முதன் முதலாக சிறு கதைகள் அடங்கிய வாரப் பதிப்பு ஒன்று ஆரம்பித்து, அதை வெகு சிறப்பாக நடத்திக்கொண்டு பெயரும் புகழும் கீர்த்தியும் பெற்று நித்யானந்தத்தில் திளைந்து வருகிறார்கள். உலகில், எழுதுவதிலுள்ள ஆனந்தத்தைவிட மனத்திற்கு உற்சாகம் அளிக்கக் கூடிய வேறு மனோகரமான வேலை உள்ளதா?

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

முற்றிற்று.

“ஜகன்மோகினி” பிரஸ், திருவல்லிக்கேணி. (௧௧௯௫)

1938-வது வருஷத்திய நவீனங்கள்

1 உளுத்த இதயம்—அணு 4.

இதைப் படிக்கும்போது உங்கள் இதயமும், மனமும், கண்களும் உங்கள் கட்டுக்கடங்கா வென்பது திண்ணம். தான் செய்த குற்றத்துக்காக வருந்துவதே மனிதத்தன்மை என்பதைப் போதிக்கும் அரிய நவீனம்.

2 வானக்குயில்—ரூ. 1-4-0.

ஒவ்வொரு வரியிலும் உங்களைப் பரவசமுறச் செய்யும் புதிய நாவல். நூதன முறையில் ஸீன்வாரியாக எழுதப்பட்டிருப்பதால், படிக்கும்போதே நம் கண்முன் படமாகப் பார்ப்பதுபோன்று உணர்ச்சியும் ஆனந்தமும் உண்டாக்கும்; நவரஸம் ததும்பும் சிறந்த இயற்கைச் சித்திரம். இரண்டாம் பதிப்பு.

3 மகிழ்ச்சி உதயம்—அணு 10.

'உளுத்த இதயத்'தின் தொடர் நாவல் இது. இருளுக்குப்பின் ஒளி; துக்கத்துக்குப்பின் சுகம்; இது உலக இயற்கை. தான் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்வதே மேலானது என்பதை நிரூபிக்கும் அற்புதமான கதை. ஹரிஜன சேவைக்கு நல்ல வழி காட்டியாக உள்ள அநுபவ பொக்கிஷம். புதிய பதிப்பு வெளி வந்துவிட்டது.

4 ஜீவியச் சுழல்—ரூ. 1-4-0.

சேற்றில் செந்தாமரை முளைத்ததைப்போல, தாஸி குலத்தில் பிறந்த நிர்மலா அந்தக் குலத்திலுள்ள அழுக்கை ஒழிக்க எப்படி கங்கணங் கட்டிக் கொண்டு சீர்திருத்துகிறாள் என்பதைப் படிக்கப் படிக்க இன்பந்தரும் வண்ணம் எழுதப்பட்டுள்ள உயரிய சமூக நாவல்.

5 மாலதி—அணு 8.

அணைகடந்த அன்பு வெள்ளம், மாத்ரு பக்தி, குடும்ப பாரம், உடன் பிறந்த பாசம், சுயநலத் தியாகம் முதலிய அதியற்புதமான ரஸங்கள் ஒருங்கே ததும்பும் மகோன்னதமான கற்பனைக் களஞ்சியம்.

6 வத்ஸகுமார்—அணு 8.

படிக்குந்தோறும் உங்களை முற்றிலும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்துச் சந்தோஷத்தை யளிக்கக் கூடிய ஹாஸ்ய ரஸப் பிரதானத்துடன், பல அருமையான விஷயங்களைக் கொண்ட புதிய நவீனம்.

மேற்கூறிய ஒவ்வொரு நவீனமும்,

மனதுக்கு ஆனந்தம்; பொழுதுபோக்கிற்குப் பெருந்துணை;
கைக்குப் பூஷணம்; காண்பதற்கு அழகுதருவன வாகும்.

நம் "மோகினி" பிரசுரங்களில்

4 டாக்கி நாவல்கள்!

இவைகளை நீங்கள் இன்னும் படித்திராவிடில்,
உடனே தருவித்துப் படித்து இன்புறுங்கள்.

பிறகு படத்தைக் கண்டு களியுங்கள்.

ராஜமோஹன்—ரூ. 1—4

நீங்கள் வெகு நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இரண்டாம் பதிப்பு தயாராகி விட்டது. 'பணமா, குணமா? அந்தஸ்தா, அன்பா? தாயின் சேவையா அல்லது தன் சுகவாசமா?'...இவை போன்ற பல கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் அற்புதமான கதை.

அனாதைப் பெண்—ரூ 1—4

மனத்தை யுருக்கிக் கண்ணீரைப் பெருக்கச் செய்யும் பலவித சம்பவங்கள் நிறைந்த மகத்தான நாவல். புதிய இரண்டாம் பதிப்பு. 36 அழகிய டாக்கீ ஆப்டோன் படங்களுடன் வெளிவந்து விட்டது.

நளினசேகரன்—அணா 8

செருக்காலழிந்த சீமாட்டி ஒருத்தியின் வாழ்க்கையையும், அடியார்க்கு அடியவனும், மிடிதீர்க்கும் மித்திரனுமான ஒருவனின் அபூர்வ ஜீவியத்தையும் சித்திரிக்கும் சமூக சீர்திருத்த தேசீய நாவல். 'கலிகால தெய்வம் கண்மூடியல்ல; தன்வினை தன்னைச் சுடும்; இல்லற வாழ்வே நல்லறமாகும்' என்னும் உண்மைகளை நிரூபிக்கும் கதை. இரண்டாம் பதிப்பு வெளிவந்து விட்டது.

தியாகக்கொடி—ரூ. 2

சம நிலைத் தொண்டின் உயர்வையும், தியாக புத்தியையும் புகட்டும் நவீனம். இரண்டாம் பதிப்பு. எப்பேர்ப்பட்டவரும் பிரமிக்கும் துப்பறிதல்......மிகச் சிறந்ததென எல்லோராலும் கொண்டாடப்பட்ட கதைப் போக்கையுடையது.

13-வது ஆண்டு	ஆரம்பம்	ஜனவரி 1936

"ஜகன்மோகினி" யில்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2- OCT 1940
MADRAS

இன்பஜோதி

அல்லது

பிள்ளை வீட்டாரின் கொள்ளை

என்னும்

அதியற்புதமான நாவல்

வெளியாகின்றது.

வருஷ சந்தா ரூ. 1—8	ஜீவிய சந்தா ரூ. 25.	தனிப் பிரதி அணா. 2

"ஜகன்மோகினி" ஆபீஸ்

திருவல்லிக்கேணி, சென்னை